ஆறாவது

மதுரைக்காஞ்சி.

ஓங்குதிரை வியன்பரப்பி
னொலிமுந்நீர் வரம்பாகத்
தேன்றூங்கு முயர்சிமய
மலைநாறிய வியன்ஞாலத்து
வலமாதிரத்தான் வளிகொட்ப
வியனாண்மீ னெறியொழுகப்
பகற்செய்யுஞ் செஞ்ஞாயிறு
மிரவுச்செய்யும் வெண்டிங்களு
மைதீர்ந்து கிளர்ந்துவிளங்க
மழைதொழி லுதவ மாதிரங் கொழுக்கத்
தொடுப்பி னாயிரம் வித்தியது விளைய
நிலனு மரனும் பயனெதிர்பு நந்த
நோயிகந்து நோக்குவிளங்க
மேதக மிகப்பொலிந்த
வோங்குநிலை வயக்களிறு
கண்டுதண்டாக் கட்கின்பத்
துண்டுதண்டா மிகுவளத்தா
னுயர் *பூரிம விழுத்தெருவிற்
பொய்யறியா வாய்மொழியாற்
புகழ்நிறைந்த நன்மாந்தரொடு
நல்லூழி யடிப்படரப்
பல்வெள்ள மீக்கூற
வுலக மாண்ட வுயர்ந்தோர் மருக
பிணக்கோட்ட களிற்றுக்குழும்பி
னிணம்வாய்ப்பெய்த பேய்மகளி
ரிணையொலியிமிழ் துணங்கைச்சீர்ப்
பிணையூப மெழுந்தாட
வஞ்சுவந்த போர்க்களத்தா
னாண்டலை யணங்கடுப்பின்

---

* பூரியவிழுத்தெருவென்றும்பாடம்.

வயவேந்த ரொண்குருதி
சினத்தீயிற் பெயர்புபொங்கத்
தெறலருங் கடுந்துப்பின்
விறல்விளங்கிய விழுச்சூர்ப்பிற்
றொடித்தோட்கை துடுப்பாக
வாடுற்ற வூன்சோறு
நெறியறிந்த கடிவாலுவ
னடியொதுங்கிப் பிற்பெயராப்
படையோர்க்கு முருகயர
வமர்கடக்கும் வியன்றானைத்
தென்னவற் பெயரிய துன்னருந் துப்பிற்
றொன்முது கடவுட் பின்னர் மேய
வரைத்தா ழருவிப் பொருப்பிற் பொருந
விழுச்சூழிய விளங்கோடைய
கடுஞ்சினத்த கமழ்கடாஅத்
தளறுபட்ட நறுஞ்சென்னிய
வரைமருளு முயர்தோன்றல
வினைநவின்ற பேர்யானை
சினஞ்சிறந்து களனுழக்கவு
மாவெடுத்த மலிகுரூஉத்துக
ளகல்வானத்து வெயில்கரப்பவும்
வாம்பரிய கடுந்திண்டேர்
காற்றென்னக் கடிதுகொட்பவும்
வாண்மிகு மறமைந்தர்
தோண்முறையான் வீறுமுற்றவு
மிருபெரு வேந்தரொடு வேளிர் சாயப்
பொருதவரைச் செருவென்று
மிலங்கருவிய வரைநீந்திச்
சுரம்போழ்ந்த விகலாற்ற
லுயர்ந்தோங்கிய விழுச்சிறப்பி
னிலந்தந்த பேருதவிப்
பொலந்தார் மார்பி னெடியோ னும்பன்
மரந்தின் னூஉ வரையுதிர்க்கு
நரையுருமி னேறனையை
யருங்குழுமிளைக் குண்டுகிடங்கி
னுயர்ந்தோங்கிய நிரைப்புதவி
னெடுமதி னிரைஞாயி

லம்புமி ழுயிலருப்பத்
தண்டாது தலைச்சென்று
கொண்டுநீங்கிய விழுச்சிறப்பிற்
றென்குமரி வடபெருங்கல்
குணகுடகட லாவெல்லைத்
தொன்றுமொழிந்து தொழில்கேட்ப
வெற்றமொடு வெறுத்தொழுகிய
கொற்றவர்தங் கோனாகுவை
வானியைந்த விருமுந்நீர்ப்
பேஎநிலைஇய விரும்பௌவத்துக்
கொடும்புணரி விலங்குபோழக்
கடுங்காலொடு கரைசேர
நெடுங்கொடி மிசையிதையெடுத்
தின்னிசைய முரசமுழங்கப்
பொன்மலிந்த விழுப்பண்ட
நாடார நன்கிழிதரு
மாடியற் பெருநாவாய்
மழைமுற்றிய மலைபுரையத்
துறைமுற்றிய துளங்கிருக்கைத்
தெண்கடற் குண்டகழிச்
சீர்சான்ற வுயர்நெல்லி
னூர்கொண்ட வுயர்கொற்றவ
நீர்த்தெவ்வு நிரைத்தொழுவர்
பாடுசிலம்பு மிசையேற்றத்
தோடுவழங்கு மகலாம்பியிற்
கயமகைய வயணிறைக்கு
மென்றொடை வன்கிழாஅ
ரதரி கொள்பவர் பகடுபூண் டெண்மணி
யிரும்பு ளோப்பு மிசையே யென்று
மணிப்பூ முண்டகத்து மணன்மலி கானற்
பாதவர் மகளிர் குரவையொ டொலிப்ப
ஒருசார், விழவுநின்ற வியலாங்கண்
முழவுத்தோண் முரட்பொருநர்க்
குருகெழு பெருஞ்சிறப்பி
னிருபெயர்ப் பேராயமொ
டிலங்கு மருப்பிற் களிறு கொடுத்தும்
பொலந்தாமரைப் பூச்சூட்டியு

நலஞ்சான்ற கலஞ்சிதறும்
பல்குட்டுவர் வெல்கோவே
கல்காயுங் கடுவேனிலொ
டிருவானம் பெயலொளிப்பினும்
வரும்வைகன் மீன்பிறழினும்
வெள்ளமா றாது விளையுள் பெருக
நெல்லி னோதை யரிநர் கம்பலை
புள்ளிமிழ்ந் தொலிக்கு மிசையே யென்றுஞ்
சலம்புகன்று சுறவுக்கலித்த
புலவுநீர் வியன்பௌவத்து
நிலவுக் கானன் முழவுத் தாழைக்
*குளிர்ப்பொதும்பர் நளித்தூவ
னிறைதிமில் வேட்டுவர் கரைசேர் கம்பலை
யிருங்கழிச் செறுவின் வெள்ளுப்புப் பகர்நரொ
டொலியோவாக் கலியாணர்
முதுவெள்ளிலை மீக்கூறும்
வியன்மேவல் விழுச்செல்வத்
திருவகையா னிசைசான்ற
சிறுகுடிப் பெருந்தொழுவர்
குடிகெழீஇய நானிலவரொடு
தொன்றுமொழிந்து தொழில்கேட்பக்
காலென்னக் கடிதுராஅய்
நாடுகெட வெரிபரப்பி
யாலங்கானத் தஞ்சுவரவிறுத்
தரசுபட வமருழக்கி
முரசுகொண்டு களம்வேட்ட
வடுதிறலுயர் புகழ்வேந்தே
நட்டவர் குடியுயர்க்குவை
செற்றவ ரரசுபெயர்க்குவை
பேருலகத்து மேஎந்தோன்றிச்
சீருடைய விழுச்சிறப்பின்
விளைந்துமுதிர்ந்த விழுமுத்தி
னிலங்குவளை யிருஞ்சேரிக்
கட்கொண்டிக் குடிப்பாக்கத்து
நற்கொற்கையோர் நசைப்பொருந
செற்ற தெவ்வர் கலங்கத் தலைச்சென்

* குளிர்ப்பொதும்பென்றும்பாடம்.

றஞ்சுவரத் தட்கு மணங்குடைத் துப்பிற்
கோழூஉன்குறைக் கொழுவல்சிப்
புலவுவிற் பொலிகூவை
யொன்றுமொழி யொலியிருப்பிற்
றென்பரதவர் போரேறே
யரிய வெல்லா மெளிதி னிற்கொண்
டரிய வெல்லா மோம்பாது வீசி
நனிபுகன் றுறைது மென்னாதேற் றெழுந்து
பனிவார் சிமயக் கானம் போகி
யகநாடு புக்கவ ரருப்பம் வௌவி
யாண்டுபல கழிய வேண்டுபுலத் திறுத்து
மேம்பட மரீஇய வெல்போர்க் குரிசி
லுறுசெறுநர் புலம்புக்கவர்
கடிகாவி னிலைதொலைச்சி
யிழிபறியாப் பெருந்தண்பணை
குரூஉக்கொடிய வெரிமேய
நாடெனும்பேர் காடாக
வாசேந்தவழி மாசேப்ப
வூரிருந்தவழி பாழாக
விலங்குவளை மடமங்கையர்
துணங்கையஞ்சீர்த் தழூஉமறப்ப
வவையிருந்த பெரும்பொதியிற்
கவையடிக் கடுநோக்கத்துப்
பேய்மகளிர் பெயர்பாட
வணங்குவழங்கு மகலாங்க
ணிலத்தாற்றுங் குழூஉப்புதவி
னரந்தைப் பெண்டி ரினைந்தன ரகவக்
கொழும்பதிய குடிதேம்பிச்
செழுங்கேளிர் நிழல்சேர
நெடுநகர் வீழ்ந்த கரிகுதிர்ப் பள்ளிக்
குடுமிக் கூகை குராலொடு முரலக்
கழுநீர் பொலிந்த கண்ணகன் பொய்கைக்
களிறுமாய் செருந்தியொடு சண்பமன் றூர்தர
நல்லேர் நடந்த நசைசால் விளைவயற்
பன்மயிர்ப் பிணவொடு கேழ லுகள
வாஅ ழாமையின் வழிதவக் கெட்டுப்
பாழா யினநின் பகைவர் தேஎ

மெழாஅத்தோ ளிமிழ்முழக்கின்
மாஅத்தா ளுயர்மருப்பிற்
கடுஞ்சினத்த களிறுபரப்பி
விரிகடல் வியன்றானையொடு
முருகுற ழத்தலைச்சென்
றகல்விசும்பி னார்ப்பிமிழப்
பெயலுறழக் கணைசிதறிப்
பலபுரவி நீறுகைப்ப
வளைநால வயிரார்ப்பப்
பீடழியக் கடந்தட்டவர்
நாடுகெட வெயில்வெளவிச்
சுற்றமொடு தூவறுத்தலிற்
செற்ற தெவ்வர் நின்வழி நடப்ப
வியன்கண் முதுபொழின் மண்டில முற்றி
யரசியல் பிழையா தறநெறி காட்டிப்
பெரியோர் சென்ற வடிவழிப் பிழையாது
குடமுதற் றோன்றிய தொன்றுதொழு பிறையின்
வழிவழிச் சிறக்கநின் வலம்படு கொற்றங்
குணமுதற் றோன்றிய வாரிருண் மதியிற்
றேய்வன கெடுகநின் றெவ்வ ராக்க
முயர்நிலை யுலக மமிழ்தொடு பெறினும்
பொய்சே ணீங்கிய வாய்நட் பினையே
முழங்குகட லேணி மலர்தலை யுலகமொ
டுயர்ந்த தேஎத்து விழுமியோர் வரினும்
பகைவர்க் கஞ்சிப் பணிந்தொழு கலையே
தென்புல மருங்கின் விண்டு நிறைய
வாணன் வைத்த விழுநிதி பெறினும்
*பழிநமக் கொழுக வென்னாய் விழுநிதி
யீத லுள்ளமொ டிசைவேட் குவையே
யன்னாய் நின்னொடு முன்னிலை யெவனோ
கொன்னொன்று கிளக்குவ னடுபோ ரண்ணல்
கேட்டிசின் வாழி கெடுகநின் னவலங்
கெடாது நிலைஇயர்நின் சேண்விளங்கு நல்லிசை
தவாப்பெருக்கத் தறாயாண
ரழித்தானாக் கொழுந்திற்றி
யிழித்தானாப் பலசொன்றி

* பழிநமக்கெழுக வென்றும்பாடம்.

யுண்டானாக் கூர்நறவிற்
றின்றானா வினவைக
னிலனெடுக் கல்லா வொண்பல் வெறுக்கைப்
பயனற வறியா வளங்கெழு திருநகர்
நரம்பின் முரலு நயம்வரு முரற்சி
விறலியர் வறுங்கைக் குறுந்தொடி செறிப்பப்
பாண ருவப்பக் களிறு பலதரீஇக்
கலந்தோ ருவப்ப வெயிற்பல கடைஇ
மறங்கலங்கத் தலைச்சென்று
வாளுழந்ததன் றாள்வாழ்த்தி
நாளீண்டிய நல்லகவர்க்குத்
தேரோடு மாசிதறிச்
சூடுற்ற சுடர்ப்பூவின்
பாடுபுலர்ந்த நறுஞ்சாந்தின்
விழுமிய பெரியோர் சுற்ற மாகக்
கள்ளி னிரும்பைக் கலஞ்செல வுண்டு
பணிந்தோர் தேஎந் தம்வழி நடப்பப்
பணியார் தேஎம் பணித்துத்திறை கொண்மார்
பருந்துபறக் கல்லாப் பார்வற் பாசறைப்
படுகண் முரசங் காலை யியம்ப
வெடிபடக் கடந்து வேண்டுபுலத் திறுத்த
பணைகெழு பெருந்திறற் பல்வேன் மன்னர்
கரைபொரு திரங்குங் கனையிரு முந்நீர்த்
திரையிடு மணலினும் பலரே யுரைசெல
மலர்தலை யுலக மாண்டுகழிந் தோரே
அதனால், குணகடல் கொண்டு குடகடன் முற்றி
யிரவு மெல்லையும் விளிவிட னறியா
தவலு மிசையு நீர்த்திரள் பீண்டிக்
கவலையங் குழும்பி னருவி யொலிப்பக்
கழைவளர் சாரற் களிற்றின நடுங்க
வரைமுத விரங்கு மேறொடு வான்ஞெமிர்ந்து
சிதாற் பெரும்பெயல் சிறத்தலிற் றாங்காது
குணகடற் கிவர்தருங் குரூஉப்புன லுந்தி
நிவந்துசென் னீத்தங் குளங்கொளச் சாற்றிக்
களிறுமாய்க்குங் கதிர்க்கழனி
யொளிறிலஞ்சி யடைநிவந்த
முட்டாள சுடர்த்தாமரை

கட்கமழு நறுநெய்தல்
வள்ளித ழவிழ்நீல
மெல்லிலை யரியாம்பலொடு
வண்டிறை கொண்ட கமழ்பூம் பொய்கைக்
கம்புட் சேவ லின்றுயி லிரிய
வள்ளை நீக்கி வயமீன் முகந்து
கொள்ளை சாற்றிய கொடுமுடி வலைஞர்
வேழப் பழனத்து நூழி லாட்டுக்
கரும்பி னெந்திரங் கட்பி னோதை
யள்ளற் றங்கிய பகடுறு விழுமங்
கள்ளார் களமர் பெயர்க்கு மார்ப்பே
யொலிந்த பகன்றை விளைந்த கழனி
வன்கை வினைஞ ரரிப்பறை யின்குரற்
றளிமழை பொழியுந் தண்பரங் குன்றிற்
கலிகொள் சும்மை யொலிகொ ளாயந்
ததைந்த கோதை தாரொடு பொலியப்
புணர்ந்துட னாடு மிசையே யனைத்து
மகலிரு வானத் திமிழ்ந்தினி திசைப்பக்
குருகுநரல மனைமரத்தான்
மீன்சீவும் பாண்சேரியொடு
மருதஞ் சான்ற தண்பணை சுற்றி யொருசார்
சிறுதினை கொய்யக் கவ்வை கறுப்பக்
கருங்கால் வரகி னிருங்குரல் புலர
வாழ்ந்த குழும்பிற் றிருமணி கிளர
வெழுந்த கடற்றி னன்பொன் கொழிப்பப்
பெருங்கவின் பெற்ற சிறுதலை நெளவி
மடக்கட் பிணையொடு மறுகுவன வுகளச்
சுடர்ப்பூங் கொன்றை தாஅய நீழல்
பாஅ யன்ன பாறை யணிந்து
நீலத் தன்ன பைம்பயிர் மிசைதொறும்
வெள்ளி யன்ன வொள்வீ யுதிர்ந்து
சுரிமுகிழ் முசுண்டையொடு முல்லை தாஅய்
மணிமரு ணெய்த லுறழக் காமர்
துணிநீர் மெல்லவற் றொய்யிலொடு மலர
வல்லோன் றைஇய வெறிக்களங் கடுப்ப
முல்லை சான்ற புறவணிந் தொருசார்
நறுங்காழ் கொன்று கோட்டின் வித்திய

குறுங்கதிர்த் தோரை நெடுங்கா லையவி
யைவன வெண்ணெலொ டரில்கொள்பு நீடி
யிஞ்சி மஞ்சட் பைங்கறி பிறவும்
பல்வேறு தாரமொடு கல்லகத் தீண்டித்
தினைவிளை சாரற் கிளிகடி பூசன்
மணிப்பூ வவரைக் குரூஉத்தளிர் மேயு
மாமா கடியுங் கானவர் பூசல்
சேணோ னகழ்ந்த மடிவாய்ப் பயம்பின்
வீழ்முகக் கேழ லட்ட பூசல்
கருங்கால் வேங்கை யிருஞ்சினைப் பொங்கர்
நறும்பூக் கொய்யும் பூச * லிருங்கே
ழேறடு வயப்புலிப் பூசலொ டனைத்து
மிலங்குவெள் ளருவியொடு சிலம்பகத் திரட்டக்
கருங்காற் குறிஞ்சி சான்ற வெற்பணிந்
தருங்கடி மாமலை தழீஇ யொருசா
ரிருவெதிர்ப் பைந்தூறு கூரெரி நைப்ப
நிழத்த யானை மேய்புலம் படரக்
கலித்த வியவ ரியந்தொட் டன்ன
கண்விடு புடையூஉத் தட்டை கவினழிந்
தருவி யான்ற வணியின் மாமலை
வைகண் டன்ன புன்முளி யங்காட்டுக்
கமஞ்சூழ் கோடை விடரக முகந்து
காலுறு கடலி னொலிக்குஞ் சும்மை
யிலைவேய் குரம்பை யுழையதட் பள்ளி
யுவலைக் கண்ணி வன்சொ லிளைஞர்
சிலையுடைக் கையர் கவலை காப்ப
நிழலுரு விழந்த வேனிற் குன்றத்துப்
பாலை சான்ற சுரஞ்சேர்ந் தொருசார்
முழங்குகட றந்த விளங்குகதிர் முத்த
மரம்போழ்ந் தறுத்த கண்ணே ரிலங்குவளைப்
பரதர் தந்த பல்வேறு கூல
மிருங்கழிச் செறுவிற் றீம்புளி வெள்ளுப்புப்
பரந்தோங்கு வரைப்பின் வன்கைத் திமிலர்
கொழுமீன் குறைஇய துடிக்கட் டுணியல்
விழுமிய நாவாய் பெருநீ ரோச்சுநர்
நனந்தலைத் தேஎத்து நன்கல னுய்ம்மார்

* இருங்கேழலேறென்றும்பாடம்.

புணர்ந்துடன் கொணர்ந்த புரவியொ டனைத்தும்
வைக றோறும் வழிவழிச் சிறப்ப
நெய்தல் சான்ற வளம்பல பயின்றாங்
கைம்பாற் றிணையுங் கவினி யமைவர
முழவிமிழ் மகலாங்கண்
விழவுநின்ற வியன்மறுகிற்
றுணங்கையந் தழூஉவின் மணங்கமழ் சேரி
யின்களி யாணர்க் குழூஉப்பல பயின்றாங்குப்
பாடல் சான்ற நன்னாட்டு நடுவட்
கலைதாய வுயர்சிமையத்து
மயிலகவு மலிபொங்கர்
மந்தி யாட மாவிசும் புகந்து
முழங்குகால் பொருத மரம்பயில் காவி
னியங்குபுனல் கொழித்த வெண்டலைக் குவவுமணற்
கான்பொழி றழீஇய வடைகரை தோறுந்
தாதுசூழ் கோங்கின் பூமலர் தாஅய்க்
கோதையி னொழுகும் விரிநீர் நல்வர
லவிரறல் வையைத் துறைதுறை தோறும்
பல்வேறு பூத்திரட் டண்டலை சுற்றி
யழுந்துபட் டிருந்த பெரும்பா ணிருக்கையு
நிலனும் வளனுங் கண்டமை கல்லா
விளங்குபெருந் திருவின் * வான விறல்வே
ளழும்பி லன்ன நாடிழந் தனருங்
கொழும்பல் பதிய குடியிழந் தனருந்
தொன்றுகறுத் துறையுந் துப்புத்தர வந்த
வண்ணல் யானை யடுபோர் வேந்த
ரின்னிசை முரச மிடைப்புலத் தொழியப்
பன்மா றோட்டிப் பெயர்புறம் பெற்று
மண்ணுற வாழ்ந்த மணிநீர்க் கிடங்கின்
விண்ணுற வோங்கிய பல்படைப் புரிசைத்
தொல்வலி நிலைஇய வணங்குடை நெடுநிலை
நெய்படக் கரிந்த திண்போர்க் கதவின்
மழையாடு மலையி னிவந்த மாடமொடு
வையை யன்ன வழக்குடை வாயில்
வகைபெற வெழுந்து வான மூழ்கிச்

* மானவிறல் வேளென்றும்பாடம்.

*சில்காற் றிசைக்கும் பல்புழை நல்லில்
யாறுகிடந் தன்ன வகனெடுந் தெருவிற்
பல்வேறு குழாஅத் திசையெழுந் தொலிப்ப
மாகா லெடுத்த முந்நீர் போல
முழங்கிசை நன்பணை யறைவனர் நுவலக்
கயங்குடைந் தன்ன வியந்தொட் டிமிழிசை
மகிழ்ந்தோ ராடுங் கலிகொள் சும்மை
யோவுக்கண் டன்ன விருபெரு நியமத்துச்
சாறயர்ந் தெடுத்த வுருவப் பல்கொடி
வேறுபல் பெயர வாரெயில் கொளக்கொள
நாடோ றெடுத்த நலம்பெறு புனைகொடி
நீரொலித் தன்ன நிலவுவேற் றானையொடு
புலவுப்படக் கொன்று மிடைதோ லோட்டிப்
புகழ்செய் தெடுத்த விறல்சா னன்கொடி
கள்ளின் களிநவில் கொடியொடு நன்பல
பல்வேறு குழூஉக்கொடி பதாகை நிலைஇப்
பெருவரை மருங்கி னருவியி னுடங்கப்
பனிமீன் வழங்கும் வளைமேய் பரப்பின்
வீங்கு நோன்கயி றரீஇயிதை புடையூக்
கூம்புமுதன் முருங்க வெற்றிக் காய்ந்துடன்
கடுங்காற் றெடுப்பக் கல்பொரு துரைஇ
நெடுஞ்சுழிப் பட்ட நாவாய் போல
விருதலைப் பணில மார்ப்பச் சினஞ்சிறந்து
கோலோர்க் கொன்று மேலோர் வீசி
மென்பிணி வன்றொடர் பேணாது காழ்சாய்த்துக்
கந்துநீத் துழிதருங் கடாஅ யானையு
மங்கண்மால் விசும்பு புதைய வளிபோழ்ந்
தொண்கதிர் ஞாயிற் றூறளவாத் திரிதருஞ்
செங்கா லன்னத்துச் சேவ லன்ன
குரூஉமயிர்ப் புரவி யுராலிற் பரிநிமிர்ந்து
காலெனக் கடுக்குங் கவின்பெறு தேருங்
கொண்ட கோலன் கொள்கை நவிற்றவி
னடிபடு மண்டிலத் தாதிபோகிய
கொடிபடு சுவல விடுமயிர்ப் புரவியும்
வேழத் தன்ன வெருவரு செலவிற்
கள்ளார் களம ரிருஞ்செரு மயக்கமு :

* சில்காற் றசைக்குமெனவும் பாடம்.

மரியவும் பெரியவும் வருவன பெயர்தலிற்
றீம்புழல் வல்சிக் கழற்கான் மழவர்
பூந்தலை முழவி னொன்றலை கடுப்பப்
பிடகைப் பெய்த கமழ்நறும் பூவினர்
பல்வகை விரித்த வெதிர்பூங் கோதையர்
பலர்தொகு பிடித்த தாதுகு சுண்ணத்தர்
தகைசெய் தீஞ்சேற் றின்னீர்ப் பசுங்காய்
நீடுகொடி யிலையினர் கோடுசுடு நூற்றின
ரிருதலை வந்த பகைமுனை கடுப்ப
வின்னுயி ரஞ்சி யின்னா வெய்துயிர்த்
தேங்குவன ரிருந்தவை நீங்கிய பின்றைப்
பல்வேறு பண்ணியந் தழீஇத்திரி விலைஞா
மலைபுரை மாடத்துக் கொழுநிழ லிருத்தர
விருங்கடல் வான்கோடு புரைய வாருற்றுப்
பெரும்பின் னிட்ட வானரைக் கூந்தலர்
நன்னர் நலத்தர் தொன்முது பெண்டிர்
செந்நீர்ப் பசும்பொன் புனைந்த பாவை
செல்சுடர்ப் பசுவெயிற் றோன்றி யன்ன
செய்யர் செயிர்த்த நோக்கினர் மடக்க
ணையிய கலுழு மாமையர் வையெயிற்று
வார்ந்த வாயர் வணங்கிறைப் பணைத்தோட்
சோர்ந்துகு வன்ன வயக்குறு வந்திகைத்
தொய்யில் பொறித்த சுணங்கெதி ரிளமுலை
மையுக் கன்ன மொய்யிருங் கூந்தன்
மயிலிய லோரு மடமொழி யோருங்
*கைஇ மெல்லிதி னொதுங்கிக் கையெறிந்து
கல்லா மாந்தரொடு நகுவனர் திளைப்பப்
புடையமை பொலிந்த வகையமை செப்பிற்
காம ருருவிற் றம்வேண்டு பண்ணியங்
கமழ்நறும் பூவொடு மனைமனை மறுக
மழைகொளக் குறையாது புனல்புக மிகாது
கரைபொரு திரங்கு முந்நீர் போலக்
கொளக்கொளக் குறையாது தரத்தர மிகாது
கழுநீர் கொண்ட வெழுநா ளந்தி
யாடுதுவன்று விழவி னாடார்த் தன்றே
மாடம் பிறங்கிய மலிபுகழ்க் கூட

---

* தைஇயென்றும்பாடம்.

னாளங் காடி நனந்தலைக் கம்பலை
வெயிற்கதிர் மழுங்கிய படர்கூர் ஞாயிற்றுச்
செக்க ரன்ன சிவந்துநுணங் குருவிற்
கண்பொரு புகூஉ மொண்பூங் கலிங்கம்
பொன்புனை வாளொடு பொலியக் கட்டித்
திண்டேர்ப் பிரம்பிற் புரளுந் தானைக்
கச்சந் தின்ற கழறயங்கு திருந்தடி
மொய்ம்பிறந்து திரிதரு மொருபெருந் தெரியன்
மணிதொடர்ந் தன்ன வொண்பூங் கோதை
யணிகிளர் மார்பி னாரமொ டளைஇக்
காலியக் கன்ன கதழ்பரி கடைஇக்
காலோர் காப்பக் காலெனக் கழியும்
வான வண்கை வளங்கெழு செல்வர்
நாண்மகி ழிருக்கை காண்மார் பூணொடு
தெள்ளரிப் பொற்சிலம் பொலிப்ப வொள்ளழற்
றுவற விளங்கிய வாய்பொ னவிரிழை
யணங்குவீழ் வன்ன பூந்தொடி மகளிர்
மணங்கமழ் நாற்றந் தெருவுடன் கமழ
வொண்குழை திகழு மொளிகெழு திருமுகந்
திண்கா ழேற்ற வியலிரு விலோதந்
தெண்கடற் றிரையி னசைவளி புடைப்ப
நிரைநிலை மாடத் தரமியந் தோறு
மழைமாய் மதியிற் றோன்றுபு மறைய
நீரு நிலனுந் தீயும் வளியு
மாக விசும்போ டைந்துட னியற்றிய
மழுவா ணெடியோன் றலைவ னாக
மாசற விளங்கிய யாக்கையர் சூழ்சுடர்
வாடாப் பூவி னிமையா நாட்டத்து
நாற்ற வுணவி னுருகெழு பெரியோர்க்கு
மாற்றரு மரபி னுயர்பலி கொடுமா
ரந்தி விழவிற் றூரியங் கறங்கத்
திண்கதிர் மதாணி யொண்குறு மாக்களை
யோம்பினர்த் தழீஇத் தாம்புணர்ந்து முயங்கித்
தாதணி தாமரைப் போதுபிடித் தாங்குத்
தாமு மவரு மோராங்கு விளங்கக்
காமர் கவினிய பேரிளம் பெண்டிர்
பூவினர் புகையினர் தொழுவனர் பழிச்சிச்

சிறந்துபுறங் காக்குங் கடவுட் பள்ளியுஞ்
சிறந்த வேதம் விளங்கப் பாடி
விழுச்சீ ரெய்திய வொழுக்கமொடு புணர்ந்து
நிலமமர் வையத் * தொருதா மாகி
யுயர்நிலை யுலக மிவணின் றெய்து
மறநெறி பிழையா வன்புடை நெஞ்சிற்
பெரியோர் மேஎ யினிதி னுறையுங்
குன்றுகுயின் றன்ன வந்தணர் பள்ளியும்
வண்டுபடப் பழுநிய தேனார் தோற்றத்துப்
பூவும் புகையுஞ் சாவகர் பழிச்சச்
சென்ற காலமும் வரூஉ மமயமு
மின்றிவட் டோன்றிய வொழுக்கமொடு நன்குணர்ந்து
வானமு நிலனுந் தாமுழு துணருஞ்
சான்ற கொள்கைச் சாயா யாக்கை
யான்றடங் கறிஞர் செறிந்தனர் நோன்மார்
கல்பொளிந் தன்ன விட்டுவாய்க் கரண்டைப்
பல்புரிச் சிமிலி நாற்றி நல்குவரக்
கயங்கண் டன்ன வயங்குடை நகரத்துச்
செம்பியன் றன்ன செஞ்சுவர் புனைந்து
நோக்குவிசை தவிர்ப்ப மேக்குயர்ந் தோங்கி
யிறும்பூது சான்ற நறும்பூஞ் சேக்கையுங்
குன்றுபல குழீஇப் பொலிவன தோன்ற
வச்சமு மவலமு மார்வமு நீக்கிச்
செற்றமு முவகையுஞ் செய்யாது காத்து
ஞெமன்கோ லன்ன செம்மைத் தாகிச்
சிறந்த கொள்கை யறங்கூ றவையமு
நறுஞ்சாந்து நீவிய கேழ்கிள ரகலத்
தாவுதி மண்ணி யவிர்துகின் முடித்து
மாவிசும்பு வழங்கும் பெரியோர் போல
நன்றுந் தீதுங் கண்டாய்ந் தடக்கி
யன்பு மறனு மொழியாது காத்துப்
பழியொரீஇ யுயர்ந்து பாய்புகழ் நிறைந்த
செம்மை சான்ற காவிதி மாக்களு
மறநெறி பிழையா தாற்றி னொழுகிக்
குறும்பல் குழுவிற் குன்றுகண் டன்ன
பருந்திருந் துகக்கும் பன்மா ணல்விற்

* ஒருதிரமாகியென்றும் பாடம்.

பல்வேறு பண்டமோ டூண்மலிந்து கவினி
மலையவு நிலத்தவு நீரவும் பிறவும்
பல்வேறு திருமணி முத்தமொடு பொன்கொண்டு
சிறந்த தேஎத்துப் பண்ணியம் பகர்நரு
மழையொழுக் கறாஅப் பிழையா விளையுட்
பழையன் மோகூ ரவையகம் விளங்க
நான்மொழிக் கோசர் தோன்றி யன்ன
தாமேஎந் தோன்றிய நாற்பெருங் குழுவுங்
கோடுபோழ் கடைநருந் திருமணி குயினருஞ்
சூடுறு நன்பொன் சுடரிழை புனைநரும்
பொன்னுரை காண்மருங் கலிங்கம் பகர்நருஞ்
செம்புநிறை கொண்மரும் வம்புநிறை முடிநரும்
பூவும் புகையு மாயு மாக்களு
மெண்வகைச் செய்தியு முவமங் காட்டி
நுண்ணிதி னுணர்ந்த நுழைந்த நோக்கிற்
கண்ணுள் வினைஞரும் பிறருங் கூடித்
தெண்டிரை யவிரறல் கடுப்ப வொண்பல்
குறியவு நெடியவு மடிதரூஉ விரித்துச்
சிறியரும் பெரியருங் கம்மியர் குழீஇ
நால்வேறு தெருவினுங் காலுற நிற்றரக்
கொடும்பறைக் கோடியர் கடும்புடன் வாழ்த்துந்
*தண்கட னாட னொண்பூங் கோதை
பெருநா ளிருக்கை விழுமியோர் குழீஇ
விழைவுகொள் கம்பலை கடுப்பப் பலவுடன்
சேறு நாற்றமும் பலவின் சுளையும்
வேறுபடக் கவினிய தேமாங் கனியும்
பல்வே றுருவிற் காயும் பழனும்
கொண்டல் வளர்ப்பக் கொடிவிடு கவினி
மென்பிணி யவிழ்ந்த குறுமுறி †யடகு
மமிர்தியன் றன்ன தீஞ்சேற்றுக் கடிகையும்
புகழ்படப் பண்ணிய பேரூன் சோறும்
கீழ்செல வீழ்ந்த கிழங்கொடு பிறவு
மின்சோறு தருநர் பல்வயி னுகர
வாலிதை யெடுத்த வளிதரு வங்கம்
பல்வேறு பண்ட மிழிதரும் பட்டினத்

* தெண்கட னாடனென்றும் பாடம்.

† அடருமென்றும் பாடம்.

தொல்லெ லிமிழிசை மானக் கல்லென
நனந்தலை வினைஞர் கலங்கொண்டு மறுகப்
பெருங்கடற் குட்டத்துப் புலவுத்திரை யோத
மிருங்கழி மருவிப் பாயப் பெரிதெழுந்
துருகெழு பானாள் வருவன பெயர்தலிற்
பல்வேறு புள்ளி னிசையெழுந் தற்றே
யல்லங் காடி யழிதரு கம்பலை
யொண்சுட ருருப்பொளி மழுங்கச் சினந்தணிந்து
சென்ற ஞாயிறு நன்பகற் கொண்டு
குடமுதற் குன்றஞ் சேரக் குணமுத
னாண்முதிர் மதியந் தோன்றி நிலாவிரிபு
பகலுரு வுற்ற விரவுவர நயந்தோர்
காத லின்றுணை புணர்மா ராயிதழ்த்
தண்ணறுங் கழுநீர் துணைப்ப விழைபுனையூஉ
நன்னெடுங் கூந்த னறுவிரை குடைய
நரந்த மரைப்ப நறுஞ்சாந்து மறுக
மென்னூற் கலிங்கங் கமழ்புகை மடுப்பப்
பெண்மகிழ் வுற்ற பிணைநோக்கு மகளிர்
நெடுஞ்சுடர் விளக்கங் கொளீஇ நெடுநக
ரெல்லை யெல்லா நோயொடு புகுந்து
கல்லென் மாலை நீங்கநா ணுக்கொள
வேழ்புணர் சிறப்பி னின்றொடைச் சீறியாழ்
*தாழ்பயற் கனைகுரல் கடுப்பப் பண்ணுப்பெயர்த்து
வீழ்துணை தழீஇ வியல்விசும்பு கமழ
நீர்திரண் டன்ன கோதை பிறக்கிட்
டாய்கோ லவிர்தொடி விளங்க வீசிப்
போதவிழ் புதுமலர் தெருவுடன் கமழ
மேதகு தகைய மிகுநல மெய்திப்
பெரும்பல் குவளைச் சுரும்புபடு பன்மலர்
திறந்துமோந் தன்ன சிறந்துகமழ் நாற்றத்துக்
கொண்டன் மலர்ப்புதன் மானப்பூ வேய்ந்து
நுண்பூ ணாகம் வடுக்கொள முயங்கி
மாயப் பொய்பல கூட்டிக் கவவுக்கரந்து
சேயரு நணியரு நலனயந்து வந்த
விளம்பல் செல்வர் வளந்தப வாங்கி
நுண்டா துண்டு வறும்பூத் துறக்கு

---

* தாழ்பெயலென்றும் பாடம்.

மென்சிறை வண்டின மானப் புணர்ந்தோர்
நெஞ்சே மாப்ப வின்றுயி றுறந்து
பழந்தேர் வாழ்க்கைப் பறவை போலக்
கொழுங்குடிச் செல்வரும் பிறரு மேஎய
மணம்புணர்ந் தோங்கிய வணங்குடை நல்லி
லாய்பொன் னவிர்தொடிப் பாசிழை மகளி
ரொண்சுடர் விளக்கத்துப் பலருடன் றுவன்றி
நீனிற விசும்பி லமர்ந்தன ராடும்
வானவ மகளிர் மானக் கண்டோர்
நெஞ்சு நடுக்குறூஉக் கொண்டி மகளிர்
யாம நல்யாழ் நாப்ப ணின்ற
முழவின் மகிழ்ந்தன ராடிக் குண்டுநீர்ப்
பனித்துறைக் குவவுமணன் முனைஇ மென்றளிர்க்
கொழுங்கொம்பு கொழுதி நீர்நனை மேவர
நெடுந்தொடர்க் குவளை வடிம்புற வடைச்சி
மணங்கமழ் மனைதொறும் பொய்த லயரக்
கணங்கொ ளவுணர்க் கடந்த பொலந்தார்
மாயோன் மேய வோண நன்னாட்
கோணந் தின்ற வடுவாழ் முகத்த
சாணந் தின்ற சமந்தாங்கு தடக்கை
மறங்கொள் சேரி மாறுபொரு செருவின்
மாறா துற்ற வடுப்படு நெற்றிச்
சுரும்பார் கண்ணிப் பெரும்புகன் மறவர்
கடுங்களி றோட்டலிற் காணுந ரிட்ட
நெடுங்கரைக் காழக நிலம்பா வுருப்பக்
கடுங்கட் டேறன் மகிழ்சிறந்து திரிதரக்
கணவ ருவப்பப் புதல்வர்ப் பயந்து
பணைத்தேந் திளமுலை யமுத மூறப்
புலவுப்புனிறு தீர்ந்து பொலிந்த சுற்றமொடு
வளமனை மகளிர் குளநீ ரயரத்
திவவுமெய்ந் நிறுத்துச் செவ்வழி பண்ணிக்
குரல்புணர் நல்யாழ் முழவோ டொன்றி
நுண்ணீ ராகுளி யிரட்டப் பலவுட
னொண்சுடர் விளக்க முந்துற மடையொடு
நன்மா மயிலின் மென்மெல வியலிக்
கடுஞ்சூன் மகளிர் பேணிக்கை தொழுது
பெருந்தோட் சாலினி மடுப்ப வொருசா

ரருங்கடி வேலன் முருகொடு வளைஇ
யரிக்கூ டின்னியங் கறங்கநேர் நிறுத்துக்
கார்மலர்க் குறிஞ்சி சூடிக் கடம்பின்
சீர்மிகு நெடுவேட் பேணித் தழூஉப்பிணையூஉ
மன்றுதொறு நின்ற குரவை சேரிதொறு
முரையும் பாட்டு மாட்டும் விரைஇ
வேறுவேறு கம்பலை வெறிகொள்பு மயங்கிப்
பேரிசை நன்னன் பெரும்பெயர் நன்னாட்
சேரி விழவி னார்ப்பெழுந் தாங்கு
முந்தை யாமஞ் சென்ற பின்றைப்
பணிலங் கலியவிந் தடங்கக் காழ்சாய்த்து
நொடைநவி னெடுங்கடை யடைத்து மடமத
ரொள்ளிழை மகளிர் பள்ளி யயர
நல்வரி யிறாஅல் புரையு மெல்லடை
யயிருருப் புற்ற வாடமை விசயங்
கவவொடு பிடித்த வகையமை மோதகந்
தீஞ்சேற்றுக் கூவியர் தூங்குவன ருறங்க
விழவி னாடும் வயிரியர் மடியப்
பாடான் றவிந்த பனிக்கடல் புரையப்
பாயல் வளர்வோர் கண்ணினிது மடுப்பப்
பானாட் கொண்ட கங்கு லிடையது
பேயு மணங்கு முருவுகொண் டாய்கோற்
கூற்றக் கொஃறேர் கழுதொடு கொட்ப
விரும்பிடி மேஎந்தோ லன்ன விருள்சேர்பு
கல்லு மானுந் துணிக்குங் கூர்மைத்
தொடலை வாளர் தொடுதோ லடியர்
குறங்கிடைப் பதித்த கூர்நுனைக் குறும்பிடிச்
சிறந்த கருமை நுண்வினை நுணங்கற
னிறங்கவர்பு புனைந்த நீலக் கச்சினர்
மென்னூ லேணிப் பன்மாண் சுற்றினர்
நிலனக ழுளியர் கலனசைஇக் கொட்குங்
கண்மா றாடவ ரொடுக்க மொற்றி
வயக்களிறு பார்க்கும் வயப்புலி போலத்
துஞ்சாக் கண்ண ரஞ்சாக் கொள்கைய
ரறிந்தோர் புகழ்ந்த வாண்மையர் செறிந்த
நூல்வழிப் பிழையா நுணங்குநுண் டேர்ச்சி
யூர்காப் பாள ரூக்கருங் கணையினர்

தேர்வழங்கு தெருவி னீர்திரண் டொழுக
மழையமைந் துற்ற வரைநா ளமயமு
மசைவில ரெழுந்து நயம்வந்து வழங்கலிற்
கடவுள் வழங்குங் கையறு கங்குலு
மச்ச மறியா தேம மாகிய
மற்றை யாமம் பகலுறக் கழிப்பிப்
போதுபிணி விட்ட கமழ்நறும் பொய்கைத்
தாதுண் டும்பி போது முரன்றாங்
கோத லந்தணர் வேதம் பாடச்
சீரினிது கொண்டு நரம்பினி தியக்கி
யாழோர் மருதம் பண்ணக் காழோர்
கடுங்களிறு கவளங் கைப்ப நெடுந்தேர்ப்
பணைநிலைப் புரவி புல்லுளை தெவிட்டப்
பல்வேறு பண்ணியக் கடைமெழுக் குறுப்பக்
கள்ளோர் களிநொடை நுவல வில்லோர்
நயந்த காதலர் கவவுப்பிணித் துஞ்சிப்
புலர்ந்துவிரி விடிய லெய்த விரும்பிக்
கண்பொரா வெறிக்கு மின்னுக்கொடி புரைய
வொண்பொ னவிரிழை * தெழிப்ப வியலித்
திண்சுவர் நல்லிற் கதவங் கரைய
வுண்டுமகிழ் தட்ட மழலை நாவிற்
பழஞ்செருக் காளர் தழங்குகுர றோன்றச்
சூதர் வாழ்த்த மாகதர் நுவல
†வேதா ளிகரொடு நாழிகை யிசைப்ப
விமிழ்முர சிரங்க வேறுமா றிலைப்பப்
பொறிமயிர் வாரணம் வைகறை யியம்ப
யானையங் குருகின் சேவலொடு காம
ரன்னங் கரைய வணிமயி லகவப்
பிடிபுணர் பெருங்களிறு முழங்க முழுவலிக்
கூட்டுறை வயமாப் புலியொடு குழும
வான நீங்கிய நீனிற விசும்பின்
மின்னுநிமிர்ந் தனைய ராகி நறவுமகிழ்ந்து
மாணிழை மகளிர் புலந்தனர் பரிந்த
பருஉக்கா ழாரஞ் சொரிந்த முத்தமொடு
பொன்சுடு நெருப்பி னிமைக்கென்ன

* தெளிர்ப்ப வென்றும் பாடம்.
† வேதாளிய ரென்றும் பாடம்.

வம்மென் குரும்பைக் காய்படு பிறவுந்
தருமணன் முற்றத் தரிஞிமி றார்ப்ப
மென்பூஞ் செம்மலொடு நன்கலஞ் சீப்ப
விரவுத்தலைப் பெயரு மேம வைகறை
மைபடு பெருந்தோண் மழவ ரோட்டி
யிடைப்புலத் தொழிந்த வேந்துகோட் டியானை
பகைப்புலங் கவர்ந்த பாய்பரிப் புரவி
வேல்கோ லாக வாள்செல நூறிக்
காய்சின முன்பிற் கடுங்கட் கூளிய
ரூர்சுடு விளக்கிற் றந்த வாயமு
நாடுடை நல்லெயி லணங்குடைத் தோட்டி
நாடொறும் விளங்கக் கைதொழூஉப் பழிச்சி
நாடா வந்த விழுக்கல மனைத்துங்
கங்கையம் பேரியாறு கடற்படர்ந் தாஅங்
களந்துகடை யறியா வளங்கெழு தாரமொடு
புத்தே ளுலகங் கவினிக் காண்வர
மிக்குப்புக ழெய்திய பெரும்பெயர் மதுரைச்
சினைதலை மணந்த சுரும்புபடு செந்தீ
யொண்பூம் பிண்டி யவிழ்ந்த காவிற்
சுடர்பொழிந் தேறிய விளங்குகதிர் ஞாயிற்
றிலங்குகதி ரிளவெயிற் றோன்றி யன்ன
தமனியம் வளைஇய தாவில் விளங்கிழை
நிலம்விளக் குறுப்ப மேதகப் பொலிந்து
மயிலோ ரன்ன சாயன் மாவின்
றளிரே ரன்ன மேனித் தளிர்ப்புறத்
தீர்க்கி னரும்பிய திதலையர் கூரெயிற்
றொண்குழை புணரிய வண்டாழ் காதிற்
கடவுட் கயத் தமன்ற சுடரிதழ்த் தாமரைத்
தாதுபடு பெரும்போது புரையும் வாண்முகத்
தாய்தொடி மகளிர் நறுந்தோள் புணர்ந்து
கோதையிற் பொலிந்த சேக்கைத் துஞ்சித்
திருந்துதுயி லெடுப்ப வினிதி னெழுந்து
திண்கா ழார நீவிக் கதிர்விடு
மொண்கா ழாரங் கவைஇய மார்பின்
வரிக்கடைப் பிரச மூசுவன மொய்ப்ப
வெருந்தங் தாழ்ந்த விரவுப்பூந் தெரியற்
பொலஞ்செயப் பொலிந்த நலம்பெறு விளக்கம்

வலிகெழு தடக்கைத் தொடியொடு சுடர்வரச்
சோறமை வுற்ற நீருடைக் கலிங்க
முடையணி பொலியக் குறைவின்று கவைஇ
வல்லோன் றைஇய வரிப்புனை பாவை
முருகியன் றன்ன வுருவினை யாகி
வருபுனற் கற்சிறை கடுப்ப விடையறுத்
தொன்னா ரோட்டிய செருப்புகன் மறவர்
வாள்வலம் புணர்ந்தநின் றுள்வலம் * வாழ்த்த
வில்லைக் கவைஇக் கணைதாங்கு மார்பின்
மாதாங் கெறுழ்த்தோண் மறவர்த் தம்மின்
கல்லிடித் தியற்றிய விட்டுவாய்க் கிடங்கி
னல்லெயி லுழந்த செல்வர்த் தம்மின்
கொல்லேற்றுப் பைந்தோல் சீவாது போர்த்த
மாக்கண் முரச மோவில கறங்க
†வெரிநிமிர்ந் தன்ன தானை நாப்பட்
பெருநல் யானை போர்க்களத் தொழிய
விழுமிய வீழ்ந்த குரிசிலர்த் தம்மின்
புரையோர்க்குத் தொடுத்த பொலம்பூந் தும்பை
நீர்யா ரென்னாது முறைகருதுபு சூட்டிக்
காழ்மண் டெஃகமொடு கணையலைக் கலங்கிப்
பிரிபிணை யரிந்த நிறஞ்சிதை கவயத்து
வானத் தன்ன வளநகர் பொற்ப
நோன்குறட் டன்ன வூன்சாய் மார்பி
னுயர்ந்த வுதவி யூக்கலர்த் தம்மி
னிவந்த யானைக் கணநிரை கவர்ந்த
புலர்ந்த சாந்தின் விரவுப்பூந் தெரியற்
பெருஞ்செ யாடவர்த் தம்மின் பிறரும்
யாவரும் வருக வேனோருந் தம்மென
வரையா வாயிற் செறாஅ திருந்து
பாணர் வருக பாட்டியர் வருக
யாணர்ப் புலவரொடு வயிரியர் வருகென
விருங்கிளை புரக்கு மிரவலர்க் கெல்லாங்
கொடிஞ்சி நெடுந்தேர் களிற்றொடும் வீசிக்
களந்தோறுங் கள்ளரிப்ப
மரந்தோறு மைவீழ்ப்ப

---

* பழிச்ச வென்றும் பாடம்.
† எரிநிகழ்ந் தென்றும் பாடம்.

நிணவூன்சூட் டிருக்கமைய
நெய்கனிந்து வறையார்ப்பக்
குருஉக்குய்ப்புகை மழைமங்குலிற்
பரந்துதோன்றா வியனகராற்
பல்சாலை முதுகுடுமியி
னல்வேள்வித் துறைபோகிய
தொல்லாணை நல்லாசிரியர்
புணர்கூட் டுண்ட புகழ்சால் சிறப்பி
னிலந்தரு திருவி னெடியோன் போல
வியப்புஞ் சால்புஞ் செம்மை சான்றோர்
பலர்வாய்ப் புகரறு சிறப்பிற் றோன்றி
யரிய தந்து குடியகற்றிப்
பெரியகற் றிசைவிளக்கி
முந்நீர் நாப்பண் ஞாயிறு போலவும்
பன்மீ னடுவட் டிங்கள் போலவும்
பூத்த சுற்றமொடு பொலிந்தினிது விளங்கிப்
பொய்யா நல்லிசை நிறுத்த புனைதார்ப்
பெரும்பெயர் மாறன் றலைவ னாகக்
கடந்தடு வாய்வா ளிளம்பல் கோச
ரியனெறி மரபினின் வாய்மொழி கேட்பப்
பொலம்பூ ணைவ ருட்படப் புகழ்ந்த
மறமிகு சிறப்பிற் குறுநில மன்ன
ரவரும் பிறருந் துவன்றிப் பொற்பு
விளங்கும் புகழவை நிற்புகழ்ந் தேத்த
விளங்கிழை மகளிர் பொலங்கலத் தேந்திய
மணங்கமழ் தேறன் மடுப்ப நாளு
மகிழ்ந்தினி துறைமதி பெரும
வரைந்துநீ பெற்ற நல்லூ ழியையே.

இதன்பொருள்.

இப்பாட்டிற்கு மாங்குடிமருதனார் மதுரைக்காஞ்சியென்று மதுரைப்பெயரா னன்றித் திணைப்பெயராற் பெயர்கூறினர். இத்திணைப்பெயர் பன்னிருபடலமுதலிய நூல்களாற்கூறிய திணைப்பெயரன்று; தொல்காப்பியனார்கூறிய திணைப்பெயரிற் பொருளே இப்பாட்டிற்குப் பொருளாகக் கோடலின். வஞ்சி மேற்செல்லலானும், காஞ்சி எஞ்சாதெதிர்சென்றூன்றலானும் "வஞ்சியுங் காஞ்சியுந் தம்முண் மாறே" எனப் பன்னிருபடலத்திற்கூறிய திணைப்பெயர் இப்பாட்டிற்குப் பொருளன்மையுணர்க. அவர் முதுமொழிக்காஞ்சிமுதலியவற்றைப் பொதுவியலென்று ஓர்படல மாக்கிக்கூறலின், அவை திணைப்பெயராகாமையுணர்க.

இனி மதுரைக்காஞ்சியென்றதற்கு மதுரையிடத்து அரசர்க்குக் கூறிய காஞ்சி யென விரிக்க. இஃது உருபும்பொருளும் உடன்றொக்கது. * "காஞ்சி தானே பெருந்திணைப் புறனே" என்பதனாற் காஞ்சி பெருந்திணைக்குப் புறனாயிற்று. அது † "பாங்கருஞ் சிறப்பிற் பல்லாற் றானு - நில்லா வுலகம் புல்லிய நெறித்தே." என்பதாம். இதன்பொருள். பாங்கு அருஞ்சிறப்பின் - தனக்குத் துணையில்லாத வீடுபேறுநிமித்தமாக, பல் ஆற்றானும் - அறம் பொருள் இன்பமென்னும் பொருட்பகுதியானும், அவற்றுட்பகுதியாகிய உயிரும் யாக்கையும் செல்வமும் இளமையு முதலியவற்றானும், நில்லா உலகம் புல்லிய நெறித்து - நிலைபேறில்லாத உலகியற்கையைப் பொருந்திய நன்னெறியினை உடைத்து அக்காஞ்சியென்றவாறு. எனவே வீடுபேறு நிமித்தமாகப் பல்வேறுநிலையாமை சான்றோரறையுங் குறிப்பினது காஞ்சித்திணை யென்பதுபொருளாயிற்று.

இச்செய்யுட்புலவர் இப்பொருளேகோடலின், யாம் இப்பொருளேதர உரைகூறுகின்றாம்.

[ஓங்குதிரை வியன்பரப்பி, னொலிமுந்நீர் வரம்பாக:] வியன் பரப்பின் ஓங்கு திரை ஒலி முந்நீர் வரம்பாக— அகலத்தையுடைத்தாகிய நீர்ப்பரப்பின்கண்ணே ஓங்குதிரை ஒலிக்குங் கடல் எல்லையாக,

தேன் தூங்கும் உயர் சிமயம் மலை நாறிய வியன் ஞாலத்து— தேனிறால்தூங்கும் உயர்ந்த உச்சியையுடைய மலைகள்தோன்றிய அகலத்தையுடைய ஞாலத்தின்கண்ணே,

வலம் மாதிரத்தான் வளி கொட்ப— வலமாக ஆகாயத்தின்கண்ணே காற்றுச் சுழல,

வியன் நாண்மீன் நெறி ஒழுக—அகலத்தையுடைய நாண்மீன்கள் தாம் நடக்கு நெறியின்கண்ணே நடக்க,

பகற் செய்யும் செஞ்ஞாயிறும்— பகற்பொழுதை உண்டாக்குஞ் சிவந்தபகலோனும்,

இரவுச் செய்யும் வெண்டிங்களும்—இராப்பொழுதை உண்டாக்கும் வெள்ளிய மதியும்,

மை தீர்ந்து கிளர்ந்து விளங்க— குற்றமற்றுத் தோன்றிவிளங்க,

மழை தொழில் உதவ — மேகம் தானே பெய்தற்றொழிலை வேண்டுங்காலத் தேதர,

உழவுத்தொழிற்கு உதவவென்றுமாம்.

மாதிரம் கொழுக்க— திசைகளெல்லாந் தழைப்ப,

மலைகள் விளைந்துகொழுக்கவென்றுமாம்.

[தொடுப்பி னாயிரம் வித்தியது விளைய:] தொடுப்பின் வித்தியது ஆயிரம் விளைய— ஒருவிதைப்பின்கண்ணே விதைத்தவிதை ஆயிரமாகவிளைய,

நிலனும்—விளைநிலங்களும்,

மரனும்—மரங்களும்,

பயன் எதிர்பு நந்த— பல்லுயிர்க்குந் தம்பயன்கொடுத்தலை ஏறட்டுக்கொண்டு தழைப்ப,

---

* தொல்காப்பியம், பொருளதிகாரம், புறத்திணையியல், உஉ.

† ,, ,, ,, உந.

கூற்றுவனையுதைத்தகடவுளென்று இறைவனுக்கி, அவன்பின்னவொன்றது அக த்தியனையென்றுபொருள்கூறின், இறைவனுக்குத் தம்பியென்றல் சாலாமையானும், அப்பொருடருங்காலத்து * "முன்னவன் பின்னவன்", "முன்னோன் பின்னோன்" என்றல்லது அச்சொல் நில்லாமையானும் அதுபொருந்தாது. † "முன்னரே சாநாண் முனிதக்க மூப்புள - பின்னரும் பீடழிக்கு நோயுள" எனவும் பிறுண்டும் முன்னர் பின்னரென்பன இடமுணர்த்திநிற்குமென்றுணர்க.

பொருநனென்றது தான் பிறர்க்கு உவமிக்கப்படுவானென்னும் பொருட்டு.

விழுச் சூழிய—சீரியமுகபடாத்தையுடையவாய்,

விளங்கு ஓடைய—விளங்குகின்ற பட்டத்தையுடையவாய்,

கடுஞ்சினத்த — கடிய சினத்தையுடையவாய்,

கமழ் கடாத்து அளறு பட்ட நறுஞ் சென்னிய —கமழுகின்றமதத்தாலேசேறுண்டான நறியதலையினையுடையவாய்,

வரை மருளும் உயர் தோன்றல—வரையென்றுமருளும் உயர்ந்த தோற்றத்தினையுடையவாய்,

வினை நவின்ற பேர் யானை—போர்த்தொழிலிலேபயின்ற பெரியயானை,

இச் செய்தெனெச்சக்குறிப்பாகிய வினையெச்சமுற்றுக்கள் அடுக்கிவந்தனவற்றை நவின்றவென்னும் பெயரெச்சத்தோடு முடிக்க.

சினஞ் சிறந்து களன் உழக்கவும் — சினமிக்குக் களத்துவீரரைக் கொன்றுதிரியவும்,

மா எடுத்த மலி குரூஉத் துகள் அகல் வானத்து வெயில் கரப்பவும்—குதிரைத்திரள் பகைவர்மேற்செல்லுதலாலுண்டான மிக்கநிறத்தையுடையவாகியதூளி அகலுதற்குக் காரணமான ஆகாயத்திடத்தே வெயிலைமறைக்கவும்,

வாம்பரிய கடுந் திண்டேர் காற்று என்னக் கடிது கொட்பவும்—தாவுங்குதிரைகளையுடைய செலவுகடிய திண்ணியதேர் காற்றுச்சுற்றியடித்ததென்னக் கடிதாகச் சுழலவும்,

[வாண்மிகு மறமைந்தர், தோண்முறையான் வீறுமுற்றவும்:] வாள் மிகு மறம் மைந்தர் தோள் வீறு முறையான் முற்றவும்—வாட்போரான்மிகுகின்ற மறத்தையுடைய வீரருடையதோள் வெற்றிமுறையாகவெட்டுதலான் முற்றுப்பெறவும்,

‡ "விருந்தாயினை யெறிநீயென விரைமார்பகங் கொடுத்தாற், கரும்பூணற வெறிந்தாங்கவ னினதாழினி யெனவே" என்றார் பிறரும்.

---

* திருச்சிற்றம்பலக்கோவையார், ருசஉ:— "மூப்பா னிளையவன் முன்னவன் பின்னவன் முப்புரங்கள் - வீப்பான் வியன்றில்லை யானரு ளால்விரி நீருலகங்-காப்பான் பிரியக் கருதுகின் றார்நமர் கார்க்கயற்கட்-பூப்பா னலமொளி ரும்புரி தாழ்குழற் பூங்கொடியே."

† நாலடியார், ஈகை, உ:—"முன்னரே சாநாண் முனிதக்க மூப்புள - பின்னரும் பீடழிக்கு நோயுள - கொன்னே - பரவன்மின் பற்றன்மின் பாத்துண்மின் யாதுங் - கரவன்மின் கைத்துண்டாம் போழ்து."

‡ சீவகசிந்தாமணி, மண்மகளிலம்பகம், ககூச:—"விருந்தாயினை யெறிநீயென விரைமார்பகங் கொடுத்தாற்-கரும்பூணற வெறிந்தாங்கவ னினதாழினி யெனவே - யெரிந்தாரயி லிடைபோழ்ந்தமை யுணராதவ னின்றான் - சொரிந்தார்மல ரமங்கையர் தொழுதார்விசும் படைந்தான்."

இரு பெரு வேந்தரொடு வேளிர் சாயப் பொருது அவரைச் செரு வென்றும்—சேரன்சோழனுகிய இருவராகிய பெரியஅரசருடனே குறுநிலமன்னருமிளைக்கும்படி பொருது அவரைப் போரைவென்றும் அமையாமல்,

உம்மை - சிறப்பும்மை.

[இலங்கருவிய வரைநீந்திச், சுரம்போழ்ந்த விகலாற்ற, லுயர்ந்தோங்கிய விழுச் சிறப்பின்:]

உயர்ந்து இலங்கு அருவிய வரை நீந்தி ஓங்கிய விழுச் சிறப்பின்—உயர்ந்துவிளங்குகின்ற அருவிகளையுடைய மலையிற் குறிஞ்சிநிலமன்னரையெல்லாம்வென்று உயர்ந்த சீரிய தலைமையினுலே,

இகல் ஆற்றற் சுரம் போழ்ந்த சிறப்பின்—மாறுபாட்டைநடத்துதலையுடைய பகைவர்காடுகளைப் பலவழியாகப்பிளந்த சிறப்பினுலே,

நிலம் தந்த பேர் உதவி—நாட்டிலிருக்கின்ற அரசர்நிலங்களையெல்லாம்கொண்ட பெரியஉதவியையும்,

மலையும் காடும் அரணுகஇருந்தஅரசனை அழித்தவலியாலே நாட்டிலிருக்கின்ற அரசர் தத்தம்நாடுகளைவிட்டாரொன்றதாம்.

பொலந்தார் மார்பின் நெடியோன் உம்பல்—பொன்னுற்செய்த தாரையணிந்த மார்பினையுமுடைய வடிம்பலம்பநின்றபாண்டியன் வழியில்வந்தோனே,

யானை (௪எ) கணனுழக்கவும் (௪அ) துகள் (௪௯) வெயில்கரப்பவும் (௫0) தேர் (௫௧) கொட்பவும் (௫௨) மைந்தர் (௫௩) முற்றவும் (௫௪) பொருதுசெருவென்றும் அமையாமல் (௫௫) விழுச்சிறப்பின் (௫௯) நிலந்தந்தஉதவியினையும் (௬0) மார்பினையுமுடையநெடியோனெனக.

மரம் தின்னூஉ வரை உதிர்க்கும் நரை உருமின் ஏறு அனையை — மரங்களைச் சுட்டு மலைகளைநீருக்கும் பெருமையினையுடைய உருமேற்றையொப்பை,

"கருநரைநல்லேறு" என்றுர்பிறரும். இன் - அசை.

அருங் குழு மிளை—பகைவர்சேர்தற்கரிய திரட்சியையுடைய காவற்காட்டினையும்,

குண்டு கிடங்கின்—ஆழத்தினையுடையகிடங்கினையும்,

உயர்ந்து ஓங்கிய நிரைப் புதவின்—உயர்ந்துவளர்ந்த கோபுரங்களிடத்து வாயில்களையும்,

நிரை - ஆகுபெயர். உயர்ச்சி ஒங்குதலைவிசேடித்துநின்றது.

நெடுமதில்—நெடியமதிலினையும்,

நிரைஞாயில்—நிரைத்த சூட்டினையுமுடைய,

அஃது எய்தால்மறைதற்கு உயரப்படுப்பது.

[அம்புமி ழயிலருப்பம்:] அயில் அம்பு உமிழ் அருப்பம்—கூர்மையையுடைய அம்புகளையுமிழும் அரண்களை,

மிளை (௬௪) முதலியவற்றையுடைய அருப்பமென்க.

தண்டாது தலைச் சென்று கொண்டு நீங்கிய விழுச் சிறப்பின்—அமையாமல் அவ்விடங்களிலேசென்று கைக்கொண்டு அவ்விடங்களினின்றும்போன சீரிய தலைமையினையுடைய கொற்றவர் (எ௪),

[தென்குமரி வடபெருங்கல், குணகுடகட லாவெல்லை:] தென் குமரி எல்லை ஆ வட பெருங்கல் எல்லை ஆக் குண குட கடல் எல்லை ஆ—தென்றிசைக்குக்குமரி எல்லையாக வடதிசைக்குப் பெரியமேரு எல்லையாகக் கீழ்த்திசைக்கும் மேற்றிசைக்கும் கடல் எல்லையாக இடையில்வாழ்வோரெல்லாம்,

தொன்று மொழிந்து தொழில் கேட்ப—தம்முடன் பழமையைச்சொல்லி ஏவல் கேட்கும்படி,

வெற்றமொடு வெறுத்து ஒழுகிய—வெற்றியோடே செறிந்துநடந்த,

கொற்றவர்தங் கோன் ஆகுவை — வெற்றியுடையோர்தம்முடைய தலைவனுன தன்மையையுடையை,

வான் இயைந்த இருமுந்நீர்ப் பேஎம் நிலைஇய விரும் பெளவத்து—மேகம்படிந்த பெரிதாகிய மூன்றுநீர்மையையுடைய அச்சம்நிலைபெற்ற கரியகடலிடத்து,

[கொடும்புணரி விலங்குபோழக், கடுங்காலொடு கரைசேர, நெடுங்கொடிமிசை யிதையெடுத்து:]

கடுங்காலொடு கொடும்புணரி விலங்கு போழ இதை எடுத்து — கடியகாற்றாலே வளைகின்ற திரையைக் குறுக்கே பிளந்தோடும்படி பாய்விரிக்கப்பட்டு,

இன்னிசைய முரசம் முழங்க—இனிய ஓசையையுடைய முரசமுழங்காநிற்க,

பொன் மலிந்த விழுப் பண்டம் நாடு ஆர—பொன்மிகுதற்குக்காரணமாகிய சீரிய சரக்குக்களை நாட்டிலுள்ளார்நுகரும்படியாக,

[நன்கிழிதரும்:] கரை சேர (எஅ) நன்கு இழிதரும்—கரையைச்சேர வாணிகம் வாய்த்துவந்து இழிதலைச்செய்யும்,

[ஆடியற் பெருநாவாய்:] நெடுங்கொடி மிசை (எக) ஆடு இயற் பெரு நாவாய்—நெடியகொடி பாய்மரத்தின்மேலேயாடும் இயல்பினையுடையபெரியமரக்கலம்,

இதைஎடுத்து (எக) முழங்க (அo) ஆர இழிதரு (அஉ) நாவாயென்க.

மழை முற்றிய மலை புரையத் துறை முற்றிய துளங்கு இருக்கை — கருமேகஞ்சூழ்ந்த மலைபோலக் கடல்சூழ்ந்த அசைகின்றஇருப்பினையும்,

துறை - ஆகுபெயர். சரக்குப்பறித்தற்குக் கடலினின்றமரக்கலங்கள் அக்கடல் சூழநின்றதற்கு மழைமுற்றியமலை உவமமாயிற்று.

நாவாய் துளங்கிருக்கையென்க.

தெண்கடற் குண்டு அகழி—தெளிந்த கடலாகிய ஆழத்தையுடைய கிடங்கினையுமுடைய,

சீர் சான்ற உயர் நெல்லின் ஊர் கொண்ட உயர் கொற்றவ — தலைமையமைந்த உயர்ந்த நெல்லின்பெயரைப்பெற்ற சாலியூரைக்கொண்ட உயர்ந்த வெற்றியையுடையவனே,

இதனாற் றனக்குநடவாததோர் ஊர்கொண்டானென்றார்.

இன்னை அசையாக்கி நெல்லூரொன்பாருமுளர்.

இருக்கையினையும் (அ௫) கிடங்கினையு (அசா) முடையஊரென்க.

[நீர்த்தெவ்வு நிரைத்தொழுவர், பாடுசிலம்பு மிசையேற்றத், தோடுவழங்கு மகவரம்பிற், கயமகைய வயனிறைக்கும்:]

வயல் அகைய நிறைக்கும் கயம் நீர்த் தெவ்வும் நிரைத் தொழுவர்பாடு சிலம்பும் இசை—வயல்தழைக்கும்படி நீரைநிறைத்தற்குக்காரணமான குளங்களினீரை இடாவான்முகந்துகொள்ளும் நிரையாகநின்றுதொழில்செய்வாரிடத்தே ஒலிக்குமோசை,

ஏற்றத்தோடு வழங்கும் அகல் ஆம்பியின் இசை—ஏற்றத்துடனே யுலாவும் அகன்ற பன்றிப்பத்தலின் ஓசை,

மென்றொடை வன் கிழாஅர் இசை (கரு)—மெத்தென்ற கட்டுக்களையுடைய வலிய பூட்டைப்பொறியின் ஓசை,

அதரி கொள்பவர் இசை(கரு)—கடாவிடுகின்றவரோசை,

பகடு பூண் தெண்மணி இசை(கரு)—எருதுகள்பூண்ட தெள்ளிய மணியின் ஓசை,

இரும்புள் ஓப்பும் இசையே — பயிர்களிற் பெரியகிளிமுதலியவற்றை ஓட்டுமோசை,

ஏகாரம் - ஈற்றசை.

என்றும்—எந்நாளும்,

மணிப் பூ முண்டகத்து மணல் மலி கானற் பரதவர் மகளிர் குரவையொடு ஒலிப்ப—நீலமணிபோலும் பூக்களையுடையவாகிய கழிமுள்ளிகளையுடைய மணற்குன்றுகண்மிக்க கடற்கரையிலிருக்கும் பரதவருடைய மகளிராடுங் குரவைக்கூத்தின் ஓசையோடேகூடி ஆரவாரியாநிற்ப,

ஒருசார் விழவு நின்ற வியல் ஆங்கண் — ஒருபக்கம் விழாக்கொண்டாடுதலாற் பிறந்த ஓசைகள் மாறாமனின்ற அகலத்தையுடைய ஊர்களிடத்தேயிருந்து,

பாடுசிலம்புமிசை (கூ0) முதலியன குரவையொடு (கஎ) என்றும் (கரு) ஒலிப்ப ஒருசார் விழவுநின்றவூரென்க.

முழவுத் தோள் முரட் பொருநர்க்கு — முழவுபோலுந் தோளினையுடையராய்க் கல்வியான்மாறுபடுதலையுடைய தடாரிப்பொருநர்க்கு,

உரு கெழு பெருஞ்சிறப்பின் இருபெயர்ப் பேர் ஆயமொடு இலங்கு மருப்பிற் களிறு கொடுத்தும் — அச்சம்பொருந்திய பெரிய தலைமையையுடைய கன்றும்பிடியுமென்னும் இரண்டுபெயரையுடைய பெரியதிரளுடனே விளங்குகின்ற கொம்பினையுடைய களிறுகளைக்கொடுத்தும்,

இருபெயர்க்கு ஆடும் மாடுமென்பாருமுளர்.

பொலந் தாமரைப் பூச் சூட்டியும்—பொன்னாற்செய்த தாமரைப்பூவைச் சூட்டியும்,

[நலஞ்சான்ற கலஞ்சிதறும், பல்குட்டுவர் வெல்கோவே:]

நலம் சான்ற கலம் சிதறும் கோவே—நன்மையமைந்த பேரணிகலங்களை எல்லார்க்குங்கொடுக்குங்கோவே,

ஊர்களிடத்தே யிருந்து (கஅ) பொருநர்க்குக் (கக) கொடுத்துஞ் (க0உ) சூட்டியும் (க0௩) அமையாது கலஞ்சிதறுங்கோவேயென்க.

பல் குட்டுவர் வெல் கோவே — பலவாகிய குட்டநாட்டிலுள்ளாரை வெல்லுங் கோவே,

என்பது அடை.

இதனால், தன்னாட்டிலூர்களிலிருந்து கொடுக்கின்ற சிறப்புக்கூறினார்.

கல் காயுங் கடுவேனிலொடு—மலைகள் காய்தற்குக்காரணமாகிய கடிய முதுவேனிலாலே,

இரு வானம் பெயல் ஒளிப்பினும்—பெரியமேகம் மழையைத் தன்னிடத்தே மறைத்துக்கொள்ளினும்,

[வருமவைகன் மீன்பிறழினும்:] வைகல் வரும் மீன் பிறழினும்—தான் தோன்றுதற்குரிய நாளிலேதோன்றும் வெள்ளி தென்றிசையிலேஎழினும்,

வெள்ளம் மாறாது விளையுள் பெருக—யாறுகள் வெள்ளமாறாமல்வந்து விளைதல்பெருகுகையினாலே,

நெல்லின் ஓதை—முற்றினநெல்லுக் காற்றடித்தசைதலாலே எழுந்த ஓசை,

அரிநர் கம்பலை—அதனையறுப்பாருடையவோசை,

புள் இமிழ்ந்து ஒலிக்கும் இசை—பறவைகள்கத்துகையினாலே ஆரவாரிக்குமாரவாரம்,

என்றும்—எந்நாளும்,

சலம் புகன்று சுறவுக் கலித்த புலவு நீர் வியன் பௌவத்து—தம்முள் மாறுபாட்டைவிரும்பிச் சுறாக்கள் செருக்கித்திரிகின்ற புலானாற்றத்தையுடைத்தாகிய நீரையுடைய அகற்சியையுடைய கடலிடத்துத் துவலை (கக௫),

நிலவுக் கானல் முழவுத் தாழைக் குளிர்ப் பொதும்பர் நளித் தூவல்—நிலாப்போலும் மணலையுடையகரையினிற் குடமுழாப்போலுங் * காயையுடையதாழையை வேலியாகவுடைய குளிர்ச்சியையுடைய இளமரக்காவின்கண்ணேவந்து செறிதலையுடைய துவலையிலோசை,

நிரை திமில் வேட்டுவர் கரை சேர் கம்பலை—நிரைத்த மீன்படகாலே வேட்டையாடுவோர் வந்து கரையைச்சேருமாரவாரம்,

இருங்கழிச் செறுவின் வெள்ளுப்புப் பகர்நரொடு — பெரியகழியிடத்து உப்புப் பாத்தியிலே வெள்ளிய உப்பைவிற்கும் அளவரொலியோடே,

[ஒலியோவாக் கலியாணர், முதுவெள்ளிலை மீக்கூறும், வியன்மேவல் விழுச்செல்வத், திருவகையா னிசைசான்ற, சிறுகுடிப் பெருந்தொழுவர், குடிகெழீஇய நானிலவரொடு, தொன்றுமொழிந்து தொழில்கேட்ப:],

சிறுகுடிப் பெருந்தொழுவர் ஒலி ஓவாக் கலி யாணர் முதுவெள்ளிலை — சிறிய குடிகளாய்ப் பெரியதொழில்களைச் செய்வாருடைய ஆரவாரமுமொழியாத பெருக்கினையுடைத்தாகிய புதுவருவாயினையுடைய முதுவெள்ளிலையென்னுமூர்,

இது குறுநிலமன்னரிருப்பு.

பகர்நரொலியோடே (ககஎ) நெல்லினோதை (கக௰) முதலியஒலி என்றும் (கக௧) ஓவாதவெள்ளிலையென்க.

மீக்கூறும் இருவகையான் வியன் மேவல் விழுச்செல்வத்து இசை சான்ற குடிகெழீஇய நானிலவரொடு—உலகத்துத்தொழில்களின் மேலாகச்சொல்லும் உழவுவாணிகமென்கின்ற இரண்டுகூற்றாலே அகலம்பொருந்துதலையுடைய சீரியசெல்வத்தாலே புகழ்நிறைந்த குடிமக்கள் பொருந்தின நான்குநிலத்துவாழ்வாருடனே,

தொன்று மொழிந்து தொழில் கேட்ப—பழமைகூறிநின்று ஏவலைக்கேட்கும்படியாக,

கால் என்னக் கடிது உராஅய் நாடு கெட எரி பரப்பி ஆலங்கானத்து அஞ்சுவர இறுத்து—காற்றென்னும்படி கடிதாகப்பரந்துசென்று பகைவர்நாடுகெடும்படி நெருப்பைப்பரப்பித் தலையாலங்கானமென்கின்றவூரிலே பகைவர்க்குஅச்சந்தோன்றும்படிவிட்டு,

* தாளையுடையவென்றும் பிரதிபேதமுண்டு.

* "எரிபரந்தெடுத்தல்" என்னுந் துறைகூறிற்று.

அரசு பட அமர் உழக்கி முரசு கொண்டு களம் வேட்ட — நெடுநிலமன்னரிருவரும், குறுநிலமன்னரைவரும் படும்படி போரிலேவென்று அவர்முரசைக்கைக்கொண்டு களவேள்விவேட்ட,

எழுவராவார்:—சேரன், செம்பியன், திதியன், எழுனி, எருமையூரன், இருங்கோவேண்மான், பொருநன்.

அடு திறல் உயர் புகழ் வேந்தே — கொல்லுகின்ற வலியுயர்ந்த புகழையுடைய வேந்தனே,

நானிலவரோடே (௧௨௫) முதுவெள்ளிலை (௧௧௧) தொழில் கேட்பத் (௧௨௪) திறலுயர்ந்தவேந்தேயென்க.

இது † தலையாலங்கானத்து வென்றமைகூறிற்று.

நட்டவர் குடி உயர்க்குவை—நின்னுடனே நட்புக்கொண்டவருடையகுடியை உயர்த்தலைச்செய்வை,

செற்றவர் அரசு பெயர்க்குவை—நீசெறப்பட்டவர் அரசுரிமையை வாங்கிக்கோடலைச் செய்வை,

பேர் உலகத்து மேஎந் தோன்றிச் சீருடைய விழுச் சிறப்பின்—பெரிய நன்மக்களிடத்தே மேலாய்த்தோன்றுகையினாலே புகழையுடைய விழுமியதலைமையினையும்,

விளைந்து முதிர்ந்த விழு முத்தின்—சூன்முற்றி ஒளிமுதிர்ந்த சீரியமுத்தினையும்,

இலங்கு வளை இருஞ் சேரி—விளங்குகின்ற சங்கினையுமுடைய பெரிய சங்குகுளிப்பாரிருப்பினையும்,

முத்தினையும் சங்கினையுமுடைய சேரியென்க.

கட்கொண்டிக் குடிப் பாக்கத்து—கள்ளாகிய உணவினையுடைத்தாகிய இழிந்த குடிகளையுடைய சீறூர்களையுமுடைய,

கொண்டி - கொள்ளப்படுதலின் உணவாயிற்று; கொள்ளையுமென்ப.

நற் கொற்கையோர் நசைப் பொருந — நன்றாகிய கொற்கையென்னும்ஊரிலுள்ளோர் நச்சுதலைச்செய்யும் பொருநனே,

இதனாற் கொற்கைக்குரியோனென்றார்.

சிறப்பினையும் (௧௬௪) சேரியினையும் (௧௬௫) பாக்கத்தினையு (௧௬௭) முடைய கொற்கை.

செற்ற தெவ்வர் கலங்கத் தலைச் சென்று அஞ்சுவரத் தட்கும் அணங்குடைத் துப்பின்—தாங்கள்செறப்பட்ட பகைவர்மனங்கலங்கும்படி அவர்களிடத்தேசென்று அவர்க்கு அச்சந்தோன்றத்தங்கும் வருத்தத்தையுடைத்தாகிய வலியினையும்,

கோழூன் குறைக் கொழு வல்சி — கொழுத்த இறைச்சியையுடைய கொழுத்திருக்கின்றசோற்றினையும்,

இதனைக் கூடவிட்டாக்குதலிற் கொழுவல்சியென்றார். கொழுவல்சி - கொழுவினாலாகிய வல்சியென்றுமாம். இஃது ஆகுபெயர்.

புலவு வில்—எய்த அம்புதன்னை மீண்டுந்தொடுத்தலிற் புலானாற்றத்தையுடைய வில்லினையும்,

---

* தொல்காப்பியம், பொருளதிகாரம், புறத்திணையியல், அ.

† நெடுஞ்செழியன் தலையாலங்கானத்துச் செருவென்றமையைப் புறப்பாட்டில் மிகவிரித்துக்கூறினர்.

பொலி கூவை—பொலிந்தகூவைக்கிழங்கினையும்,

கூவை - திரளுமாம்.

ஒன்றுமொழி—வஞ்சினங்கூறுதலையும்,

ஒலி இருப்பின்—ஆரவாரத்தையுடைய குடியிருப்பினையுமுடைய,

தென் பரதவர் போரேறே—தென்றிசைக்கண்வாழும் பரதவர்க்குப் போர்த்தொழிலைச்செய்யும் எருயவனே,

இதனாற் பரதவரைத் தனக்குப் படையாக அடிப்படுத்தினமை கூறினார்.

துப்பு (கசo) முதலியவற்றையுடைய பரதவரென்க.

பரதவர் - தென்றிசைக்கட்குறுநிலமன்னர். அது *"தென்பரதவர் மிடல்சாய, வடவடுகர் வாளோட்டிய" என்னும் புறப்பாட்டானுமுணர்க.

அரிய எல்லாம் எளிதினிற் கொண்டு—பிறர்க்கரிய நுகர்பொருள்களெல்லாம் எளிதாக நின்னூரிடத்தேயிருந்து மனத்தாற்கைக்கொண்டு,

உரிய எல்லாம் ஓம்பாது வீசி—அப்பொருளையெல்லாம் நினக்கென்று பாதுகாவாது ஊரிடத்தே யிருந்து பிறர்க்குக்கொடுத்து,

என்றது:—†"கொள்ளார் தேஎங் குறித்த கொற்றம்" கூறிற்று.

நனி புகன்று உறைதும் என்னாது ஏற்றெழுந்து—மிகவிரும்பி ஊரின்கண்ணேயிருந்துறையக் கடவேமென்றுகருதாதே பகைவர்மேற்செல்லுதலை ஏறட்டுக்கொண்டு போக்கிலே ஒருப்பட்டு,

இது ‡ வஞ்சிகூறிற்று.

பனி வார் சிமயக் கானம் போகி—பனியொழுகுகின்ற மலையிடத்தனவாகிய காடுகளைக்கடந்து,

சிமயம் - ஆகுபெயர்.

அகநாடு புக்கு—அவர்களுண்ணாடுகளிலே புகுந்து,

இதனால் § "தொல்லெயிற்கிவர்தல்" கூறினார்.

அவர் அருப்பம் வௌவி—அப்பகைவரரண்களைக் கைக்கொண்டு அதனாலும மையாமல்,

இது குடுமிகொண்ட மண்ணுமங்கலங் கூறிற்று. இதனால் அரசரரண்களை யழித்தமை கூறினார்.

[யாண்டுபல கழிய வேண்டுபுலத் திறுத்து:] வேண்டு புலத்துப் பல யாண்டுகழிய இறுத்து — நீஅழித்தநாடுகளிற் கொள்ளவேண்டு நிலங்களிலே பலயாண்டுகளும் போம்படி தங்கி,

மேம்பட மரீஇய வெல் போர்க் குரிசில்—அந்நிலங்கள் பண்டையின் மேலாதற்கு அடிப்படவிருந்த வெல்லும்போரினையுடைய தலைவனே,

இது பகைவர்நாட்டைத் தன்னுடாக்கினமைகூறிற்று.

உறு செறுநர் புலம் புக்கு—தொன்றுதொட்டுவந்த பகைவர்நிலத்தேவிட்டு,

---

* புறநானூறு, ௩௭அ.

† தொல்காப்பியம், பொருளதிகாரம், புறத்திணையியல், கஉ.

‡ வஞ்சி - மண்ணசையான் மேற்சேறல்.

§ தொல்காப்பியம், பொருளதிகாரம், புறத்திணையியல், கஉ.

அவர் கடி காவின் நிலை தொலைச்சி—அவர் காவலையுடைய பொழில்களின் நிற்கின்ற நிலைகளைக் கெடுத்து,

என்றது வெட்டியென்றவாறு.

இழிபு அறியாப் பெருந் தண்பணைக் குரூஉக் கொடிய எரி மேய—வளப்பங்குன்றுதலை ஒருகாலத்துமறியாத பெரிய மருதநிலங்களை நிறத்தையுடைய ஒழுங்கினையுடைய நெருப்புண்ண,

நாடெனும்பேர் காடாக — நாடென்னும்பெயர்போய்க் காடென்னும் பெயரைப்பெற,

ஆ சேந்த வழி மா சேப்ப—பசுத்திரள் தங்கின இடமெல்லாம் புலிமுதலியன தங்க,

ஊர் இருந்த வழி பாழாக—ஊர்களாயிருந்த இடங்களெல்லாம் பாழாய்க்கிடக்க,

ஊராரிருந்த இடமென்றுமாம்.

இலங்கு வளை மடமங்கையர் துணங்கை அம் சீர்த் தழூஉ மறப்ப — விளங்குகின்ற வளையினையும், மடப்பத்தினையுமுடையமகளிர் துணங்கைக்கூத்தினையும், அழகினையுடைய தாளவறுதியையுடைய குரவைக்கூத்தினையுமறப்ப,

தழூஉ - ஆகுபெயர்.

அவை இருந்த பெரும் பொதியிற் கவை அடிக் கடு நோக்கத்துப் பேய்மகளிர் பெயர்பு ஆட — சான்றோரிருந்த பெரிய அம்பலங்களிலே இரட்டையானஅடிகளையும் கடியபார்வைகளையுமுடைய பேயாகியமகளிர் உலாவியாட,

அணங்கு வழங்கும் அகல் ஆங்கண்—இல்லுறைதெய்வங்கள் உலாவும் அகன்ற ஊரிடத்து,

நிலத்து ஆற்றுங் குழூஉப் புதவின் — நிலத்திலுள்ளாரையெல்லாம் போக்கும் வாசல்காப்பாரையுடைய வாசலின்கண்ணேயிருந்து,

குழூஉ - ஆகுபெயர். இனிக் குடுமிதேய்ந்துபோதலின், மண்ணைக் கொழித்துவருமென்பாருமுளர்.

அரந்தைப் பெண்டிர் இனைந்தனர் அகவ—மனக்கவற்சியையுடைய பெண்டிர் வருந்திக்கூப்பிட,

கொழும் பதிய குடி தேம்பிச் செழுங் கேளிர் நிழல் சேர—வளவிய ஊர்களிடத்தனவாகிய குடிகளெல்லாம் பசியாலுலர்ந்து புறநாட்டிலிருக்கும் வளவிய சுற்றத்தார் தமக்குப் பாதுகாவலாகச் சென்று சேர,

நெடுநகர் வீழ்ந்த கரி குதிர்ப் பள்ளிக் குடுமிக் கூகை குராலொடு முரல—பெரியமாளிகைகளிலே வெந்துவீழ்ந்த கரிந்த குதிரிடங்களிலே சூட்டினையுடைய கூகைச்சேவல் பேட்டுடனேயிருந்து கதற,

கழுநீர் பொலிந்த கண்ணகன் பொய்கைக் களிறு மாய் செருந்தியொடு சண்பு அமன்று ஊர்தர—செங்கழுநீர்மிக்க இடமகன்ற பொய்கைகளிடத்தே யானைநின்றுமறையும் வாட்கோரையுடனே சண்பங்கோரையும் நெருங்கிவளர,

செருந்தி - நெட்டிக்கோரையுமாம்.

நல்லேர் நடந்த நசை சால் விளை வயற் பன்மயிர்ப் பிணவொடு கேழல் உகள—

நன்றாகிய எருதுகளுழுத நச்சுதலமைந்த விளைகின்ற வயலிடத்தே பலமயிரினையுடைய பெண்பன்றியுடனே ஆண்பன்றி ஓடித்திரிய,

பிணவென்னும் அகரவீற்றுச்சொல் வகரவுடம்படுமெய்பெற்றது. * "பன்றி புல்வாய் நாயென மூன்று-மொன்றிய வென்ப பிணவென் பெயர்க்கொடை" என்றார்.

[வாஅ ழாமையின் வழிதவக் கெட்டு:] தவ வழி வாழாமையிற் கெட்டு—மிக நின் ஏவல்செய்து வாழாமையினாலே கெட்டு,

இனித் தவக்கெட்டெனக் கூட்டி மிகக்கெட்டென்றுமாம்.

பாழ் ஆயின—பாழாய்விட்டன,

நின் பகைவர் தேஎம்—நின்னொடு பகைத்தலைச்செய்தவருடைய நாடுகள்,

[எழாஅத்தோ ளிமிழ்முழக்கின், மாஅத்தா ளுயர்மருப்பிற், கடுஞ்சினத்த களிறுபரப்பி:]

இமிழ் முழக்கின் மாத் தாள் உயர் மருப்பிற் கடுஞ்சினத்த களிறு பரப்பி—முழங்குகின்ற ஓசையையும் பெருமையையுடைய கால்களையும் தலைகளோங்கின கொம்புகளையுமுடைய கடியசினத்தவாகிய யானைகளை எங்கும்பரப்பி,

[விரிகடல் வியன்றானையொடு:] எழாத் தோள் (௧௪௪) விரி கடல் வியன் தானையொடு—முதுகிட்டார்மேற் செல்லாத தோளினையுடைய விரிகின்ற கடல்போலும் அகற்சியையுடைய படையோடே,

முருகு உறழத் தலைச் சென்று — முருகன் பகைவர்மேற் செல்லுமாறுபோலத் தடையறப் பகைவரிடத்தே சென்று,

முருகு - தெய்வத்தன்மை; ஆகுபெயராய்நின்றது.

அகல் விசும்பின் ஆர்ப்பு இமிழ—அகன்ற ஆகாயத்தின்கண்ணே படையெழுந்த ஆரவாரமொலிப்ப,

விசும்பெனவே ஆகுபெயராய்த் தேவருலகையுணர்த்திற்று.

பெயல் உறழக் கணை சிதறி — மழையோடே மாறுபடும்படி அம்புகளைத்தூவி,

பல புரவி நீறு உகைப்ப — பலகுதிரைத்திரள் ஓடுகின்றவிசையாற் றுகள்களை எழுப்ப,

வளை நரல—சங்கமுழங்க,

வயிர் ஆர்ப்ப—கொம்பொலிப்ப,

பீடு அழியக் கடந்து அட்டு—பெருமைகெடும்படி வென்று கொன்று,

அவர் நாடு கெட எயில் வௌவி—அவருடைய நாடுகளழியும்படியாக அவரிருக்கின்ற மதிலைக்கொண்டு,

சுற்றமொடு தூ அறுத்தலின்—அவர்களுக்கு உதவிசெய்யும் சுற்றத்தாரோடே கூட அவர்கள்வலியைப் போக்குதலாலே,

செற்ற தெவ்வர் நின்வழி நடப்ப—நின்னாற் சிறிதுசெறப்பட்டபகைவர் நின் ஏவல்கேட்டு நடக்கையினாலே,

வியன் கண் முது பொழில் மண்டிலம் முற்றி—அகலத்தை இடத்தேயுடைய பழைய நாவலந்தீவின்கணுள்ளவாகிய சோழமண்டலம் தொண்டைமண்டலமென்கின்றமண்டலங்களை நினதாக வளைத்துக்கொண்டு,

---

* தொல்காப்பியம், பொருளதிகாரம், மரபியல், ௫அ.

மண்டலம் மண்டிலமெனமருவிற்று.

அரசியல் பிழையாது—நூல்களிற்கூறிய அரசிலக்கணத்திற்றப்பாமல்,

[அறநெறி காட்டிப், பெரியோர் சென்ற வடிவழிப் பிழையாது:] பெரியோர் சென்ற அடிவழிப் பிழையாது அறநெறி காட்டி—நின்குலத்திற் பெரியோர்நடந்த அடிப்பாட்டின்வழியைத் தப்பாமல் அறநெறியிருக்கும்படி இதுவென்று அவர்களுக்கு விளக்கி,

நனிபுகன்றுறைதுமென்னாது ஏற்றெழுந்து (௧௪௭) களிறுபரப்பித் (௧௭௧) தானையோடே (௧௮௦) தலைச்சென்று (௧௮௧) அரசமண்டிலமூற்றிச் (௧௯௦) செற்ற தெவ்வர் நின்வழிநடக்கையினாலே (௧௮௯) நீ நட்டவர்குடியையுயர்க்குவை (௧௩௧) யாகையினாலே அவர்களுக்கு அறநெறிகாட்டிப் (௧௯௧) பின்னர் அம்மண்டலங்களைச் சூழவிருந்த குறுநிலமன்னர் அரண்களிலுள்ளனவற்றை எளிதிற்கொண்டு (௧௪௫) வீசிப் (௧௪௬) போகிப் (௧௪௮) புக்கு அவாருப்பங்களைவெளவிப் (௧௪௯) பின்னர் உறுசெறுநர் (௧௫௨) நின்வழிவாழாமையினாலே (௧௭௫) அவர்புலம்புக்கு (௧௫௨) நீ நரையுருமேறனையை (௬௩) யாகையினாலே அரசியல் பிழையாமல் (௧௯௧) ஆர்ப்பிமிழ (௧௮௨)நீறுகைப்ப (௧௮௪) நரல ஆர்ப்பக் (௧௮௫) கணைசிதறித் (௧௮௩) தொலைச்சி(௧௫௩) அவரைக்கடந்து அட்டு (௧௮௬) அவரெயிலைவெளவி (௧௮௭) அவரைத் துவறுத்தலின் (௧௮௮) அப்பகைவர்தேஎம் (௧௭௬) எரிமேயக் (௧௫௫) காடாக (௧௫௬) மாசேப்பப் (௧௫௭) பாழாக (௧௫௮) மறப்ப (௧௬௦) ஆட (௧௬௩) அகவச் (௧௬௬) சேர (௧௬௮) மூரல (௧௭௦) ஊர்தர (௧௭௨) உகளக் (௧௭௪) கெட்டுப் (௧௭௫) பாழாயின (௧௭௬); அங்ஙனம் பாழாயினபின்பு நீ செற்றவரரசு பெயர்க்குவை (௧௩௨) யாகையினாலே வேண்டுபுலத்திறுத்து (௧௫௦) அந்நாடுகள் மேம்படுநற்குமருவின குரிசில் (௧௫௧) எனவினை முடிக்க.

[குடமுதற் றோன்றிய தொன்றுதொழு பிறையின், வழிவழி சிறக்கநின் வலம்படு கொற்றம்] குடமுதல் தோன்றிய தொன்று தொழு பிறையின் நின் வலம் படு கொற்றம் வழிவழி சிறக்க—மேற்றிசைக்கட்டோன்றிய நின்குலத்திற்குப் பழைதாகிய எல்லாருந் தொழும்பிறை நாடோறுஞ்சிறக்குமாறுபோல நின்னுடைய வெற்றியாலே நின்பின்னுள்ளோர்க்குண்டாங்கொற்றம் அவர்கள்வழிவழியாக மிகுவதாக;

[குணமுதற் றோன்றிய வாரிருண் மதியிற், றேய்வன கெடுகநின் றெவ்வ ராக்கம்:] குணமுதல் தோன்றிய ஆரிருள் மதியின் நின்தெவ்வர் ஆக்கம் தேய்வன கெடுக—கீழ்த்திசைக்கட்டோன்றிய நிறைந்த இருளைத்தருமதி நாடோறுந் தேயுமாறுபோல நின்பகைவருடையஆக்கம் நாடோறுந் தேய்வனவாய்க் கெடுவனவாக;

உயர் நிலை உலகம் அமிழ்தொடு பெறினும் பொய் சேண் நீங்கிய வாய் நட்பினையே— ஒருபொய்யாலே உயர்ந்தநிலைமையையுடைய தேவருலகை அவர்நுகரும் அமுதத்தோடே பெறுவையாயினும் அவற்றைத்தருகின்ற பொய் நின்னைக்கைவிட்டுநீங்க மெய்யுடனே நட்புச்செய்தலையுடையை;

இனிப் பொய்சே ணீங்கிய வாய்நட்பினையே யென்று பாடமாயின், மெய்யை நடத்தலைச் செய்தனையென்க.

முழங்கு கடல் ஏணி மலர் தலை உலகமொடு உயர்ந்த தேஎத்து விழுமியோர் வரினும் பகைவர்க்கு அஞ்சிப் பணிந்து ஒழுகலையே—முழங்குகடலாகிய எல்லையையுடைய அகன்றவிடத்தையுடைய உலகத்துள்ளாருடனே உயர்ந்த தேவருலகத்துத் தேவரும் பகைவராய்வரினும் பகைவர்க்கு அஞ்சித் தாழ்ந்தொழுகலைச்செய்யாய்;

தென்புல மருங்கின் விண்டு நிறைய வாணன் வைத்த விழுநிதி பெறினும் பழி நமக்கு ஒழுக என்னாய்—தென்றிசைநிலத்தின் மலையெல்லாம் நிறையும்படி வாணனென்னுஞ்சூரன்வைத்த சீரிய பொருட்டிரள்களினைப் பெறுவையாயினும் பிறர் கூறும்பழி நமக்கு வருவதாகவென்று கருதாய்;

விழுநிதி ஈதல் உள்ளமொடு இசை வேட்குவையே— சீரிதாகிய பொருளைக் கொடுத்தலையுடைத்தாகிய நெஞ்சுடனே புகழை விரும்புவை;

அன்னாய்— அத்தன்மையையுடையாய்,

[நின்னொடு முன்னிலை யெவனோ:] முன்னிலை நின்னொடு எவனோ— ஐம்பொறிகளுக்கும் நுகரப்படுவனவாய் முன்னிற்கப்படுவனவாகிய இந்நுகர்பொருள்கட்கு நின்னோடு என்னவுறவுண்டு;

நின்னென்றது சீவான்மாவை. முன்னிலை - ஆகுபெயர்.

[கொன்னொன்று கிளக்குவ லடுபோ ரண்ணல், கேட்டிசின் வாழி கெடுகநின் னவலம்:]

நின் அவலம் கெடுக—நின்னிடத்துண்டாகியமாயை இனிக்கெடுவதாக;

அடு போர் அண்ணல்— அம்மாயையைக்கொல்கின்ற போர்த்தொழில்வல்ல தலைவனே,

கொன் ஒன்று கிளக்குவன்— பெரிதாயிருப்பதொருபொருளை யான்கூறுவன்; அஃது என்னாற்காட்டுதற்கரிது;

என்றது கந்தழியினை.

கேட்டிசின்— அதனைத் தொல்லாணை நல்லாசிரியரிடத்தே கேட்பாயாக;

வாழியென்பதனைச் சுற்றமொடுவிளங்கி (உஎ0) யென்பதன்பின்னேகூட்டுக.

[கெடாது நிலைஇயர்நின் சேண்விளங்கு நல்லிசை:] சேண் விளங்கு நின் நல்லிசை கெடாது நிலைஇயர்—சேட்புலமெல்லாஞ் சென்றுவிளங்கும் நின்னுடைய நல்ல புகழ் ஒருகாலமுங்கெடாதே நிலைபெறுவதாக;

[தவாப்பெருக்கத் தறாயாண, ரழித்தானாக் கொழுந்திற்றி, யிழித்தானாப் பலசொன்றி, யுண்டானாக் கூர்நறவிற் றின்றாறா வினைவைக, னிலனெடுக் கல்லா வொண்பல் வெறுக்கைப், பயனற வறியா வளங்கெழு திருநகர்:]

தவாப் பெருக்கத்து அறா யாணர் வளம் கெழு திரு நகர்—கெடாத பெருக்கத்தினையுடைய நீங்காத புதுவருவாயாலே செல்வம்பொருந்தின திருமகளையுடைய நகர்,

அழித்து ஆனாக் கொழுந்திற்றி தின்று— அழிக்கப்பட்டு விருப்பமையாத கொழுவிய தசையைத்தின்று,

“ஆடழிக்க” என்ப.

ஆனாப் பல சொன்றி இழித்து ஆனாக் கூர்நறவின் உண்டு—விருப்பமையாத பலவகைப்பட்ட சோற்றைத் தின்றுகூறிக் களிப்பமையாத மிக்க கள்ளைஉண்டு,

ஆறா இனப் பாணர் (உகக)—அவ்விரண்டிலும் விருப்பமையாத திரட்சியையுடைய பாணரென்க.

தின்று உண்டு ஆறா இனப் பாணரென்க.

வைகல்—நாடோறும்,

நிலன் எடுக்கல்லா ஒண் பல் வெறுக்கை—நிலஞ்சுமக்கமாட்டாத ஒள்ளிய பல வாகிய பொருட்டிரள்களையும்,

என்றது பூண்களையும், பொன்னையும்.

பயன் அறவு அறியா நகர்—எக்காலமும் பயன்கெடுதலறியாத நகர்,

நரம்பின் முரலும் நயம் வரும் முரற்சி விறலியர் வறுங்கைக் குறுந்தொடி செறிப்ப—யாழ்வாசித்தாற்போலப் பாடும் நயப்பாடுதோன்றும் பாட்டினையுடைய விறல்பட ஆடுதலையுடையார் தம்முடைய பூணணியாத கைகளிலே குறியதொடிகளையிட,

* "நரம்பொடு வீணைநாவி னவின்றதோ வென்று நைந்தார்" என்றார்பிறரும்.

பாணர்உவப்பக் களிறு பல தரீஇ—பாணர்மகிழும்படி யானைகள்பலவற்றையுங் கொடுத்து,

நகரிலே யிருந்து (உகக) நாடோறும் (உகச) விறலியர் தொடிசெறியாநிற்பப் (உகஅ) பாணருவப்ப (உகஉ) வெறுக்கையையும் (உகரு) யானையையுங் கொடுத்தென்க.

தரீஇ என்றதனைச் † "செலவினும் வரவினும்" என்னும் பொதுச்சூத்திரத்தாற்கொள்க.

கலந்தோர் உவப்ப எயில் பல கடைஇ—தன்னுடன் நட்புக்கொண்டோர் மனமகிழும்படி அழித்த அரண்களிற்கொண்ட பலபொருள்களையும் அவர்க்குச் செலுத்திக்கொடுத்து,

என்றது - அவர் வேண்டாவென்றுமறுக்கவும் தாம் வலியப்போகவிட்டென்றவாறு.

மறம் கலங்கத் தலைச் சென்று—பகைவர்மறம் நிலைகுலையும்படி அவர்களிடத்தே சென்று,

வாள் உழந்து அதன் தாள் வாழ்த்தி—அவர்க்கு வாட்போரிலே வருந்ினபடியாலே அவ்வருத்தத்தினாற் பின்பும் அதன்கட்பிறக்கின்ற முயற்சியைவாழ்த்தி,

என்றது - வாட்போரின்கட்பெற்ற இனிமையைப் பின்னும்விரும்பி அதிலேமுயல்கின்றாரென வீரச்சிறப்புக்கூறிற்றும்.

உழந்தென்னுஞ் செய்தென்னெச்சம் காரணப்பொருட்டு. ‡"விழுப்புண் படாதநா ளெல்லாம் வழுக்கினுள் - வைக்குந்தன் னாளை யெடுத்து." என்றார் பிறரும். உழந்த தன்னெனப் பெயரெச்சமாயின், தன்னென்னுமொருமை மேல்வருகின்ற மன்னர் (உருச) என்னும் பன்மைக்காகாமையுணர்க.

நாள் ஈண்டிய நல்லகவர்க்குத் தேரோடு மாசிதறி—விடியற்காலத்தே வந்திரண்ட அரசர்விரும்பப்பட்ட சூதர்க்குத் தேருடனே குதிரைகளையும் பலவாகக் கொடுத்து,

---

* சீவகசிந்தாமணி, காந்தருவதத்தையாரிலம்பகம், கஙக:—"கருங்கொடிப்புருவ மேறா கயனெடுங் கண்ணு மாடா - வருங்கடி மிடறும் விம்மா தணிமணி யெயிறுந் தோன்றா - விருங்கடற் பவளச் செவ்வாய் திறந்திவள் பாடி னாளோ - நரம்பொடு வீணை நாவி னவின்றதோ வென்று நைந்தார்."

† தொல்காப்பியம், சொல்லதிகாரம், கிளவியாக்கம், உஅ.

‡ திருக்குறள், படைச்செருக்கு, ங.

என்றது, * "தாவி னல்லிசை கருதிய கிடந்தோர்க்குச் - சூத ரேத்திய துயிலெடை நிலையும்" என்னும்விதியாற் சூதர் இருசுடர்தொடங்கி இன்றுகாறும் வருகின்ற தங்குலத்துள்ளோர்புகழை அரசர் கேட்டற்குவிரும்புவரென்றுகருதி விடியற்காலத்தே பாசறைக்கண்வந்து துயிலெடைபாடுவரென்பது ஈண்டுக்கூறிற்றும்.

அகவரென்றார்; குலத்தோரெல்லாரையும் அழைத்துப் புகழ்வரென்பது பற்றி; ஆகுபெயர்; †"அகவல்" போல.

இனி வைகறைபாடும் பாணரென்பாருமுளர்.

வாழ்த்தித் திரண்டஅகவரென்க.

[சூடுற்ற சுடர்ப்பூவின், பாடுபுலர்ந்த நறுஞ்சாந்தின், விழுமிய பெரியோர் சுற்றமாகக், கள்ளி னிரும்பைக் கலஞ்செல வுண்டு:] கள்ளின் இரும் பைக்கலம் செல உண்டு சூடுற்ற சுடர்ப் பூவின் பாடு புலர்ந்த நறுஞ்சாந்தின் விழுமிய பெரியோர் சுற்றமாக—கள்ளினையுடைத்தாகிய பெருமையினையுடைய குப்பிகள் வற்றும்படியாகக் கள்ளினையுண்டு சூடுதலுற்ற விளக்கத்தையுடைத்தாகிய வஞ்சியினையும் பூசினபடியே புலர்ந்த நறிய சந்தனத்தினையுமுடைய, சீரியபடைத்தலைவரைத் தமக்குச் சுற்றத்தாராகக்கொண்டு,

உண்டென்னுஞ் செய்தெனெச்சம் உடையவென்னும் வினைக்குறிப்போடு முடிந்தது.

பணிந்தோர் தேஎந் தம்வழி நடப்ப—தம்மைவழிபட்டோருடைய தேசங்கள் தம்மேவலைக்கேட்டு நடக்கையினாலே,

பணியார் தேஎம் பணித்துத் திறை கொண்மார்—தம்மை வழிபடாதோருடைய தேசங்களைத் தம்மேவல் கேட்கும்படிபண்ணி அவர்களைத் திறைவாங்குதற்கு,

பருந்து பறக்கல்லாப் பார்வற் பாசறை—உயரப் பறக்கும் பருந்துகளும் பறத்தலாற்றாத உயர்ச்சியையுடைய அரண்களையுடைய பாசறைக்கண்ணே,

பார்வல் - ஆகுபெயர்.

படு கண் முரசங் காலை இயம்ப—ஒலிக்கின்ற கண்ணையுடைய பள்ளியெழுச்சி முரசம் நாட்காலத்தே ஒலிப்பவிருந்து,

வெடி படக் கடந்து—பகைவர்படைக்குக் கேடுண்டாக வென்று,

வெடி - ஓசையுமாம்.

வேண்டு புலத்து இறுத்த—பின்னும் அழிக்கவேண்டுமென்ற நிலங்களிலேசென்றுவிட்ட,

பணை கெழு பெருந் திறற் பல் வேல் மன்னர்—வெற்றிமுரசுபொருந்தின பெரிய வலியினையும் பலவேற்படையினையுமுடைய அரசர்கள்,

[கரைபொரு திரங்குங் கனையிரு முந்நீர்த், திரையிடு மணலினும் பலரே:] கனை இரு முந்நீர்க் கரை பொருது இரங்கும் திரை இடு மணலினும் பலரே—செறிதலையுடைய கரிய கடலிற் கரையைப் பொருது ஒலிக்கும் திரைகுவிக்கின்ற மணலினும் பலரே.

ஏகாரம் - பிரிநிலை.

---

* தொல்காப்பியம், பொருளதிகாரம், புறத்திணையியல், ௩௬.
† ,, ,, செய்யுளியல், ௮௧.

உரை செல மலர் தலை உலகம் ஆண்டு கழிந்தோரே—புகழ் எங்கும்பரக்கும்படி அகன்ற இடத்தையுடைய உலகங்களைத் தமதேவல்களை நடத்தி மக்கட்குரிய மனவுணர்வின்மையிற் பிறப்பறமுயலாது பயனின்றி மாண்டோர்,

ஏகாரம் - ஈற்றசை. *"மக்க டாமே யாறறி வுயிரே" என்றதனால், மனவுணர்வின்றியென்றும்.

தரீஇய (௨௧௧) கடைஇச் (௨௨௦) சிதறிப் (௨௨௪) பணிந்தோர்தேஎந் தம்வழிநடக்கையினாலே (௨௨௬) பணியார்தேஎம் பணித்துத் திறைகொள்ளுதற்குப் (௨௩௦) பெரியோர் சுற்றமாகக்கொண்டு (௨௨௭) பாசறையிலே (௨௩௧) முரசியம்பஇருந்து (௨௩௨) கடந்துஇறுத்த (௨௩௩) மன்னர் (௨௩௪) உலகமாண்டுகழிந்தோர் (௨௩௭) திரையிடுமணலினும்பலர் (௨௩௬) எனமுடிக்க.

இது † "மாற்றருங் கூற்றஞ் சாற்றிய பெருமை" அன்றிப் பிறவியறமுயலாமையிற் கழிந்தமைகூறிற்று.

அதனால்—பயனின்மையாலே,

[குணகடல் கொண்டு குடகடன் முற்றி, யிரவு மெல்லையும் விளிவிட னறியா, தவலு மிசையு நீர்த்திரள் பீண்டிக், கவலையங் குழும்பி னருவி யொலிப்பக், கழைவளர் சாரற் களிற்றின நடுங்க, வரைமுத லிரங்கு மேறொடு வான்ஞெமிர்ந்து, சிதரற் பெரும்பெயல் சிறத்தலின்:]

வான் குணகடல் கொண்டு குடகடல் வரைமுதல் முற்றி — மேகங் கீழ்த்திசைக் கடலிடத்தே நீரைமுகந்து மேற்றிசைக் கடலருகின் மலையிடத்தே தங்கி,

இரவும் எல்லையும் விளிவிடன் அறியாது—இரவும்பகலும் ஒழிந்தஇடத்தை அறியாது,

அவலும் மிசையும் நீர்த் திரள்பு ஈண்டிக் கவலை அம் குழும்பின் அருவி ஒலிப்ப —பள்ளமும் மேடுமாகிய பலநிலத்துண்டாகிய நீரினாலே திரண்டு சேரக்குவிந்து கவலைக்கிழங்கு கல்லின அழகியகுழியிலேவீழ்ந்து அருவியொலிக்கும்படி,

கழை வளர் சாரற் களிற்றினம் நடுங்க இரங்கும் ஏறொடு ஞெமிர்ந்து—மூங்கில் வளர்ந்த மலைப்பக்கத்திலே யானைத்திரள் நடுங்கும்படி ஒலிக்கும் உருமேற்றோடே பரந்து,

சிதரற் பெரும்பெயல்—சிதறுதலையுடைய பெருமழை,

சிறத்தலின்—மிகுகையினாலே,

வான் முற்றி ஞெமிர்ந்து அருவியொலிக்கும்படி பெரும்பெயல் விளிவிடனறியாது சிறத்தலினெனமுடிக்க.

[தாங்காது, குணகடற் கிவர்தருங் குருஉப்புன லுந்தி, நிவந்துசென் னீத்தங் குளங்கொளச் சாற்றி:] தாங்காது உந்தி நிவந்து செல் நீத்தம் குளம் கொளச் சாற்றிக் குணகடற்கு இவர்தரும் குருஉப்புனல்—யாறுகள் தாங்காமல் யாற்றிடைக்குறையிலே ஓங்கிச்செல்கின்றபெருக்கைக் குளங்கள்கொள்ளும்படி நிறைத்துக் கீழ்த்திசைக் கடலுக்குப் பரந்துசெல்லும் நிறத்தையுடைய நீராலே,

---

* தொல்காப்பியம், பொருளதிகாரம், மரபியல், ௩௩.
† ,, ,, புறத்திணையியல், ௨௪.

களிறு மாய்க்கும் கதிர்க் கழனி—யானைகள் நின்றால் அவற்றைமறைக்கும்படி விளைந்த கதிரையுடைய கழனியிலும்,

ஒளிறுஇலஞ்சி—விளங்குமடுக்களினும்,

அடை நிவந்த முள் தாள சுடர்த் தாமரை—இலைக்குமேலான முள்ளையுடைய தாள்களையுடையவாகிய ஒளியினையுடைய தாமரைப்பூவினையும்,

கள் கமழும் நறு நெய்தல்—தேனுறும் நறிய நெய்தற்பூவினையும்,

வள் இதழ் அவிழ் நீலம்—பெருமையையுடைய இதழ்விரிந்த நீலப்பூவினையும்,

மெல்லிலை அரி ஆம்பலொடு—மெல்லிய இலையினையும் வண்டுகளையுமுடைய ஆம்பற்பூவோடே,

அரி - மென்மையுமாம்.

வண்டு இறை கொண்ட கமழ் பூம் பொய்கை— வண்டுகள் தங்குதல்கொண்ட மணநாறும் பிறபூக்களையுமுடைய பொய்கைகளிலும்,

கம்புட் சேவல் இன்றுயில் இரிய வள்ளை நீக்கி வயமீன் முகந்து—கம்புட்கோழி இனியவுறக்கங்கெடும்படி வள்ளைக்கொடிகளைத் தள்ளி வலியையுடையமீன்களை முகந்துகொண்டு,

கழனியிலும் (உசஎ) இலஞ்சியிலும் (உசஅ) பொய்கைகளினும் (உருங) மீன்முகந்துசாற்றிய வலைஞரென்க.

கொள்ளை சாற்றிய கொடுமுடி வலைஞர்— விலைகூறிவிற்ற கொடியமுடிகளையுடைய வலையான்மீன்பிடிப்பார்,

வேழப் பழனத்து நூழிலாட்டு ஓதை (உருஅ)— கொறுக்கச்சியையுடைய மருதநிலத்துமீனைக் கொன்றுகுவித்தலாற் பிறந்தஓசை,

கரும்பின் எந்திரம் ஓதை—கரும்பிற்கிட்ட ஆலையிடத்தோசை,

கட்பின் ஓதை—களைபறிப்பிடத்தோசை,

அள்ளல் தங்கிய பகடு உறு விழுமம் கள் ஆர் களமர் பெயர்க்கும் ஆர்ப்பே—சேற்றலான் அள்ளலிலே வலியற்றுத்தங்கிய எருதுற்றவருத்தத்தைக் கள்ளையுண்ணுங் களமர் பெயர்க்குமாரவாரம்,

ஒலிந்த பகன்றை விளைந்த கழனி வன்கை வினைஞர் அரிப் பறை—தழைத்த பகன்றையினையுடைய நெல்லுமுற்றியகழனியில் அந்நெல்லை வலியகையினாலே அறுப்பாருடைய அரித்தெழுகின்ற பறையோசை,

இன்குரல் தளி மழை பொழியுந் தண் பரங்குன்றிற் கலி கொள் சும்மை—இனியஓசையினையுடைய துளிகளையுடைய மேகந்தங்கும் குளிர்ந்த திருப்பரங்குன்றில் விழாக்கொண்டாடுமாரவாரம்,

*"வயிரியர், முழவதிர்ந் தன்ன முழக்கத் தேஎறு" என்றார்பிறரும்.

ஒலி கொள் ஆயம் ததைந்த கோதை தாரொடு பொலியப் புணர்ந்து உடன் ஆடும் இசையே — புதுநீர்விழவின் ஆரவாரத்தைத் தம்மிடத்தே கொண்ட மகளிர்தி

---

* அகநானூறு, நித்திலக்கோவை, ௩௨எ:—"வழையமை யடுக்கத்து வலனேர்பு வயிரியர்-முழவதிர்ந் தன்ன முழக்கத் தேஎறு-ரவுப்பெயல் பொழிந்த நள்ளென் யாமத்-தரவின் பைந்தலை யிடறிப் பானு-ளிரவின் வந்தெம் மிடைமுலை முயங்கி"

ரள் தம்மிடத்து நெருங்கினகோதை தங்கணவர்மார்பின் மாலையுடனே அழகுபெறக் கூடி அவர்களுடனே நீராடுமோசை,

அனைத்தும் அகல் இரு வானத்து இமிழ்ந்து இனிது இசைப்ப—அவ்வோசை முழுவதூஉம் தன்னையொழிந்தபூதங்கள் விரிதற்குக்காரணமாகிய பெருமையையுடைய ஆகாயத்தேசென்று முழங்கி ஆண்டுவாழ்வார்க்கு இனிதாகவொலிப்ப,

குருகு நரல மனை மரத்தால் மீன் சீவும் பாண் சேரியொடு— குருகென்னும்பறவைகள் கூப்பிடும்படி மனையிடத்து மரங்கடோறும் மீனைத்திருத்தும் பாணர்குடியிருப்பிற் பாடலாடலால் எழுந்த ஓசையோடே,

மருதம்சான்ற— ஊடலாகிய உரிப்பொருளமைந்த,

தண் பணை சுற்றி— மருதநிலஞ் சூழப்பட்டு,

ஒருசார்— ஒருபக்கம்,

ஒருசார் (உஎ0) சேரியிலோசையோடே (உசுகூ) ஓதை (உடு அ) ஆர்ப்புப் (உசு0) பறையோசை (உசுஉ) கம்மை (உசுச) இசையாகிய அவ்வோசைமுழுவதும் (உசுசு) இசைக்கும்படி (உசுஎ) தண்பணைசுற்றப்பட்டு (உஎ0) என்க.

சிறுதினை கொய்ய— சிறியதினையையறுக்க,

கவ்வை கறுப்ப— எள்ளிளங்காய் முற்ற,

கருங்கால் வரகின் இருங்குரல் புலர—கரியதாளினையுடைய வரகினது கரிதாகியகதிர் முற்ற,

ஆழ்ந்த குழும்பில் திரு மணி கிளர—ஆழ்ந்தகுழியிலே திருவினையுடையமணி கிடந்துவிளங்க,

[எழுந்த கடற்றி னன்பொன் கொழிப்பப், பெருங்கவின் பெற்ற சிறுதலை நெளவி, மடக்கட் பிணையொடு மறுகுவன வுகள:] பெருங் கவின் பெற்ற சிறு தலை நெளவி எழுந்த கடற்றில் நன்பொன் கொழிப்ப மடக் கட் பிணையொடு மறுகுவன உகள—பெரிய அழகைப்பெற்ற சிறியதலையினையுடைய நெளவிமான் வளர்ந்தகாட்டில் மாற்றற்ற பொன்மேலேயாம்படி மடப்பத்தையுடைத்தாகிய கண்ணினையுடைய பிணையோடே சுழல்வனவாய்த்துள்ள,

சுடர்ப் பூங் கொன்றை தாஅய நீழல்—ஒளியினையுடையவாகிய பூக்களையுடைய கொன்றைபரந்த நிழலிடத்தே,

பாஅயன்ன பாறை அணிந்து— பரப்பினலொத்த பாறை அழகுபெற்று,

[நீலத் தன்ன பைம்பயிர் மிசைதொறும், வெள்ளி யன்ன வொள்வீ யுதிர்ந்து, சுரிமுகிழ் முசுண்டையொடு முல்லை தாஅய்:] நீலத்தன்ன பைம்பயிர் மிசைதொறும் சுரிமுகிழ் முசுண்டையொடு முல்லை வெள்ளி அன்ன ஒள்வீ உதிர்ந்து தாய்—நீலமணியையொத்த பசியபயிர்களினிடங்கடோறும் முறுக்குண்ட அரும்புகளையுடைய முசுண்டையுடனே முல்லையினுடையவெள்ளியினிறத்தையொத்த ஒள்ளியபூக்கள் உதிர்ந்து பரந்து,

[மணிமருளனைய்த லுறழக் காமர், துணிநீர் மெல்லவற் றொய்யிலொடு மலர, வல்லோன் றைஇய வெறிக்களங் கடுப்ப:] வல்லோன் தைஇய வெறிக்களம் கடுப்பக் காமர் துணி நீர் மெல்லவல் மணி மருள் நெய்தல் தொய்யிலொடு உறழ மலர—இழைத்தல்வல்லவன் இழைத்த கூத்தினையுடைய களத்தையொப்ப விருப்பத்தையுடைய

தெளிந்த நீரையுடைத்தாகிய நெகிழ்ந்த பள்ளத்திலே நீலமணியென்றுமருளும் நெய்தல் தொய்யிற்கொடியோடே மாறுபட மலர,

முல்லை சான்ற புறவு அணிந்து ஒருசார்— இருத்தலாகிய உரிப்பொருளமைந்த காடுசூழ்ந்து ஒருபக்கம்,

ஒருசார் (உஅ௫) அணிந்து (உஎஅ) தாய்க் (உஅக) கொய்யக் கறுப்பப் (உஎக) புலரக் (உஎஉ) கிளர (உஎ௩) உகள (உஎ௪) மலரப் (உஅ௩) புறவுசூழப்பட்டு (உஅ௫) என முடிக்க.

* "பன்முறையானும்" என்பதனாற் பலவினையெச்சம் விராய் அடுக்கி அணிந்தென்னும்வினை கொண்டன.

நறுங்காழ் கொன்று கோட்டின் வித்திய குறுங்கதிர்த் தோரை— நறிய அகிலையும் சந்தனத்தையும்வெட்டி மேட்டுநிலத்தேவிதைத்த குறியகதிர்களையுடைய தோரைநெல்லும்,

நெடுங் கால் ஐயவி— நெடியதாளினையுடைய வெண்சிறுகடுகும்,

ஐவன வெண்ணெலொடு அரில் கொள்பு நீடி— ஐவனநெல்லென்னும் வெள்ளியநெல்லோடே பிணக்கங்கொண்டு வளரப்பட்டு,

இஞ்சி மஞ்சட் பைங்கறி பிறவும் பல்வேறு தாரமொடு கல்லகத்து ஈண்டி— இஞ்சியும் மஞ்சளும் பசுத்தமிளகுகொடியும் ஒழிந்த பலவாய்வேறுபட்டபண்டங்களும் கற்றரையிடத்தே குவியப்பட்டு,

தினை விளை சாரற் கிளி கடி பூசல்— தினையும்விளையப்படுகின்ற மலைப்பக்கத்திற் படியுங் கிளியையோட்டும் ஆரவாரம்,

நீடி ஈண்டியென்னுஞ் செய்தெனெச்சம் விளையுமென்னும் பிறவினைகொண்டன; † "அம்முக் கிளவி" என்னுஞ் சூத்திரவிதியால்.

மணிப் பூ அவரைக் குருஉத்தளிர் மேயும் ஆமா கடியுங் கானவர் பூசல்—பன்மணிபோலும்பூவினையுடைய அவரையினது நிறவியதளிரைத் தின்னும் ஆமாவையோட்டுங் கானவருடைய ஆரவாரம்,

சேணோன் அகழ்ந்த மடி வாய்ப் பயம்பின் வீழ் முகக் கேழல் அட்ட பூசல்— மலைமிசையுறையுங் குறவன்கல்லப்பட்ட மூடினவாயையுடைய பொய்க்குழியிலேவிழும் பக்குவத்தினையுடைய ஆண்பன்றியைக் கொன்றதனாலுண்டான ஆரவாரம்,

சேணோன் - இழிகுலத்தோனாகியவன் அகழ்ந்தபயம்பென்பாருமுளர்.

கருங்கால் வேங்கை இருஞ்சினைப் பொங்கர் நறும் பூக் கொய்யுங் கானவர் (உ௯௫) பூசல்— கரியதாளினையுடைய வேங்கையிடத்துப் பெரியகவடுகளிற் றோன்றிய சிறியகொம்புகளிற்பூத்த நறியபூவைப்பறிக்குமகளிர் புலிபுலியென்றுகூறுமாரவாரம்,

இருங் கேழ் ஏறு அடு வயப் புலிப் பூசலொடு—கரியநிறத்தையுடைய பன்றியைக் கொல்லுகின்ற வலியினையுடைய புலியினது ஆரவாரத்தோடே,

ஏறு ‡ - ஆணேறுமாம்.

---

* தொல்காப்பியம், சொல்லதிகாரம், வினையியல், ௯௪.

† ,, ,, வினையியல், ௯௬,

‡ ஆனையுமாமென்று சிலபிரதிகளிலுள்ளது.

அனைத்தும்—முழுவதும்,

[இலங்குவெள் ளருவியொடு சிலம்பகத் திரட்டக், கருங்காற் குறிஞ்சி சான்ற வெற்பணிந், தருங்கடி மாமலை தழீஇ:]

இலங்கு வெள் அருவியொடு கருங்கால் வெற்பு அணிந்து—விளங்குகின்ற வெள்ளிய அருவிவீழ்கின்றவற்றாலே கரிய நீரோடுங் கால்களையுடைய பக்கமலைகள்சூழ்ந்து,

சிலம்பகத்து இரட்ட—மலையிடத்தே மாறிமாறியொலிப்ப,

குறிஞ்சி சான்ற— புணர்ச்சியாகிய உரிப்பொருளமைந்த,

அருங்கடி மாமலை தழீஇ— பெறுதற்கரிய சிறப்பினையுடைய பெரியமலை தழுவப்பட்டு,

ஒருசார்—ஒருபக்கம்,

ஒருசார் (௩0௧), அருவியாற் (உ௯௯) கருங்காலையுடையவெற்பணிதலாலே (௩00) நீடி (உ௮௮) ஈண்டி (உ௯0) விளையுஞ் சாரலிற் கிளிகடிபூசல் (உ௯௧) கானவர்பூசல் (உ௯௩) அட்டபூசல் (உ௯௫) கொய்யும்பூசலாகிய (உ௯௭) அனைத்துப்பூசலும் புலிப்பூசலோடே (உ௯௮) சிலம்பகத்திரட்டக் (உ௯௯) குறிஞ்சிசான்ற (௩00) அருங்கடியினையுடையமலைதழுவப்பட்டு (௩0௧) எனமுடிக்க.

[இருவெதிர்ப் பைந்தூறு கூரெரி நைப்ப:] இருவெதிர்க் கூர் எரி பைந்தூறு நைப்ப— பெரியமூங்கிலிற்பிறந்த மிக்கநெருப்புப் பசியதூறுகளைச் சுடுகையினாலே,

* நிழத்த யானை மேய்புலம் படர—ஓய்ந்தயானைகள் தமக்கு மேயலாமிடங்களிலே போக,

கலித்த இயவர் இயம் தொட்டன்ன — மகிழ்ந்த வாச்சியக்காரர் தம்வாச்சியத்தை வாசித்தாலொத்த,

கண் விடுபு உடையூத் தட்டை கவின் அழிந்து— மூங்கிலின்கண் திறக்கப்பட்டு உடைந்து இயந்தொட்டன்ன (௩0௪) ஓசையையுடைய தட்டைஅழகழிகையினாலே,

தட்டப்படுதலிற் றட்டையென்றார்.

நெருப்புநைக்கையினாலே(௩0உ)பயிரின்றித் தட்டைகவினழிகையினாலே(௩0௫) ஓய்ந்தயானை மேய்புலம் படரும்படி (௩0௩) அருவியான்ற மலை (௩0௬) யென்க.

கவினழிய வெனத் திரித்து முடித்தலுமாம்.

அருவி ஆன்ற அணி இல் மா மலை — அருவிகளில்லையான அழகில்லாத பெரியமலையிடத்து விடரகம் (௩0௮)

வை கண்டன்ன புல் முளி அம் காட்டு—வைக்கோலைக்கண்டாற்போன்ற ஊகம்புல்லுலர்ந்த அழகியகாட்டிடத்தில்,

கமம் சூழ்கோடை விடரகம் முகந்து—நிறைவினையுடைய சூறவளியை முழைஞ்சிடங்கண் முகந்துகொள்கையினாலே,

கால் உறு கடலின் ஒலிக்கும் சும்மை— காற்றுமிகுந்த கடல்போல் ஒலிக்கும் ஆரவாரத்தையுடைய வேனிற்குன்றம் (௩௧௩)

இலை வேய் குரம்பை உழை அதட் பள்ளி உவலைக் கண்ணி வன்சொல் இளைஞர்—குழையாலேவேய்ந்தகுடிலிலிருக்கும் மான்றோலாகியபடுக்கையினையும், தழைவிரவினகண்ணியினையும், கடியசொல்லினையுமுடைய இளையோர்,

* தொல்காப்பியம், சொல்லதிகாரம், உரியியல், ௩௪:—“ ஓய்த லாய்த னிழத்தல் சாஅ, யாவயி னான்கு முள்ளத னுணுக்கம்.”

சிலை உடைக் கையர் கவலை காப்ப— வில்லையுடைத்தாகிய கையையுடையராய்ப் பலவழிகளில் ஆறலைகள்வரைக் காக்கும்படி சுரஞ்சேர்ந்து (௩௧௪) என்க.

நிழல் உரு இழந்த வேனிற் குன்றத்து—நிழல் தன்வடிவையிழத்தற்குக் காரணமான முதுவேனிற்காலத்தையுடைய மலையிடத்துச் சுரம் (௩௧௪).

பாலை சான்ற—பிரிவாகிய உரிப்பொருளமைந்த,

சுரம் சேர்ந்து—அருநிலஞ் சேரப்பட்டு,

ஒருசார்—ஒருபக்கம்,

ஒருசார் (௩௧௪), மலை (௩0௬) விடரகம் கோடையைமுகக்கையினாலே (௩0௮) கடலிமென்விக்குஞ் சும்மையையுடைய (௩0௯) வேனிற்குன்றத்துப் (௩௧௩) பாலைசான்ற சுரஞ்சேரப்பட்டு (௩௧௪) என்க.

பாலைக்கு நடுவணதென்னும் பெயர்கூறியவதனால், அது தத்தம்பொருளானும் *"முல்லையுங் குறிஞ்சியு முறைமையிற் றிரிந்து - நல்லியல் பழிந்து நடுங்குதுயருறுத்துப்-பாலை யென்பதோர் படிவங் கொள்ளும்." எனமுதற்பொருள்பற்றிப் பாலைநிகழ்தலானும் பாலையையும் வேறோர்நிலமாக்கினார்.

முழங்கு கடல் தந்த விளங்கு கதிர் முத்தம்—ஒலிக்குங்கடல்தந்த விளங்குகின்ற ஒளியினையுடையமுத்து,

அரம் போழ்ந்து அறுத்த கண் நேர் இலங்கு வளை—வாளரங் கீறியறுத்த இடம் நேரிதாகிய விளங்கும்வளை,

நேர்ந்தவளையுமாம்.

பரதர் தந்த பல் வேறு கூலம்—செட்டிகள் கொண்டுவருதலான்மிக்க பலவாய் வேறுபட்ட பண்டங்கள்,

தந்ததென்றும் பாடம்.

[இருங்கழிச் செறுவிற் றீம்புளி வெள்ளுப்பு:]

இருங்கழிச் செறுவின் வெள்ளுப்பு — கரிய கழியிடத்துப் பாத்தியில்விளைந்த வெள்ளியவுப்பு,

தீம் புளி—கருப்புக்கட்டிகூட்டிப் பொரித்தபுளி,

பரந்து ஓங்கு வரைப்பில்—மணற்குன்று பரந்துயரும் கானலிடத்தே,

வன்கைத் திமிலர் கொழுமீன் குறைஇய துடிக்கண் துணியல்—வலியகையினையுடைய திமிலர் கொழுவிய மீன்களையறுத்த துடியின்கண்போலுருண்ட துணிகள்,

என்றது கருவாடுகளை.

தீம்புளியினையும், உப்பினையும், கருவாட்டினையுமேற்றின நாவா (௩உ௧) யென்க.

விழுமிய நாவாய்—சீரியமரக்கலம்,

பெருநீர் ஓச்சுநர்—மரக்கலமீகாமர்,.

நனந்தலைத் தேஎத்து—அகன்ற இடத்தையுடைய யவனமுதலிய தேயத்தினின்றும்,

நன்கலன் உய்ம்மார்—இவ்விடத்துண்டாகிய பேரணிகலங்களை ஆண்டுச்செலுத்துதற்கு,

* சிலப்பதிகாரம், மதுரைக்காண்டம், காடுகாண்காதை.

புணர்ந்து—பலருங்கூடி,

உடன் கொணர்ந்த புரவியொடு—சேரக்கொண்டுவந்த குதிரைகளோடே,

அனைத்தும்—முழுவதும்,

வைகலுறும் வழி வழிச் சிறப்ப—நாடோறும் முறைமையே முறைமையே மிகுகையினாலே வளம்பல பயின்று (௩உ௫) என்க.

நெய்தல் சான்ற—இரங்கலாகிய உரிப்பொருளமைந்த,

வளம் பல பயின்று—பலசெல்வமும் நெருங்கப்பட்டு,

ஒருசார், பெருநீரோச்சுநர் (௩உ௧) கலனுய்ம்மார் தேஎத்துக் (௩உஉ) கொணர்ந்த புரவியோடே (௩உ௩) முத்தம் (௩௧௫) வளை (௩௧௬) கூலமானவை (௩௧௭) யனைத்தும் (௩உ௩) வழிவழிச்சிறப்ப (௩உ௪) வளம்பல பயிலப்பட்டு (௩உ௫) என்க.

நெய்தல்சான்ற (௩உ௫) பரந்தோங்குவரைப்பின்கண்ணே (௩௧௬) வளம்பலபயிலப்பட்டெனமுடிக்க.

ஆங்கு ஐம்பால் திணையுங் கவினி—அம்மண்டலத்தின்கண்ணே ஐந்துகூற்றினையுடைய நிலங்களும் அழகுபெற்று,

அமை வர—பொருந்துதல்தோன்ற,

[முழவிமிழ் மகலாங்கண், விழவுநின்ற வியன்மறுகிற்:]

முழவு இமிழும் விழவு நின்ற வியன் மறுகின்—முழவுமுழங்குந் திருநாள்நிலைபெற்ற அகற்சியையுடைய தெருவினையும்,

துணங்கை—துணங்கைக்கூத்தினையும்,

அம் தழூஉவின்—அழகினையுடைய குரவைக்கூத்தினையும்,

மணம் கமழ் சேரி—மணநாறுகின்ற பரத்தையர்சேரியினையும்,

இன் கலி யாணர்—இனிய செருக்கினையுடைத்தாகிய புதுவருவாயினையுமுடைய,

அகல் ஆங்கண்—அகன்ற ஊரிடத்தே,

[குழூஉப்பல பயின்று:] பல குழூஉப் பயின்று—பலகுடித்திரள் நெருங்கி,

ஆங்கு—அந்நாட்டில்,

பாடல் சான்ற நன்னாட்டு நடுவண்— புலவராற் பாடுதல் முற்றுப்பெற்ற நல்லநாட்டிற்கு நடுவணதாய்,

ஒருசார் தண்பணை சுற்றப்பட்டு (உ௭0) ஒருசார் மலைதழுவப்பட்டு (௩0௧) ஒருசார் காடுதழுவப்பட்டு (உ௮௫) ஒருசார் சுரஞ்சேரப்பட்டு (௩௧௪) ஒருசார் நெய்தல்சான்ற (௩உ௫) வரைப்பின்கண்ணே (௩௧௬) வளம்பலபயிலப்பட்டு ஆங்கு (௩உ௫) ஐம்பாற்றிணையுங்கவினி (௩உ௬) அந்நாட்டிடத்து (௩௩0) அகலாங்கட் (௩உ௭) குழூஉப்பலபயின்று (௩௩0) அமைவரப் (௩உ௬) பாடல்சான்ற நன்னாட்டு நடுவணதாய் (௩௩௧) என்க.

[கலைதாய வுயர்சிமயத்து, மயிலகவு மலிபொங்கர், மந்தியாட மாவிசும்புகந்து, முழங்குகால் பொருத மரம்பயில் காவி, னியங்குபுனல் கொழித்த வெண்டலைக் குவவுமணற், கான்பொழில்:]

கலை தாய மலி பொங்கர் மந்தி ஆட மரம் பயில் கா—முசுக்கலைகள்தாவினமிக்க கொம்புகளிலே அவற்றின்மந்திகள் விளையாடும்படி மரம்நெருங்கினசோலை,

மா விசும்பு * உகந்து—பெரிய ஆகாயத்தேசெல்ல உயர்கையினாலே,

முழங்கு கால் பொருத மரம்—முழங்குகின்ற பெருங்காற்றடித்த மரம்,

மயில் அகவும் காவின்—மயில் ஆரவாரிக்குங் காவினோடே,

உயர் சிமயத்து இயங்கு புனல் கொழித்த வெண்டலைக் குவவு மணற் கான் பொழில்—உயர்ந்த மலையுச்சியிடத்துநின்றும் வீழ்ந்தோடுகின்ற நீர்கொழித்து ஏறட்ட வெள்ளிய தலையினையுடைத்தாகிய திரட்சியையுடைய மணற்குன்றிடத்து மணத்தையுடைய பொழில்,

தழீஇய அடை கரை தோறும்—காவோடே பொழில்சூழ்ந்த நீரடையுங் கரைகடோறும்,

[தாதுசூழ் கோங்கின் பூமலர் தாஅய்க், கோதையி னொழுகும் விரிநீர் நல்வர, லவிரறல் வையைத் துறைதுறை தோறும், பல்வேறு பூத்திரட் டண்டலை சுற்றி, யழுந்துபட் டிருந்த பெரும்பா ணிருக்கையும்:]

தாது சூழ் கோங்கின் பூ மலர் தாஅய்க் கோதையின் ஒழுகும் விரிநீர் நல் வரல் வையை— தாதுக்கள்சூழ்ந்த கோங்கினுடையபூவும் ஏனைமலர்களும்பரந்து மாலையொழுகினாற்போல ஓடும் பெருநீர் நன்றாகிவருதலையுடைய வையையிடத்து,

அவிர் அறல் துறை துறை தோறும் பல் வேறு பூத் திரள் தண்டலை சுற்றி அழுந்து பட்டு இருந்த பெரும்பாண் இருக்கையும்—விளங்குகின்ற அறலையுடைய துறைகடோறும் துறைகடோறும் பலவாய்வேறுபட்ட பூத்திரளையுடைய பூந்தோட்டங்கள் சூழப்பட்டு நெடுங்காலமடிப்பட்டிருந்த பெரிய பாண்சாதியின் குடியிருப்பினையும்,

நிலனும் வளனுங் கண்டு அமைகல்லா விளங்கு பெருந்திருவின் வானவிறல்வேள் அழும்பில் அன்ன நாடு இழந்தனரும்—நிலத்தையும் அதிற்பயிர்களையும் பார்த்தபார்வை மாறுதலமையாத விளங்கும் பெரியசெல்வத்தினையுடைய வானவிறல்வேளென்னுங் குறுநிலமன்னனுடைய அழும்பிலென்னும் ஊரையொத்த நாடுகளையிழந்தவர்களும்,

கொழும் பல் பதிய குடி இழந்தனரும்—செல்வத்தினையுடைய பலவூர்களிடத்தனவாகிய குடிகளையிழந்தவர்களும்,

தொன்று கறுத்து உறையும் துப்புத் தர வந்த—பழையதாய செற்றங்கொண்டு தங்கும் வலி தம்மைக்கொண்டுவருகையினாலே எதிராய்வந்த,

அண்ணல் யானை அடு போர் வேந்தர்—தலைமையினையுடைய யானையினையும் பகைவரைக்கொல்லும் போர்த்தொழிலையுமுடைய வேந்தரை,

பன்மாறு ஓட்டி (௩௰)—பலவாய் நெஞ்சிற்கிடந்த மாறுபாடுகளை முதற்போக்கிப் பின்னர்,

[இன்னிசை முரச மிடைப்புலத் தொழியப், பன்மா றோட்டிப் பெயர்புறம் பெற்று:]

இன்னிசை முரசம் இடைப்புலத்து ஒழியப் பெயர் புறம் பெற்று—இனிய ஓசையினையுடைய முரசம் உழிஞைப்போர்க்கிடையே கிடக்கும்படி மீளுகையினாலுண்டான முதுகைப்பெற்று,

---

* தொல்காப்பியம், சொல்லதிகாரம், உரியியல், க:— "உகப்பே யுயர்தலுவப்பே யுவகை."

என்றது: உழிஞைப்போர்செய்யவந்த அரசர் குடுமிகொண்ட மண்ணுமங்கல மெய்தாது இடையேமீளும்படி காத்தகிடங்கு (௩௫௧) என்றவாறு.

மண்ணுற ஆழ்ந்த மணி நீர்க் கிடங்கின்—மண்ணுள்ளவளவுமாழ்ந்த நீலமணி போலும் நீரையுடைய கிடங்கினையும்,

விண் உற ஓங்கிய பல் படைப் புரிசை—தேவருலகிலே செல்லும்படியுயர்ந்த பல கற்படைகளையுடைய மதிலினையும்,

தொல் வலி நிலைஇய வாயில் (௩௫௬)—பழைதாகிய வலி நிலைபெற்ற வாயில்,

அணங்கு உடை நெடு நிலை—தெய்வத்தையுடைத்தாகிய நெடிய நிலையினையும்,

நெய் படக் கரிந்த திண் போர்க் கதவின்—நெய் பலகாலுமிடுதலாற் கருகின திண்ணிய செறிவினையுடைய கதவினையும்,

வாயிலில் தெய்வமுறையுமாகலின், அதற்கு நெய்யுமணியாம்; *"ஐயவி யப்பிய நெய்யணி நெடுநிலை" என்பதனானுணர்க.

மழை ஆடும் மலையின் நிவந்த மாடமொடு—மேகமுலாவுமலைபோலே ஓங்கின மாடத்தோடே,

கோபுரமன்றி வாசலை மாடமாகவுஞ் சமைத்தலின், மாடமென்றார்.

வையை அன்ன வழக்கு உடை வாயில்—வையையாறு இடைவிடாது ஓடுமாறு போன்ற மாந்தரும் மாவும் இடையறாமல் வழங்குதலையுடைய வாயில்,

மாடத்தோடே (௩௫௫) நிலையினையும் (௩௫௩) கதவினையும் (௩௫௪) வழக்கினையுமு டைய வாயில் (௩௫௬).

பெரும்பாணிருக்கையினையும் (௩௪௨), கிடங்கினையும் (௩௫௧) புரிசையினையும் (௩௫௨) வாயிலினையு (௩௫௬) முடைய மதுரை (௬௯௯) யென்க.

வகை பெற எழுந்து வானம் மூழ்கிச் சில்காற்று இசைக்கும் பல் புழை நல் இல்—கூறுபாடாகியபெயர்களைத் தாம்பெறும்படியுயர்ந்து தேவருலகிலேசென்று தென்றற்காற்று ஒலிக்கும் பலசாளரங்களையுடைய நன்றாகிய அகங்களையும்,

மண்டபம் கூடம் தாய்க்கட்டு அடுக்களை யென்றாற்போலும் பெயர்களைப்பெறுத லின், வகைபெறவெழுந்தென்றார்.

யாறு கிடந்தன்ன அகல் நெடுந் தெருவில்—யாறுகிடந்தாற்போன்ற அகன்ற நெடிய தெருக்களிலே,

இருகரையும் யாறும்போன்றன, இரண்டுபக்கத்தின்மனைகளும் தெருவுகளும்.

பல் வேறு குழாஅத்து இசை எழுந்து ஒலிப்ப—நாளங்காடியிற் பண்டங்களைக் கொள்ளும் பலசாதியாகிய பாடைவேறுபாட்டையுடைய மாக்கள்திரளிடத்து ஓசைமிக்கொலிக்கும்படி இருந்தார (௪௦௬) வென்க.

மா கால் எடுத்த முந்நீர் போல முழங்கு இசை நன் பணை அறைவனர் நுவல—பெருமையையுடைய காற்றெடுத்த கடலொலிபோல முழங்கும் ஓசையையுடைய நன்றாகிய முரசைச் சாற்றினராய் விழவினை நாட்டிலுள்ளார்க்குச் சொல்லுகையினாலே நாடார்த்தன்றே (௪௨௮) யென்க.

அறைவன நுவலவென்றுபாடமாயின், அறையப்படுவனவாய் விழாவைச் சொல்லவென்க.

---

* நெடுநல்வாடை.

கயம் குடைந்தன்ன இயம் தொட்டு இமிழ் இசை மகிழ்ந்தோர் ஆடும் கலி கொள் சும்மை—கயத்தைக் கையாற்குடைந்துவிளையாடுந் தன்மையவாக வாச்சியங்களைச் சாற்றலான் முழங்கினஓசையைக்கேட்டு மகிழ்ந்தவர்களாடுஞ் செருக்கினைக்கொண்ட ஆரவாரத்தினையுமுடைய தெரு (௩௰௬) வென்க.

ஓவுக் கண்டன்ன இரு பெரு நியமத்து—சித்திரத்தைக் கண்டாற்போன்ற கட்டினிமையையுடைய இரண்டாகிய பெரிய அங்காடித்தெருவில்,

நாளங்காடி, அல்லங்காடியாகிய இரண்டுகூற்றையுடைத்தென்றார்.

சாறு அயர்ந்து எடுத்த உருவப் பல் கொடி—கோயில்களுக்கு விழாக்களை நடத்திக் கட்டின அழகினையுடைய பலகொடிகளும்,

இதனால் அறங்கூறினார்.

வேறு பல் பெயர ஆர் எயில் கொளக் கொள நாடோறெடுத்த நலம் பெறு புனை கொடி—வேறுபட்ட பலபெயர்களையுடையவாகிய அழித்தற்கரிய அரண்களைத் தண்டத்தலைவர் அரசனேவலாற்சென்று கைக்கொள்ளக் கைக்கொள்ள அவர்கள் அவ்வெற்றிக்கு நாடோறுமெடுத்த நன்மையைப்பெற்ற சயக்கொடியும்,

இதனாற் புறத்துழிஞைப்போர்கூறினார்.

நீர் ஒலித்தன்ன நிலவு வேல் தானையொடு புலவுப் படக் கொன்று மிடை தோல் ஓட்டிப் புகழ் செய்து எடுத்த விறல் சால் நன்கொடி—கடலொலித்தாற்போன்ற நிலைபெறுதலையுடைய வேற்படையோடே சென்று பகைவரைப் புலாலுநாற்றமுண்டாகக்கொன்று பின்னர் அணியாய்நின்ற யானைத்திரளையுங்கெடுத்துத் தமக்குப் புகழையுண்டாக்கி எடுத்த வெற்றியமைந்த நன்றாகியகொடியும்,

இது தும்பைப்போர்கூறிற்று.

கள்ளின் களி நவில் கொடியொடு—கள்ளினது களிப்புமிகுதியைச் சாற்றுகின்ற கொடியும்,

நன் பல பல் வேறு குழூஉக் கொடி—நன்றாகிய பலவற்றினாலே பலவாய் வேறுபட்ட திரட்சியையுடைய கொடிகளும்,

நன்பலவென்றார், கல்வி கொடை தவம் முதலியவற்றை.

பதாகை நிலைஇப் பெரு வரை மருங்கின் அருவியின் நுடங்க—பெருங்கொடிகளும் நிலைபெற்றுப் பெரிய மலையிடத்து அருவியசையுமாறுபோலவசைய,

இக்கொடிகள் அருவியினுடங்கும்படி வகைபெறவெழுந்து (௩௬௭) எனமுன்னேகூட்டுக.

பனை மீன் வழங்கும் வளை மேய் பரப்பின்—பனைமீனென்னுஞ் சாதியுலாவுஞ் சங்குமேய்கின்ற கடலிடத்தே,

வீங்கும் நோன் கயிறு அரீஇ இதை புடையூக் கூம்பு முதல் முருங்க எற்றி—இறுகும் பிணிப்பினையுடைய வலியினையுடைய பாய்கட்டினகயிற்றையறுத்துப் பாயையும்பீறிப் பாய்மரம் அடியிலேமுறியும்படி அடித்து,

[காய்ந்துடன், கடுங்காற் றெடுப்ப:] கடுங்காற்று உடன் காய்ந்து எடுப்ப—கடிய காற்று நாற்றிசையினுஞ் சேரக் கோபித்தெடுக்கையினாலே,

கல் பொருது உரைஇ—நங்கூரக்கல் கயிற்றுடனேநின்று பொருதுஉலாவி,

நெடுஞ்சுழிப் பட்ட நாவாய் போல—நெடியசுழியிலேயகப்பட்டுச் சுழலாநின்ற மரக்கலத்தையொக்க,

இருதலைப் பணிலம் ஆர்ப்ப—முன்னும்பின்னுஞ் சங்கொலிப்ப,

யானைமீண்டாற் பின்னின்றவன் ஊதுதற்குப் பின்னுஞ் சங்குசெல்லும்.

சினம் சிறந்து கோலோர்க் கொன்று மேலோர் வீசி—சினமிக்குப் பரிக்கோற் காரரைக்கொன்று பாகரைவீசிப் போகட்டு,

மென் பிணி வன்றொடர் பேணாது காழ் சாய்த்து—மெல்லியபிணிப்பினையுடைய வலிய நீர்வாரியென்று காலிற்கட்டுஞ் சங்கிலியை நமக்குக்காவலென்று பேணாதே அதுகட்டின தறியைமுறித்து,

கந்து நீத்து உழிதரும் கடாஅ யானையும்—கம்பத்தைக் கைவிட்டுச்சுழலும் கடாத்தையுடைய யானையும்,

சிறந்து (௩அ0) கொன்று வீசிச் (௩அக) சாய்த்து (௩அஉ) நீத்து (௩அ௩) ஆர்ப்ப (௩அ0) உழிதருங்கடாமெனக் கடாத்தின்றொழிலாகவுரைக்க.

காற்றிற்குக் கடாம் உவமிக்கப்படும்பொருள்.

அம் கண் மால் விசும்பு புதைய வளி போழ்ந்து—அழகியவிடங்களைத் தன்னிடத்தேயுடைய பெரிய ஆகாயமறையக் காற்றைப்பிளந்து,

தேவருலகமுதலியவற்றைத் தன்னிடத்தேயுடைமையின், அங்கண்மால்விசும் பென்றார்.

ஒண்கதிர் ஞாயிற்று ஊறு அளவாத் திரிதருஞ் செங்கால் அன்னத்துச் சேவல் அன்ன—ஒள்ளிய கிரணங்களையுடைய ஞாயிற்றைத் தாஞ்சேர்தலை நெஞ்சாலே கருதிக்கொண்டுபறக்குஞ் சிவந்தகாலையுடைய அன்னத்தினது சேவலையொத்த,

குரூஉ மயிர்ப் புரவி உராலிற் பரி நிமிர்ந்து காலெனக் கடுக்கும் கவின் பெறு தேரும்—நிறவிய பலமயிர்களையுடைய குதிரைகளோடுதலிற் செலவுமிக்குக் காற்றெனக் கடுகவோடும் அழகினைப்பெறுகின்றதேரும்,

கொண்ட கோலன் கொள்கை நவிற்றலின்—கையிலேயெடுத்த மத்திகையையுடைய வாசிவாரியன் ஐந்துகதியையும் பதினெட்டுச்சாரியையும் பயிற்றுகையினாலே,

அடி படு மண்டிலத்து ஆதி போகிய—குரங்களழுந்தின வட்டமானவிடத்திலும் ஆதியென்னுங் கதியிலும் ஓடின,

கொடிபடு சுவல விடு மயிர்ப் புரவியும்—ஒழுங்குபடுங் கேசரியையுடையனவாகிய விட்டவாசங்களையுடைய குதிரைகளும்,

[வேழத் தன்ன வெருவரு செலவிற், கள்ளார் களம ரிருஞ்செரு மயக்கமும்:] வெரு வரு வேழத்து அன்ன செலவிற் கள் ஆர் களமர் இருஞ்செரு மயக்கமும்—அச்சந்தோன்றுகின்ற யானையையொத்த போக்கினையுடைய கள்ளினை யுண்ணும் வீரர் தம்மிற் பெரியபோரைச்செய்யும் கலக்கமும்,

களத்தேசேறலிற் களமரென்றார்.

அரியவும் பெரியவும்—ஈண்டுப் பெறுதற்கரியனவுமாய் அவைதாஞ் சிறிதின்றி மிகவுள்ளனவுமாய்ப் பலவாய் வேறுபட்ட பண்ணியம் (௪0௫) என மேலேகூட்டுக.

வருவன பெயர்தலின்—யானையுந் (௩அ௩) தேரும் (௩அஅ) புரவியும் (௩௯க) களமர் செருமயக்கமும் (௩௯௩) பல்காலும் வருவனவாய் மீளுகையினாலே,

[தீம்புழல் வல்சிக் கழற்கான் மழவர், பூந்தலை முழவி னோன்றலை கடுப்ப:] தீம்புழல் வல்சிப் பூந்தலைக் கழற்கால் மழவர் முழவின் நோன் தலை கடுப்ப—இனிய பண்ணியாரங்களாகிய உணவினையும் பொற்பூக்களையுடைய தலையினையும் வீரக்கழலணிந்த காலினையுமுடைய மழவர்முன்கொட்டும் வீரமத்தளத்தினது வலியகண்ணை யொக்க உருண்ட,

தீம்புழல் - இருப்பைப்பூவுமாம். பூத்தலை - விகாரம். மழவர் - சிலவீரர். * "உருவக் குதிரை மழவ ரோட்டி" என்றார் பிறரும். கடுப்பவென்னுஞ் செயவெனெச்சவுவமவுருபிற்கு உருண்டவென ஒருசொல்வருவிக்க.

பிடகைப் பெய்த கமழ் நறும் பூவினர்—பூந்தட்டிலேயிட்டுவைத்த மிகவும்நாறுகின்ற நறிய பூவினையுடையாரும்,

பல் வகை விரிந்த எதிர் பூங்கோதையர்—பலவகையாக விரித்துவைத்த ஒன்றற்கொன்றுமாறுபட்ட பூமாலைகளையுடையாரும்,

பலர் தொகுபு இடித்த தாது உகு சுண்ணத்தர்—இடிக்கவல்லார் பலருந்திரண்டு இடித்த பூந்தாதுக்கள்போலப் பரக்குஞ் சுண்ணத்தையுடையாரும்,

தாது - நீறுமாம். நவமணிகளும், பொன்னும், சந்தனமும், கருப்பூரமுதலியனவும் புழுகிலும் பனிநீரிலும் நனையவைத்திடித்தலின், இடிக்கவல்லவர் பலரும்வேண்டிற்று.

தகை செய் தீஞ்சேற்று இன்னீர்ப் பசுங்காய் நீடு கொடி இலையினர்— உடம்பிற்கு அழகைக்கொடுக்கும் இனிய கருங்காலிசீவிக்காய்ச்சின களிக் கலந்த இனிய நீரினையுடைய பசியபாக்குடனே வளர்ந்தகொடியீன்ற வெற்றிலையினையுடையாரும்,

† "அங்கருங் காலி சீவி யூறவைத் தமைக்கப் பட்ட, செங்களி விராய காயும்" என்றார். இளங்களியன்னம் நீராயிருத்தலின் இன்னீரென்றார்.

கோடு சுடு நூற்றினர்—சங்குசுடுதலாலுண்டான சுண்ணும்பையுடையாரும்,

[இருதலை வந்த பகைமுனை கடுப்ப, வின்னுயி ரஞ்சி யின்னா வெய்துயிர்த், தேங்குவன ரிருந்தவை நீங்கிய பின்றை:]

---

* அகநானூறு, களிற்றியானைநிரை, க:— "வண்டுபடத் ததைந்த கண்ணி யொண்கழ, லுருவக் குதிரை மழவ ரோட்டிய, முருக நற்போர் நெடுவே ளாவி, யறுகோட் டியானை பொதுளி யாங்கட், சிறுகா ரோடன் பயினொடு சேர்த்திய, கற்போற் பிரியல மென்ற சொற்றாம், மறந்தனர் கொல்லோ தோழி சிறந்த, வேய்மருள் பணைத்தோ ணெகிழச் சேய்நாட்டுப், பொலங்கல வெறுக்கை தருமார் நிலம்பக, வழல்போல் வெங்கதிர் பைதறத் தெறுதலி, னிழறேய்ந் துலறிய மரத்த வறைகாய், பறநீர்ப் பைஞ்சுனை யாமறப் புலர்தலி, னுகுநெற் பொரியும் வெம்மை யாவரும், வழங்குந ரின்மையின் வௌவுநர் மடியச், சுரம்புல் லென்ற வாற்ற வலங்குசினை, நாரின் முருங்கை நவிரல் வான்பூச், சூரலங் கடுவளி யெடுப்ப வாருற், றுடைதிரைப் பிதிர்விற் பொங்கிமுன், கடல்போற் றோன்றல் காடிறந் தோரே." எ-து: பிரிவிடை ஆற்றாளாயதலைமகள் தோழிக்குச்சொல்லியது; மாமூலனார்.

† சீவகசிந்தாமணி, இலக்கணையாரிலம்பகம், கசு:—"அங்கருங் காலி சீவி யூறவைத் தமைக்கப் பட்ட - செங்களி விராய காயுஞ் செம்பழுக் காயுந் தீந்தேனெங்கணுங் குளிர்த்த வின்னீ ரிளம்பசுங் காயு மூன்றுந் - தங்கிளி செய்யக் கூட்டித் தையலார் கைசெய் தாரே."

இருதலை வந்த பகை முனை கடுப்ப இன்னுயிர் அஞ்சி ஏங்குவனர் இருந்து—இரண்டுபக்கத்தானும் படைவந்த பகைப்புலத்தையொக்கத் தம்முடைய இனியவுயிருக்கஞ்சி ஏங்குவாராயிருந்து,

அவை நீங்கிய பின்றை இன்று வெய்துயிர்த்து—அந்நாற்படையும் போனபின்னர் அவற்றானெய்திய பொல்லாவெப்பத்தைப்போக்கி,

எனவே அச்சத்தால் நெஞ்சிற்பிறந்த வருத்தத்தைப்போக்கியென்றார்.

பல் வேறு பண்ணியம் தழீஇத் திரி விலைஞர்—பலவாய்வேறுபட்ட பண்டங்களைத் தம்மிடத்தேசேர்த்துக்கொண்டு திரிகின்ற விற்பாரும்,

கொள்ளக்கொள்ளக் குறையாமல் தரத்தரமிகாமல் (௪௨௬) அரியவும் பெரியவுமாய்ப் (௩௯௪) பலவாய் வேறுபட்ட பண்ணியமெனக்கூட்டுக.

மலை புரை மாடத்துக் கொழு நிழல் இருத்தர—மலையையொக்கும் மாடங்களிடத்துக் குளிர்ந்தநிழலிலே இருத்தலைச்செய்ய,

பூவினரும் (௩௯௭) கோதையரும் (௩௯௮) சுண்ணத்தினரும் (௩௯௯) இலையினரும் நூற்றினரும் (௪0௧) பண்ணியந்தழீஇத்திரிவிலைஞரும் (௪0௬) யானையும் (௩௮௩) தேரும் (௩௮௮) புரவியும் (௩௯௧) களமர்மயக்கமும் (௩௯௩) வருவனபெயர்தலிற் (௩௯௪) பகைமுனைகடுப்ப (௪0௨) அஞ்சி (௪0௩) ஏங்குவனரிருந்து அவைநீங்கியபின்றை (௪0௪) இன்றுவெய்துயிர்த்து (௪0௫) மாடநிழலிலே (௪0௬) இசையெழுந்தொலிப்ப (௩௬0) இருத்தர (௪0௭) வெனக்கூட்டுக.

இருங் கடல் வான் கோடு புரைய—கரியகடலில் வெள்ளிய சங்கையொக்க,

[வாருற்றுப், பெரும்பின் னிட்ட வானரைக் கூந்தலர், நன்னர் நலத்தர் தொன்முதுபெண்டிர்:]

வாருற்றுப் பின்னிட்ட வான் பெரு நரைக் கூந்தலர் தொன் முது பெண்டிர்—கோதிப் பின்னேமுடித்துப்போகட்ட வெள்ளிய பெரிய நரைமயிரினையுடையராகிய பழமைமூத்த பெண்டிர்,

நன்னர் நலத்தர்—நன்றாகிய வனப்பினையுடையராய்,

செந்நீர்ப் பசும்பொன் புனைந்த பாவை செல்சுடர்ப் பசுவெயில் தோன்றியன்ன செய்யர்—சிவந்தநீர்மையினையுடைய கிளிச்சிறையென்னும் பொன்னாற்செய்த பாவை வீழ்கின்றகிரணங்களிடத்துப் பசியவெயிலிடத்தே தோன்றினாற்போன்ற சிவந்த நிறத்தினையுடையராய்,

[செயிர்த்த நோக்கினர் மடக்கண்:] மடக்கண் செயிர்த்த நோக்கினர்—மடப்பத்தினையுடையகண்கள் ஆடவர்க்குவருத்தத்தைச்செய்த பார்வையினையுடையராய்,

ஐஇய கலுழும் மாமையர்—வியப்பினையுடையவாய் நோக்கினார்கலங்குதற்குக் காரணமான மாமைநிறத்தினையுடையராய்,

கலுழ்தல் - ஒழுகுதலுமாம்.

[வையெயிற்று, வார்ந்த வாயர்:] வார்ந்த வை எயிற்று வாயர்—நேரிதாகிய கூரிய எயிற்றினையுடைய வாயினையுடையராய்,

[வணங்கிறைப் பணைத்தோட், சோர்ந்துகு வன்ன வயக்குறு வந்திகைத், தொய்யில் பொறித்த சுணங்கெதி ரிளமுலை:]

வணங்கு இறைப் பணைத் தோள் வயக்குறு வந்திகை—வளைந்த சந்தினையுடைய மூங்கில்போலும்தோளினையும் விளக்கமுற்றிய கைவந்தியினையும்,

தொய்யில் பொறித்த சோர்ந்து உகுவன்ன சுணங்கு எதிர் இள முலை—தொய்யிலால் வல்லியாகஎழுதின நெகிழ்ந்துசிந்துமாறுபோன்ற சுணங்குதோற்றிய இளைய முலையினையும்,

தொய்யில் - எழுதுங்குழம்பு.

மை உக்கன்ன மொய் இருங் கூந்தல்—மையொழுகினாற்போன்ற செறிந்த கரிய மயிரினையுமுடைய,

மயில் இயலோரும் மடமொழியோரும் — மயிலின்றன்மையையுடையோரும் மடப்பத்தையுடைய வார்த்தையினையுடையோரும்,

கைஇ மெல்லிதின் ஒதுங்கிக் கையெறிந்து—தம்மைக்கோலஞ்செய்து மெத்தெனநடந்து கையைத்தட்டி,

கல்லா மாந்தரொடு நகுவனர் திளைப்ப—காமநுகர்ச்சியினையன்றி வேறொன்றையுங்கல்லாத இளையோருடனே மகிழ்ந்தனராய்ப் புணரும்படி,

[புடையமை பொலிந்த வகையமை செப்பிற்:]

புடை அமை செப்பில்— புடைபடுதலமைந்த செப்பிடத்தில்,

பொலிந்த வகை அமை செப்பில்—பொலிவுபெற்ற கூறுபாடமைந்த செப்பிடத்திற் பண்ணியம் (௪௨௨) என்க,

காமர் உருவின் தாம் வேண்டும் பண்ணியம்—விருப்பமருவிய வடிவினையுடைய நுகர்வார்தாம்விரும்பும் நுகர்பொருள்களை,

கமழ் நறும் பூவொடு மனை மனை மறுக—மிகவுநாறும் நறியபூவுடனேயேந்தி மனைகடோறுமனைகடோறும் உலாவிவிற்க,

நலத்தராய்ச் (௪௦௯) செய்யராய் நோக்கினராய் (௪௧௨) மாமையராய் (௪௧௩) வாயராய்த் தோளினையும்(௪௧௪) வந்திகையினையும் (௪௧௫) முலையினையும்(௪௧௬) கூந்தலினையுமுடைய (௪௧௭) மயிலியலோரும் மடமொழியோரும் (௪௧௮) கைஇ ஒதுங்கி எறிந்து (௪௧௯) மாந்தரொடு திளைக்கும்படி (௪௨௦) தொன்முதுபெண்டிர் (௪௦௯) பண்ணியத்தைப் (௪௨௨) பூவோடேஏந்தி மனைமனைமறுக (௪௨௩) வெனக்கூட்டுக.

மழை கொளக் குறையாது புனல் புக மிகாது கரை பொருது இரங்கும் முந்நீர் போல—மேகம் முகக்கக் குறைவுபடாமல் யாறுகள்பாய்தலின் மிகுதலைச்செய்யாமற் கரையைப் பொருதுஒலிக்குங் கடல்போல,

கொளக் கொளக் குறையாது தரத் தர மிகாது—பலரும்வந்து கொள்ளக்கொள்ளக் குறையாமற் பலரும் மேன்மேலுங் கொண்டுவரக் கொண்டுவர மிகாமல்,

[கழுநீர் கொண்ட வெழுநா ளந்தி, யாடுதுவன்று விழவி னுடார்த் தன்றே:]

கழுநீர் கொண்ட அந்தி—தீவினையைக் கழுவுதற்குக்காரணமான தீர்த்தநீரைத் தன்னிடத்தேகொண்ட அந்திக்காலம்,

ஆடு துவன்று விழவின் எழுநாள் அந்தி—வேறோரிடத்தில்லாத வெற்றிநெருங்கும் இருநாளினைத் தன்னிடத்தேயுடைய ஏழாநாளந்தியில்,

கால்கொள்ளத்தொடங்கிய ஏழாநாளந்தியிலே தீர்த்தமாடுதல் மரபு.

நாடு— அவ்விழவிற்குத்திரண்ட நாட்டிலுள்ளார்,

ஆர்த்தன்றே—ஆர்த்தஆரவாரம்,

அற்றேயென்பது அன்றேயென மெலிந்ததாக்கி உவமவுருபாக்கலுமொன்று.

[மாடம் பிறங்கிய மலிபுகழ்க் கூடல்:] பிறங்கிய மாடம் மலி புகழ்க்கூடல்—பெரிய * நான்மாடத்தாலே மலிந்தபுகழைக் கூடுதலையுடைய மதுரை (௬௯௯)யென மேலேகூட்டுக.

[நாளங் காடி நனந்தலை:] நனந்தலை நாள் அங்காடி—அகற்சியையுடைத்தாகிய இடத்தினையுடைய நாட்காலத்துக்கடையில்,

கம்பலை—ஆரவாரம்,

உருவப்பல்கொடியும் (௩௬௬) புனைகொடியும் (௩௬௮) நன்கொடியும் (௩௭௧) களிநவில்கொடியும் (௩௭௨) குழூஉக்கொடியும் பதாகையும் நிலைஇ (௩௭௩) அருவியின் ததும்பும்படி (௩௭௪) வகைபெறவெழுந்து மூழ்கி (௩௫௭) இசைக்கும் பல்புழையையுடைய நல்ல இல்லினையும் (௩௫௮) சும்மையினையுமுடைய (௩௬௪) தெருவுகளில் (௩௫௯) பெருநியமத்து (௩௬௫) நாளங்காடியிலே (௪௩௦) பூவினர் (௩௯௭) முதலியோர் இருத்தருகையினால் (௪௦௬) மறுகுதலினால் (௪௨௩) எழுந்தகம்பலை (௪௩௦) நன்பணையறைவனர் நுவலுகையினாலே (௩௬௨) அதற்குத்திரண்டநாடு (௪௨௮) அந்தியில் (௪௨௭) ஆர்த்ததேயென் வினைமுடிக்க.

ஆர்த்தன்றென்னுமுற்றுச்சொற் படுத்தலோசையாற் பெயர்த்தன்மையாய்த்தேற்றேகாரம் பெற்றுநின்றது.

வெயிற் கதிர் மழுங்கிய படர் கூர் ஞாயிற்றுச் செக்கர் அன்ன—வெயிலையுடைய கிரணங்கள் ஒளிமழுங்கிய செலவுமிக்க ஞாயிற்றையுடைய செக்கர்வானத்தையொத்த,

சிவந்து நுணங்கு உருவிற் கண் பொருபு உகூஉம் ஒண் பூங் கலிங்கம்—சிவந்து நுண்ணிதாகும் வடிவாலே கண்களை வெறியோடப்பண்ணிச் சிந்திவிழுமாறுபோன்ற ஒள்ளிய பூத்தொழிலையுடைய சேலைகளை,

பொன் புனை வாளொடு பொலியக் கட்டி—பொன்னிட்ட உடைவாளோடே அழகுபெறக் கட்டி,

[திண்டேர்ப் பிரம்பிற் புரளுந் தானைக், கச்சந் தின்ற கழறயங்கு திருந்தடி, மொய்ம்பிறந்து திரிதரு மொருபெருந் தெரியன், மணிதொடர்ந் தன்ன வொண்பூங் கோதை, யணிகிளர் மார்பி னாரமொ டளைஇக், காலியக் கன்ன கதழ்பரி கடைஇ:]

புரளுந் தானை—தோளிலேகிடந்தசையு மொலியலினையும்,

கச்சம் தின்ற கழல் தயங்கு திருந்து அடி—கோத்துக்கட்டிய கச்சுக்கிடந்து தழும்பிருந்த வீரக்கழலசையும் பிறக்கிடாத அடியினையும்,

மொய்ம்பு இறந்து திரிதரும் ஒரு பெருந் தெரியல்—உலகத்துள்ளார்வலிகளைக் கடந்து புகழ்ச்சியால் எங்குந்திரியும் ஒன்றாகிய பெரிய வேப்பமாலையினையும்,

அணி கிளர் மார்பின் ஆரமொடு அளைஇ மணி தொடர்ந்தன்ன ஒண் பூங் கோதை—அழகுவிளங்கும் மார்பிற்கிடக்கின்ற ஆரத்தோடேகலந்து மாணிக்கமொழுகினாலொத்த ஒள்ளிய செங்கழுநீர்மாலையினையுமுடையராய்,

பிரம்பின் திண்தேர்க் கால் இயக்கன்ன கதழ் பரி கடைஇ—விளிம்பிலேவைத்த பிரம்பினையுடைய திண்ணிய தேரிற்பூண்ட காற்றினுடைய செலவினையொத்த விரைந்த குதிரைகளைச் செலுத்தி,

காலோர் காப்பக் காலெனக் கழியும்—காலாட்கள் சூழ்ந்துகாப்பக் காற்றென்னும்படி கடிதிற்செல்லும்,

---

* நான்மாடங்களாவன:—திருவாலவாய், திருநள்ளாறு, திருமுடங்கை, திருநடுவூரென்பன.

[வான வண்கை வளங்கெழு செல்வர், நாண்மகி ழிருக்கை:] நாள் மகிழ் இருக்கை வான வண்கை வளங்கெழு செல்வர்—நாட்காலத்து மகிழ்ந்திருக்கின்ற இருப்பிலே மேகம்போலே வரையாமற்கொடுக்கும் வளவிய கையினையுடையராகிய வளப்பம்பொருந்தின செல்வர்,

தானை (சகூ) முதலியவற்றையுடையராய்க் கட்டிக் (சகூச) கடைஇக் (சசo) கழியும் (சசக) செல்வரென்க.

காண்மார் பூவொடு தெள்ளரிப் பொற்சிலம்பு ஒலிப்ப—விழாவைக்காண்டற்குப் பூண்களோடே தெள்ளியஉள்ளின்மணிகளையுடைய பொன்னாற்செய்த சிலம்புகளொலிக்கும்படி மேனிலத்துநின்றுமிழிதலால்,

சிலம்பொலிப்பவென்பதனால் இழிதல்பெற்றும்.

[ஒள்ளழற், றாவற விளங்கிய வாய்பொ னவிரிழை, யணங்குவீழ் வன்ன பூந்தொடி மகளிர்:] அணங்கு வீழ்வு அன்ன ஒள் அழல் தா அற விளங்கிய ஆய் பொன் அவிர் இழைப் பூந்தொடி மகளிர்—வானுறைதெய்வங்களின் வீழ்ச்சியையொத்த ஒள்ளியநெருப்பிலே வலியறவிளங்கிய அழகிய பொன்னாற்செய்த விளங்கும்பூண்களையும் பூத்தொழிலையுடைய தொடியினையுமுடைய மகளிர்,

இவர் நாயன்மார் கோயில்களிற் சேவிக்குமகளிர்.

மணம் கமழ் நாற்றம் தெருவுடன் கமழ—புழுகுமுதலியன நாறுகின்றநாற்றம் தெருவுகளெல்லாமணக்க,

மணம் - ஆகுபெயர்.

ஒண்குழை திகழும் ஒளி கெழு திருமுகம்—ஒள்ளிய மகரக்குழையை உள்ளடக்கிக்கொண்ட ஒளிபொருந்திய அழகினையுடையமுகம்,

[திண்கா ழேற்ற வியலிரு விலோதந், தெண்கடற் றிரையி னசைவளி புடைப்ப:] திண் காழ் ஏற்ற வியல் இரு விலோதம் அசை வளி தெண்கடல் திரையிற் புடைப்ப—திண்ணிய கொடித்தண்டுகளிலேற்ற அகலத்தினையுடைய பெருங்கொடிகளை அசைகின்ற காற்றுத் தெளிந்த கடற்றிரைபோல எழுந்துவிழும்படி அடிக்கையினாலே,

நிரை நிலை மாடத்து அரமியந்தோறும்—ஒழுங்குபட்ட நிலைமையினையுடைய மாடங்களின் நிலாமுற்றங்கடோறும்,

மழை மாய் மதியின் தோன்றுபு மறைய—மஞ்சிலேமறையுந் திங்களைப்போல ஒருகாற்றோன்றி ஒருகான்மறைய,

அரமியந்தோறுமிருந்து (சஙக) விழாக்காணுமகளிர் முகம் (சசஅ) விலோதத்தை (சசக) வளிபுடைக்கையினாலே (சஙo) தோன்றுபுமறையவென்க.

நாயன்மார் எழுந்தருளுங்காற் கொடியெடுத்தல் இயல்பு.

[நீரு நிலனுந் தீயும் வளியு, மாக விசும்போ டைந்துட னியற்றிய, மழுவா ணெடியோன் றலைவ னாக:] மாக விசும்போடு வளியும் தீயும் நீரும் நிலனும் ஐந்துடன் இயற்றிய மழுவாள் நெடியோன் தலைவனாக—திக்குக்களையுடைய ஆகாயத்துடனே காற்றும் நெருப்பும் நீரும் நிலனுமாகிய ஐந்தினையும் சேரப்படைத்த மழுவாகிய வாளையுடைய பெரியோன் ஏனையோரின் முதல்வனாகக்கொண்டு,

மாசு அற விளங்கிய யாக்கையர்—தீர்த்தமாடிய வடிவினையுடையராய்,

சூழ் சுடர் வாடாப் பூவின் இமையா நாட்டத்து நாற்ற உணவின் உருகெழு பெரியோர்க்கு—தெய்வத்தன்மையாற் சூழ்ந்த ஒளியினையுடைய வாடாதபூக்களையும் இதழ்குவியாத கண்ணினையும் அவியாகிய உணவினையுமுடைய அச்சம்பொருந்திய மாயோன் முருகன்முதலாகிய தெய்வங்கட்கு,

மாற்றரு மரபின் உயர் பலி கொடுமார்—விலக்குதற்கரிய முறைமையினையுடைய உயர்ந்த பலிகளைக் கொடுத்தற்கு,

அந்தி விழவில்—அந்திக்காலத்துக்கு முன்னாக எடுத்தவிழாவிலே,

தூரியம் கறங்க—வாச்சியங்களொலிப்ப,

செல்வர் (௪௪௨) மாசறவிளங்கிய யாக்கையராய்க் (௪௫௯) கமழ (௪௪௭) மறைய (௪௫௨) நெடியோன்றலைவனாகப் (௪௫௫) பெரியோர்க்குப் (௪௫௮) பலிகொடுக்கைக்கு (௪௫௧) அந்தியிற்கொண்டவிழவிலே தூரியங்கறங்கவென்க.

[திண்கதிர் மதாணி யொண்குறு மாக்களை, யோம்பினர்த் தழீஇத் தாம்புணர்ந்து முயங்கித், தாதணி தாமரைப் போதுபிடித் தாங்குத், தாமு மவரு மோராங்கு விளங்கக், காமர் கவினிய பேரிளம் பெண்டிர்:]

திண் கதிர் மதாணிக் காமர் கவினிய பேரிளம்பெண்டிர்—திண்ணிய ஒளியினையுடைய பேரணிகலங்களையுடையராய் விருப்பம் அழகுபெற்ற பெரிய இளமையினையுடைய பெண்டிர்,

தாம் முயங்கிப் புணர்ந்து ஓம்பினர்த் தழீஇ—தாம் முயங்குதலைச்செய்து கூடிப் பாதுகாக்குங் கணவரையுங் கூட்டிக்கொண்டு,

தாது அணி தாமரைப் போது பிடித்தாங்கு ஒண் குறுமாக்களைத் தழீஇ—தாது சேர்ந்த செவ்வித் தாமரைப்பூவைப் பிடித்தாற்போல ஒள்ளிய சிறுபிள்ளைகளையும் எடுத்துக்கொண்டு,

தாமும் அவரும் ஓராங்கு விளங்க—தாமுங் கணவரும் பிள்ளைகளும் சேரச் சிலத்தாலேவிளங்கும்படியாக,

[பூவினர் புகையினர் தொழுவனர் பழிச்சிச், சிறந்து:] பூவினர் புகையினர் தொழுவனர் சிறந்து பழிச்சி—பூசைக்குவேண்டும் பூவினையுடையராய்த் தூபங்களையுடையராய் வணங்கினராய் மிகுத்துத்துதித்து,

புறங்காக்குங் கடவுட் பள்ளியும்—பாதுகாத்துநடத்தும் பௌத்தப்பள்ளியும்,

சிறந்த வேதம் விளங்கப் பாடி—அதர்வவேதமொழிந்த முதன்மைப்பட்ட வேதங்களைத் தமக்குப் பொருடெரியும்படியோதி,

அதர்வம் தலையாயவோத்தன்மை பொருளியலிற்கூறினும்.

விழுச் சீர் எய்திய ஒழுக்கமொடு புணர்ந்து—விழுமிய தலைமையோடுபொருந்தின யாகங்கண்முதலிய தொழில்களோடே சிலகாலம்பொருந்தி,

நிலம் அமர் வையத்து—நால்வகைநிலங்களமர்ந்த உலகத்தே,

ஒரு தாம் ஆகி—ஒன்றாகியபிரமந் தாங்களேயாய்,

உயர் நிலை உலகம் இவணின்று எய்தும்—உயர்ந்த நிலைமையையுடைய தேவருலகத்தை இவ்வுலகிலேநின்றுசேரும்,

அறநெறி பிழையா அன்புடை நெஞ்சின்—தருமத்தின்வழி ஒருகாலுந்தப்பாத பல்லுயிர்கட்குமன்புடைத்தாகிய நெஞ்சாலே,

பெரியோர் மேஎய் — சீவன்முத்தராயிருப்பாரிடத்தே சிலகாலம் பொருந்தி நின்று,

இனிதின் உறையும்—ஆண்டுப்பெற்ற வீட்டின்பத்தாலே இனிதாகத்தங்கும் பள்ளி (௪௭௪),

[குன்று குயின்றன்ன வந்தணர் பள்ளியும்:]

குன்று குயின்றன்ன பள்ளியும்—மலையை உள்வெளியாகவாங்கி இருப்பிடமாக்கினாற்போன்ற பிரமவித்துக்களிருப்பிடமும்,

அந்தணர்— வேதாந்தத்தை எக்காலமும்பார்ப்பார்,

அந்தணர் (௪௭௪) பாடி (௪௬அ) அன்புடைநெஞ்சாலே (௪௭௨) தேவருலகத்தையெய்தும் (௪௭௧) ஒழுக்கத்தோடேசிலகாலநின்று (௪௬௯) பின்னர் வேதாந்தத்தையுணர்ந்து பெரியோரைமேஎய் (௪௭௩) வையத்தே ஒருதாமாகி (௪௭௦) யுறையும் (௪௭௩) பள்ளியும் (௪௭௪) எனமுடிக்க.

வண்டு படப் பழுநிய தேன் ஆர் தோற்றத்துப் பூவும் புகையுஞ் சாவகர் பழிச்ச—வண்டுகள்படியும்படி பருவமுதிர்ந்த தேனிருந்த தோற்றத்தையுடைய பூக்களையும் புகையினையுமேந்தி விரதங்கொண்டோர் துதிக்க,

[சென்ற காலமும் வரூஉ மமயமு, மின்றிவட் டோன்றிய வொழுக்கமொடு நன்குணர்ந்து, வானமு நிலனுந் தாமுழு துணருஞ், சான்ற கொள்கைச் சாயா யாக்கை, யான்றடங் கறிஞர் செறிந்தனர் நோன்மார், கல்பொளிந் தன்ன விட்டுவாய்க் கரண்டைப், பல்புரிச் சிமிலி நாற்றி நல்குவர:]

சென்ற காலமும் வரூஉம் அமயமும் இன்று இவண் தோன்றிய ஒழுக்கமொடு நன்கு உணர்ந்து நல்குவர—சென்றகாலத்தையும் வருகின்றகாலத்தையும் இன்று இவ்வுலகிற் றோன்றிநடக்கின்ற ஒழுக்கத்தோடே மிகவுணர்ந்து உலகத்தார்க்குச் சொல்லுதல்வரும்படி,

வானமும் நிலனும் தாம் முழுதுணரும் அறிஞர்—தேவருலகையும் அதன்செய்கைகளையும் எல்லாநிலங்களின்செய்திகளையும் தாம் நெஞ்சாலறிதற்குக்காரணமான அறிஞர்,

இஃது எதிர்காலங்கூறிற்று.

சான்ற கொள்கை—தமக்கமைந்த விரதங்களையும்,

சாயா யாக்கை—அவ்விரதங்களுக்கு இளையாத மெய்யினையுமுடைய அறிஞர் (௪அ௧),

ஆன்று அடங்கு அறிஞர்—கல்விகளெல்லாநிறைந்து களிப்பின்றியடங்கின அறிவினையுடையார்,

செறிந்தனர்—நெருங்கினவருடைய சேக்கை (௪அ௭) யென்க.

நோன்மார்—நோற்கைக்கு,

கல் பொளிந்து அன்ன இட்டு வாய்க் கரண்டைப் பல் புரிச் சிமிலி நாற்றி—கல்லைப்பொளிந்தாற்போன்ற இட்டியவாயையுடைய குண்டிகையைப் பலவடங்களையுடைய நூலுறியிலே தூக்கிச் செறிந்தன (௪அ௧) வென்க.

கயம் கண்டன்ன—குளிர்ச்சியாற் கயத்தைக் கண்டாற்போன்ற,

வயங்குடை நகரத்து—விளங்குதலையுடைய கோயிலிடத்துச் சேக்கை (௪அ௭) யென்க.

செம்பு இயன்றன்ன செஞ்சுவர் புனைந்து—செம்பாற்செய்தாலொத்த செவ்விய சுவர்களைச் சித்திரமெழுதி,

நோக்கு விசை தவிர்ப்ப மேக்கு உயர்ந்து — கண் பார்க்கும்விசையைத் தவிர்க்கும்படி மேனிலமுயர்ந்து,

[ஓங்கி, யிறும்பூது சான்ற நறும்பூஞ் சேக்கையுங், குன்றுபல குழீஇப் பொலிவன தோன்ற:]

குன்று பல குழீஇப் பொலிவன தோன்ற ஓங்கி—மலைகள்பலவுந்திரண்டு பொலிவனபோலத் தோன்ற உயர்ந்து வயங்குடைநகரம் (௪௮௪) என்க.

இறும்பூது சான்ற நறும் பூஞ் சேக்கையும்—அதிசயமமைந்த நறியபூக்களைச் சூழவுடைய அமணப்பள்ளியும்,

சேக்கப்படுமிடத்தைச் சேக்கையென்றார். இவர்கள் வருந்தாமற் பறித்துவழிபடுதற்குப் பலபூக்களைச் சூழவாக்குதலின், நறும்பூஞ்சேக்கையென்றார்.

புனைந்து (௪௮௫) உயர்ந்து (௪௮௬) தோன்ற (௪௮௮) ஓங்கிச் (௪௮௬) சாவகர் பழிச்ச (௪௭௬) வயங்குதலையுடையநகரத்திடத்துக் (௪௮௪) கொள்கையினையும் யாக்கையினையுமுடைய (௪௮0) அறிஞர் (௪௮௧ உணர்ந்து (௪௭௮) நல்குவர (௪௮௩) நோன்மார் (௪௮௧) சிமிலியிலேநாற்றிச் (௪௮௩) செறிந்தனருடைய (௪௮௧) சேக்கையுமெனக்கூட்டுக.

அச்சமும்—நடுவாகக்கூறுவரோ கூறாரோவென்று அஞ்சிவந்த அச்சத்தையும்,

அவலமும்—அவர்க்குத் தோல்வியால் நெஞ்சிற்றோன்றும் வருத்தத்தையும்,

ஆர்வமும் நீக்கி—அவர் தம்நெஞ்சுகருதின பொருள்கண்மேற்றோன்றின பற்றுள்ளத்தினையும் போக்கி,

என்றது - அவர்கள் நெஞ்சுகொள்ள விளக்கியென்றவாறு.

செற்றமும் உவகையும் செய்யாது காத்து—ஒருகூற்றிற் செற்றஞ்செய்யாமல் ஒருகூற்றில் உவகைசெய்யாமல் நெஞ்சினைப் பாதுகாத்து,

ஞெமன்கோல் அன்ன செம்மைத்தாகி—துலாக்கோலையொத்த நடுவுநிலைமையையுடைத்தாய்,

சிறந்த கொள்கை அறம் கூறு அவையமும்—இக்குணங்களாற்சிறந்த விரதங்களையுடைய தருமநூலைச் சொல்லுந்திரளும்,

நறுஞ் சாந்து நீவிய கேழ் கிளர் அகலத்துப் பெரியோர் (௪௯௫)—நறிய சந்தனத்தைப்பூசிய நிறம்விளங்குமார்பினையுடைய பெரியோர்,

யாகத்திற்குச் சந்தனம்பூசுதல்மரபு.

[ஆவுதி மண்ணி யவிர்துகின் முடித்து, மாவிசும்பு வழங்கும் பெரியோர்போல, நன்றுந் தீதுங் கண்டாய்ந் தடக்கி, யன்பு மறனு மொழியாது காத்துப், பழியொரீஇ யுயர்ந்து பாய்புகழ் நிறைந்த:]

ஆவுதி மண்ணி மா விசும்பு வழங்கும் பெரியோர் போல—யாகங்களைப்பண்ணிப் பெரிய சுவர்க்கத்தேறப்போம் அந்தணர் அரசனை அடக்குமாறுபோல,

நன்றும் தீதும் கண்டு ஆய்ந்து அடக்கி—அரசனிடத்துள்ள நன்மையும் தீமையும் நெஞ்சத்தாலேகண்டு அத்தீங்குகளையாராய்ந்து அவற்றிலேயொழுகாமலடக்கி,

அன்பும் அறனும் ஒழியாது காத்து—சுற்றத்திடத்துச்செல்லுமன்பும் எவ்வுயிர்க்கண்ணுநிகழுந் தருமமும் ஒருகாலமும்போகாமல் தம்மிடத்தே பரிகரித்து,

பழி ஓரீஇ உயர்ந்து—பழி தம்மிடத்துவாராமல் நீக்கி அதனானே ஏனையோரி னும் உயர்ச்சியெய்தி,

பாய் புகழ் நிறைந்த—பரந்த புகழ்நிறைந்த,

அவிர் துகில் முடித்து—விளங்குகின்ற மயிர்க்கட்டுக் கட்டி,

செம்மை சான்ற காவிதிமாக்களும்—தலைமையமைந்த காவிதிப்பட்டங்கட்டின அமைச்சரும்,

அறன் நெறி பிழையாது ஆற்றின் ஒழுகி—இல்லறத்திற்குக்கூறிய வழியைத்தப் பாமல் இல்லறத்திலேநடந்து,

குறும் பல் குழுவிற் குன்று கண்டன்ன—அண்ணிய பல திரட்சிகளையுடைய மலைகளைக் கண்டாற்போன்ற,

பருந்து இருந்து உகக்கும் பன்மாண் நல்லில்—பருந்து இளைப்பாறியிருந்து பின்பு உயரப்பறக்கும் பலதொழிலின்மாட்சிமைப்பட்ட நல்லஇல்லில்,

பல் வேறு பண்டமோடு ஊண் மலிந்து கவினி—பலவாய்வேறுபட்ட பண்டங் களோடே பலவுணவுகளுமிக்கு அழகுபெற்று,

மலையவும் நிலத்தவும் நீரவும் பிறவும்—மலையிடத்தனவும் நிலத்திடத்தனவும் நீரி டத்தனவும் பிறவிடத்தனவுமாகிய பண்ணியம் (௫0௬),

பல் வேறு திரு மணி முத்தமொடு பொன் கொண்டு—பலவாய் வேறுபட்ட அழ கினையுடைய மணிகளையும் முத்தினையும் பொன்னையும் வாங்கிக்கொண்டு,

சிறந்த தேஎத்து—மணிகளும் முத்தும் பொன்னும் பிறத்தற்குச் சிறந்த தேசத்தி னின்றும்வந்த,

பண்ணியம் பகர்நரும்—பண்டங்களைவிற்கும் வணிகரும்,

ஊண்மலிந்து கவினிக் (௫0௩) குன்றுகண்டன்ன (௫0௧) நல்லஇல்லிலே யிரு ந்து (௫0௨) ஆற்றினொழுகிச் (௫00) சிறந்ததேஎத்துவந்த (௫0௬) திருமணிமுத்தமொடு பொன்கொண்டு (௫0௫) பிறவுமாகிய (௫0௪) பண்டங்களை விற்பாருமென்க.

[மழையொழுக் கறாஅப் பிழையா விளையுள்:] அறாஅ ஒழுக்கு மழைப் பிழையா விளையுள்—இடைவிடாமற் பெய்கின்ற மழையால் தவறாத விளைதலையுடையதாகிய மோகூர் (௫0அ),

பழையன் மோகூர்—பழையனென்னுங் குறுநிலமன்னனுடைய மோகூரிடத்து,

[அவையகம் விளங்க, நான்மொழிக் கோசர் தோன்றி யன்ன:] அவை அகம் விளங்க நாற்கோசர் மொழித் தோன்றியன்ன — நன்மக்கடிரளிடத்தே விளங்கும் படி அறியக்கூறிய நான்குவகையாகியகோசர் வஞ்சினமொழியாலே விளங்கினாற் போன்ற,

தாம் மேஎந்தோன்றிய நாற்பெருங்குழுவும்—தமதுமொழியால் தாம் மேலாய்வி ளங்கிய நால்வகைப்பட்ட பெரியதிரளும்,

ஐம்பெருங்குழுவில் அமைச்சரைப்பிறித்து முற்கூறினமையின், ஈண்டு ஏனை நாற்பெருங்குழுவையுங்கூறினார். ஐம்பெருங்குழுவாவன: "அமைச்சர் புரோகிதர் சேனாபதியர், தூத ரொற்ற ரிவரென மொழிப." இளங்கோவடிகளும், * "ஐம்பெ ருங் குழுவு மெண்பே ராயமும்" என்றார்.

* சிலப்பதிகாரம், இந்திரன்விழவூரெடுத்தகாதை.

[கோடுபோழ் கடைநரும்:] போழ் கோடு கடைநரும்—அறுத்தசங்கை வளைமுதலியனவாகக் கடைவாரும்,

திரு மணி குயினரும்—அழகியமணிகளைத் துளையிடுவாரும்,

சூடு உறு நன்பொன் சுடர் இழை புனைநரும்—சுடுதலுற்ற நன்றாகிய பொன்னை விளங்கும் பணிகளாகப்பண்ணுந் தட்டாரும்,

பொன் உரை காண்மரும்— பொன்னையுரைத்தவுரையை அறுதியிடும் பொன் வாணிகரும்,

கலிங்கம் பகர்நரும்—புடைவைகளை விற்பாரும்,

செம்பு நிறை கொண்மரும்—செம்பு நிறுக்கப்பட்டதனை வாங்கிக்கொள்வோரும்,

வம்பு நிறை முடிநரும்—கச்சுக்களைத் தம் தொழின்முற்றுப்பட முடிவாரும்,

பூவும் புகையும் ஆயும் மாக்களும்—பூக்களையுஞ் சாந்தையும் நன்றாக ஆராய்ந்து விற்பாரும்,

[எண்வகைச் செய்தி யுவமங் காட்டி, நுண்ணிதி னுணர்ந்த:] எண்வகை நுண்ணிதின் உணர்ந்த செய்தியும் உவமம் காட்டி—பலவகைப்பட்ட கூரிதாகவுணர்ந்த தொழில்களையும் ஒப்புக்காட்டி,

சித்திரமெழுதுவார்க்கு வடிவின்றொழில்கடோன்ற எழுதுதற்கரிதென்பதுபற்றிச் செய்தியுமென்றார்.

நுழைந்த நோக்கிற் கண்ணுள் வினைஞரும்—கூரிய அறிவினையுடைய சித்திரகாரிகளும்,

நோக்கினார்கண்ணிடத்தே தம் தொழிலைநிறுத்துதலிற் கண்ணுள்வினைஞரென்றார்.

பிறரும் கூடி—யான் கூறப்படாதோருந் திரண்டு,

தெண்டிரை அவிர் அறல் கடுப்ப ஒண் பல் குறியவும் நெடியவும் மடி தரூஉ விரித்து — தெளிந்த திரையில்விளங்குகின்ற அறலையொப்ப ஒள்ளிய பலவாகிய சிறியனவும் நெடியனவுமாகிய மடிப்புடைவைகளைக் கொண்டுவந்து விரித்து,

மடித்தது அறலுக்குவமை.

சிறியரும் பெரியரும் கம்மியர் குழீஇ—சிறியோரும் பெரியோருமாகிய செய்தற்றொழிலைச்செய்வார் திரண்டு,

நால் வேறு தெருவினும் கால் உற நிற்றர—நான்காய்வேறுபட்ட தெருவுகடோறும் ஒருவர்காலோடு ஒருவர்கால் நெருங்க நிற்றலைச்செய்ய,

கம்மியர் (௫உ௧) விரித்துக் (௫உ0) குழீஇ (௫உ௧) நிற்றலைச்செய்ய.

இஃது அந்திக்கடையிற்றெருவிற் புடைவைவிற்பாரைக் கூறிற்று.

கோயிலைச்சூழ்ந்த ஆடவர்தெரு நான்காதலின், நால்வேறுதெருவென்றார். இனிப் பொன்னும் மணியும் புடைவைகளும் கருஞ்சரக்கும்விற்கும் நால்வகைப்பட்ட வாணிகர்தெருவென்றுமாம்.

கொடும்பறைக் கோடியர் கடும்பு உடன் வாழ்த்துந் தண் கடல் நாடன் ஒண் பூங்கோதை பெருநாள் இருக்கை—கண்கள்வளைந்தபறையினையுடைய கூத்தருடைய சுற்றம் சேரவாழ்த்துங் குளிர்ந்த கடல்சேர்ந்த நாட்டையுடையவனாகிய ஒள்ளிய பனந்தாரையுடைய சேரனுடைய பெரிய நாளோலக்கவிருப்பிலே,

விழுமியோர் குழீஇ விழைவு கொள் கம்பலை கடுப்பக் கல்லென (௫௩௮)—எல்லாக்கலைகளையுமுணர்ந்த சீரியோர் திரண்டு அவன்கேட்பத் தருக்கங்களைக்கூறி விரும்புதல்கொண்ட ஆரவாரத்தையொப்பக் கல்லென்றவோசை நடக்க,

பலசமயத்தோருந் தம்மிற்றும் மாறுபட்டுக்கூறுந் தருக்கத்தைச் சேரக்கூறக் கேட்டிருக்கின்ற கம்பலைபோலவென்றார்.

பலவுடன்—கூறுதனை பலவற்றுடனே,

சேறும் நாற்றமும் பலவின் சுளையும்— தேனும் நாற்றமும் உடையவாகிய பலாப்பழத்தின் சுளையும்,

சேறென்றார், சுளையிலிருக்கின்ற தேனை.

வேறுபடக் கவினிய தேம் மாங்கனியும்—வடிவுவேறுபட அழகுபெற்ற இனிய மாவிற்பழங்களையும்,

"சேறு நாற்றமும் வேறுபடக் கவினிய, பலவின் சுளையுந் தேமாங் கனியும்" என்றும் பாடம்.

பல் வேறு உருவிற் காயும்—பலவாய் வேறுபட்ட வடிவினையுடைய பாகற்காய் வாழைக்காய் வழுதுணங்காய் முதலியனகாய்களையும்,

பழனும்—வாழைப்பழம் முந்திரிகைப்பழமுதலிய பழங்களையும்,

கொண்டல் வளர்ப்பக் கொடி விடுபு கவினி மென் பிணி அவிழ்ந்த குறு முறி அடகும்—மழை பருவத்தே பெய்துவளர்க்கையினாலே கொடிகளைவிட்டு அழகுபெற்று மெல்லிய சுருள்விரிந்த சிறிய இலைகளையுடைய இலைக்கறிகளையும்,

கொடியென்றார், ஒழுங்குபட விடுகின்ற கிளைகளை.

[அமிர்தியன் றன்ன ! தீஞ்சேற்றுக் கடிகையும்:] தீஞ்சேற்று அமிர்து இயன்றன்ன கடிகையும்—இனிய பாகின்றகட்டின அமிர்தம் தேறுகசீண்டாற்போன்ற கண்டசருக்கரைத்தேற்றையும்,

புகழ் படப் பண்ணிய பேர் ஊன் சோறும்—புகழ்ச்சிகள் உண்டாகச் சமைத்த பெரிய இறைச்சிகளையுடைய சோற்றையும்,

கீழ்செல வீழ்ந்த கிழங்கொடு—பாரளவாகவீழ்ந்த கிழங்குடனே,

[பிறவு, மின்சோறு தருநர் பல்வயி னுகர:] பல்வயின் நுகர இன்சோறு பிறவும் தருநர்—பலவிடங்களினும் அநுபவிக்க இனிய பாற்சோறு பான்முதலியவற்றையுங் கொண்டுவந்திடுவோரிடத்து எழுந்தவோசையும்,

என்றது சோறிடுஞ்சாலைகளை.

[வாலிதை யெடுத்த வளிதரு வங்கம், பல்வேறு பண்ட மிழிதரும் பட்டினத், தொல்லெ னிமிழிசை மானக் கல்லென, நனந்தலை வினைஞர் கலங்கொண்டு மறுகப், பெருங்கடற் குட்டத்துப் புலவுத்திரை யோத, மிருங்கழி மருவிப் பாயப் பெரிதெழுந், திருகெழு பானாள் வருவன பெயர்தலிற், பல்வேறு புள்ளி னிசையெழுந் தற்றே, யல்லங் காடி யழிதரு கம்பலை:]

நனந் தலை வினைஞர் கலம் கொண்டு மறுக—அகன்ற இடத்தையுடைய தேசங்களின்வாணிகர் சண்டிச்செய்த பேரணிகலங்களைக் கொண்டுபோதல்காரணமாக,

வால் இதை எடுத்த வளிதரு வங்கம்—நன்றாகிய பாய்விரித்த காற்றுக்கொண்டு வருகின்ற மரக்கலம்,

பெருங் கடற் குட்டத்துப் புலவுத் திரை ஓதம் இருங் கழி மருவிப் பாயப் பெரிது எழுந்து உரு கெழு பானாள் வருவன—பெரிய கடல்சூழ்ந்த இடத்தினின்றும் புலாலுறுந் திரையையுடையஓதம் கரியகழியிற் புகார்முகத்தேயேறிப் பரக்கின்றவளவிலே மிக்கெழுந்து அச்சம்பொருந்திய நடுவியாமத்தே வருகின்றவற்றின் பண்ட (௫௩௭) மென்க.

பெரிதெழுந்தென்றார், பாயும்வாங்கிச் சரக்கும்பறியாமல் வருகின்றமைதோன்ற. ஓதமருவிப்பாயவென்றார், அவ்வோதம் ஏற்றத்திலே கழியிலேவருமென்பதுணர்தற்கு.

பல்வேறு பண்டம் இழிதரும் பட்டினத்து ஒல்லென் இமிழ் இசை மான—வங்கம்வருகின்றவற்றிற் பலவாய் வேறுபட்ட சரக்கு இறங்குதலைச்செய்யும் பட்டினத்து ஒல்லெனமுழங்குகின்ற ஓசையையொக்க,

மறுகுதற்குவந்த வங்கம் குட்டத்தினின்றும் வருவனவற்றிற் பண்டமிழியும் பட்டினத்து ஓசைமானவென்க.

பெயர்தலிற் பல்வேறு புள்ளின் இசை எழுந்தற்று—இரையை நிறையமேய்ந்து பார்ப்பிற்கிரைகொண்டு அந்திக்காலத்துமீளுதலிற் பலசாதியாய் வேறுபட்ட பறவைகளினோசை எழுந்த தன்மைத்து;

அல் அங்காடி அழிதரு கம்பலை—அந்திக்காலத்துக் கடையில் மிகுதியைத்தருகின்ற ஓசை,

கடவுட்பள்ளியிடத்தும் (௪௬௭) அந்தணர்பள்ளியிடத்தும் (௪௭௪) சேக்கையிடத்தும் (௪௮௭) அவையத்திடத்தும் (௪௬௨) காவிதிமாக்களிடத்தும் (௪௬௬) எழுகின்றவோசை கோதை (௫௨௪) யிருக்கையில் (௫௨௫) விழைவுகொள்கம்பலைகடுப்பக் (௫௨௬) கல்லென (௫௩௮) வெனமுடிக்க.

பண்ணியம்பகர்நரிடத்தோசையும் (௫௦௬) நாற்பெருங்குழுவிடத்தோசையும் (௫௧௦) பல்வயினுகர இன்சோறு (௫௩௫) பிறவுந் (௫௩௪) தருநரிடத்தெழுந்தவோசையும் (௫௩௫) கோடுபோழ்கடைநர் (௫௧௧) முதலாகக் கண்ணுள்வினைஞரீறாகவுள்ளாரும் பிறருங்கூடிக் (௫௧௮) கம்மியருங்குழீஇ (௫௨௧) நிற்றர (௫௨௨) எழுந்தவோசையும் பட்டினத்து (௫௩௭) ஒல்லெனிமிழிசைமானக்கல்லென (௫௩௮) வெனமுடிக்க.

இங்ஙனமுடித்தபின் நியமத்து (௩௬௫) அல்லங்காடியில்அழிதருகம்பலை (௫௪௪) தாரியங்கறங்குகையினாலும் (௪௬௦) கம்பலைகடுப்பக் (௫௨௬) கல்லென்கையினாலும் (௫௩௮) ஒல்லெனிமிழிசைமானக்கல்லென்கையினாலும் (௫௩௮) பல்வேறுபுள்ளின் இசையெழுந்தற்றே (௫௪௩) யெனச்சேரவினைமுடிக்க.

கல்லெனவென்பதனை இரண்டிடத்திற்குங்கூட்டுக.

இவ்வோசைகளின் வேறுபாடுகளைநோக்கிப் பல்வேறுபுள்ளோசைகளை உவமங்கூறினார்.

[ஒண்சுட ருருப்பொளி மழுங்கச் சினந்தணிந்து, சென்ற ஞாயிறு:] ஒண் சுடர் உருப்பு ஒளி சினம் தணிந்து மழுங்கச் சென்ற ஞாயிறு—ஒள்ளிய கிரணங்களையுடைய வெப்பத்தையுடைய ஒளி சினமாறிக் குறையும்படி ஒழுகப்போன ஞாயிறு,

நன்பகற் கொண்டு குடமுதற் குன்றம் சேர — பின்னர் நன்றாகிய பகற்பொழுதைச் சேரக்கொண்டு மேற்றிசையிடத்து அத்தகிரியைச் சேருகையினாலே,

குணமுதல் நாள் முதிர் மதியம் தோன்றி நிலா விரிபு பகல் உரு உற்ற இரவு வர — கீழ்த்திசையிடத்தே பதினாலுநாட்சென்றுமுதிர்ந்த நிறைமதி எழுந்து நிலாப் பரக்கையினாலே பகலின்வடிவையொத்த இராக்காலம்வரும்படி,

நயந்தோர் — கணவர்பிரிதலிற் கூட்டத்தை விரும்பியிருந்தார்க்கு,

காதல் இன்றுணை புணர்மார் — தம்மேற் காதலையுடைய தமக்கினிய கணவனைக்கூடுதற்கு,

ஆய் இதழ்த் தண் நறுங் கழுநீர் துணைப்ப — ஆராய்ந்த இதழ்களையுடைய குளிர்ந்த நறிய செங்கழுநீர்களை மாலைகட்டும்படியாக,

இழை புனையூஉ — அணிகளை யணிந்து,

நல் நெடுங்கூந்தல் நறு விரை குடைய — நன்றாகிய நெடிய மயிரிற்பூசின நறிய மயிர்ச்சந்தனத்தை அலைத்து நீக்கும்படியாக,

நரந்தம் அரைப்ப — கத்தூரியை அரைக்கும்படியாக,

நறுஞ் சாந்து மறுக — நறியசந்தனம் அரைக்கும்படியாக,

மெல் நூற் கலிங்கம் கமழ் புகை மடுப்ப — மெல்லிய நூலாற்செய்த கலிங்கங்களுக்கு மணக்கின்ற அகிற்புகையை யூட்டும்படியாக,

பெண் மகிழ்வுற்ற பிணை நோக்கு மகளிர் நெடுஞ்சுடர் விளக்கம் கொளீஇ — குணச்சிறப்பால் உலகத்துப்பெண்சாதி விருப்பமுற்ற மான்பிணைபோலும் நோக்கினையுடையமகளிர் நெடியவொளியினையுடைய விளக்கினையேற்றி,

[நெடுநக, ரெல்லை யெல்லா நோயொடு புகுந்து, கல்லென் மாலை நீங்க:]

நெடு நகர் எல்லை எல்லாம் — பெரிய ஊரினெல்லையாகிய இடமெல்லாம்,

கல்லென் மாலை நோயொடு புகுந்து நீங்க — கல்லென்னுமோசையையுடைய மாலை நயந்தோர்க்கு (௫௪௯) நோயைச்செய்தலோடே புகுந்துபோகையினாலே முந்தையாமஞ்சென்றபின்றை (௬௨௦) யென்க.

நெடுநக (௫௫௬) ரெல்லையெல்லாம் (௫௫௭) மகளிர் (௫௫௫) விளக்கங்கொளீஇக் (௫௫௬) காதலின்றுணைபுணர்தற்குப் (௫௫௦) புனையூஉத் துணைப்பக் (௫௫௧) குடைய (௫௫௨) அரைப்ப மறுக (௫௫௩) மடுப்ப (௫௫௪) இரவுவரும்படி (௫௪௯) ஞாயிறு (௫௪௬) குன்றஞ்சேருகையினாலே (௫௪௭) மாலை (௫௫௮) நயந்தோர்க்கு (௫௪௯) நோயொடு புகுந்து (௫௫௭) பின்னர் நீங்க (௫௫௮) முந்தையாமஞ்சென்றபின்றை (௬௨௦) யெனக்கூட்டுக.

நாணுக் கொள — புணர்ச்சிநீங்கிற்றாகத் தமக்கு உயிரினுஞ்சிறந்தநாணைத் தம்மிடத்தே தடுத்துக்கொள்ள,

[ஏழ்புணர் சிறப்பி னின்றொடைச் சீறியாழ், தாழ்பயற் கனைகுரல் கடுப்பப் பண்ணுப்பெயர்த்து, வீழ்துணை தழீஇ:]

ஏழ் புணர் சிறப்பின் இன்றொடைச் சீறியாழ் பண்ணுப்பெயர்த்து — இசையேழும் தன்னிடத்தேகூடின தலைமையினையுடைய இனிய நரம்பினையுடைய சிறிய யாழைப் பண்களைமாறிவாசித்து,

வீழ் துணை தழீஇ — தம்மைவிரும்பின கணவரைப் புணர்ந்து நாணுக்கொள (௫௫௮),

பாட்டுக் காமத்தைவிளைவித்தலின், யாழைவாசித்து வீழ்துணைதழீஇயென்றார்.

[வியல்விசும்பு கமழ, நீர் திரண் டன்ன கோதை பிறக்கிட்டு:] நீர் திரண்டன்ன கோதை வியல் விசும்பு கமழப் பிறக்கிட்டு — நீர்திரண்டாற்போன்ற வெள்ளியபூக்க

ளாற்செய்த மாலைகளை அகற்சியையுடைய விசும்பிலே சென்றுநாறும்படி கொண்டையிலே முடித்து,

ஆய் கோல் அவிர் தொடி விளங்க வீசி—அழகிய திரட்சியையுடைய விளங்குகின்ற தொடி மிகவிளங்கும்படி கையைவீசி மனைதொறுஞ்சென்று பொய்தலயர (௫௮௧) வென்க.

போது அவிழ் புதுமலர் தெரு உடன் கமழ—அலரும்பருவமாக மலர்ந்த புதிய விடுபூக்கள் தெருவுகளெங்கும் நாற,

மேதகு தகைய மிகுநலம் எய்தி—முற்படப் பலருடன்புணர்ந்த புணர்ச்சியாற் குலைந்த ஒப்பனைகளைப் பின்னும் பெருமைதருகின்ற அழகினையுடைய மிகுகின்ற நன்மையுண்டாகவொப்பித்து,

[பெரும்பல் குவளைச் சுரும்புபடு பன்மலர், திறந்துமோந் தன்ன சிறந்துகமழ் நாற்றத்து:]

திறந்து மோந்து அன்ன சிறந்து கமழ் நாற்றத்து—அலர்கின்றபருவத்தே கையாலலர்த்தி மோந்துபார்த்தாலொத்த மிக்குநாறுகின்ற நாற்றத்தினையுடைய,

பெரும்பல் குவளைச் சுரும்பு படு பன்மலர்—பெரிய பலவாகிய செங்கழுநீரிற் சுரும்புகளுக்கலர்கின்ற பலபூக்களையும்,

[கொண்டன் மலர்ப்புதன் மானப்பூ வேய்ந்து:]

கொண்டல் மலர்ப் புதல் மான வேய்ந்து—மழைக்குமலர்ந்த மலரையுடைய சிறுதூற்றையொக்கச் சூடி,

பூ—ஏனைப்பூக்களையும்,

பலநிறத்துப்பூக்களை நெருங்கப்புனைதல்பற்றிச் சிறுதூறு உவமைகூறினர்.

[நுண்பூ ணாகம் வடுக்கொள முயங்கி, மாயப் பொய்பல கூட்டிக் கவவுக்கரந்து, சேயரு நணியரு நலனயந்து வந்த, விளம்பல் செல்வர் வளந்தப வாங்கி:]

சேயரும் நணியரும் நலன் நயந்து வந்த இளம்பல் செல்வர்—புறமண்டலத்தாரும் உள்ளூரிலுள்ளாருமாய்த் தம்முடைய வடிவழகைவிரும்பிவந்த இளையராகிய பல செல்வத்தையுடையாரை,

பல மாயப் பொய் கூட்டி நுண் பூண் ஆகம் வடுக் கொள முயங்கி—பலவஞ்சனைகளையுடைய பொய்வார்த்தைகளாலே முதற்கூட்டிக்கொண்டு அவருடைய நுண்ணிய பூண்களையுடைய மார்பைத் தம்மார்பிலே வடுப்படும்படியாக முயங்கிப் பின்னர்,

கவவுக் கரந்து வளம் தப வாங்கி—அங்ஙனம் அன்புடையார்போலே முயங்கினமுயக்கத்தை அவர் பொருள்தருமளவுமறைத்து அவருடைய செல்வமெல்லாம் கெடும்படியாக வாங்கிக்கொண்டு,

நுண் தாது உண்டு வறும் பூத் துறக்கும் மென்சிறை வண்டினம் மான—பூ அலருங்காலமறிந்து அதன் நுண்ணிய தாதையுண்டு தாதற்ற வறுவியபூவைப் பின்னர் நினையாமற்றுறந்துபோம் மெல்லிய சிறகையுடைய வண்டின்றிரளையொப்ப,

இது தொழிலுவமம்.

புணர்ந்தோர் நெஞ்சு ஏமாப்ப இன்றுயில் துறந்து—தம்மைநுகர்ந்தோருடைய நெஞ்சு கலக்கமுறும்படி அவரிடத்து இனியகூட்டத்தை நேராகக்கைவிட்டு,

பழம் தேர் வாழ்க்கைப் பறவை போல—பழுமரமுள்ள இடந்தேடிச்சென்று அவற்றின் பழத்தையே ஆராய்ந்து வாங்கிநுகர்தலைத் தமக்குத் தொழிலாகவுடைய புள்ளினம்போல,

தம்முயிரைப் பாதுகாக்கின்ற வாழ்க்கைத்தொழிலை வாழ்க்கையென்றார்.

[கொழுங்குடிச் செல்வரும் பிறரு மேஎய், மணம்புணர்ந் தோங்கிய வணங்குடை நல்லில்:]

கொழுங் குடிச் செல்வரும் பிறரும் மேஎய் அணங்கு உடை நல்லில்—வளவியகுடியிற்பிறந்த செல்வரும் அவர்களாற்றோன்றிய பிறசெல்வருமேவப்பட்ட இல்லுறைதெய்வங்களையுடைய நன்றாகிய அகங்களில்,

குடிச்செல்வரென்றார், நான்குவருணத்தை. பிறரென்றார், அவர்களாற்றோன்றிய வனைச்சாதிகளை.

மணம் புணர்ந்து ஓங்கிய ஆய் பொன் அவிர் தொடிப் பாசிழை மகளிர்—வரைந்துகொள்ளப்பட்டு உயர்ச்சிபெற்ற ஓடவைத்தபொன்னாற்செய்த விளங்குகின்ற தொடியினையும் பசியபூணினையுமுடைய மகளிர்,

ஒண்சுடர் விளக்கத்து—ஒள்ளிய விளக்கினுடையஒளியிலே,

பலர் உடன் துவன்றி—பலருஞ் சேரநெருங்கி,

நீல் நிற விசும்பில் அமர்ந்தனர் ஆடும் வானவமகளிர் மான—நீலநிறத்தையுடைய ஆகாயத்தே நெஞ்சமர்ந்துவிளையாடும்தெய்வமகளிர் வருத்துமாறுபோல,

கண்டோர் * நெஞ்சு நடுக்குறூஉக் கொண்டி மகளிர்— தம்மைக்கண்டோருடைய நெஞ்சை வருத்தமுறுவித்துப் பொருள்வாங்குதலையுடைய பரத்தையர்,

[யாம நல்யாழ் நாப்ப ணின்ற, முழவின் மகிழ்ந்தன ராடி:] யாம நல்யாழ் நாப்பண் தாழ்பு அயற் கனை குரல் கடுப்ப நின்ற முழவின் மகிழ்ந்தனர் ஆடி— முதற்சாமத்தில் வாசித்தற்குரிய நன்றாகிய யாழ்களுக்குநடுவே அவற்றிற்கேற்பத்தாழ்ந்து தம்வயிற்செறிந்த ஓசையையொக்கநின்ற முழவாலே மனமகிழ்ந்தாடி,

தாழ்பயற் கனைகுரல் கடுப்ப (௫௬௦) வென்று முன்னர்வந்ததனை இவ்விடத்துக்கூட்டுக.

குண்டு நீர்ப் பனித் துறைக் குவவு மணல்— ஆழ்ந்த நீரினையுடைய குளிர்ந்த துறையிடத்துக் குவிந்த மணலிலே,

முனைஇ—வெறுத்து,

[மென்றளிர்க், கொழுங்கொம்பு கொழுதி:] கொழுங்கொம்பு மென்றளிர் கொழுதி—கொழுவிய கொம்புகளினின்ற மெல்லியதளிர்களைப் பறித்து,

[நீர்நனை மேவர, நெடுந்தொடர்க் குவளை வடிம்புற வடைச்சி:] குவளை நீர் நனை மேவர நெடுந் தொடர் வடிம்புற அடைச்சி—குவளையை நீர்க்கீழரும்புகளோடே பொருந்துதல்வரக் கட்டின நெடியதொடர்ச்சியை வடிம்பிலேவிழும்படி யுடுத்து,

மணம் கமழ் மனைதொறும் பொய்தல் அயர—மணநாறுகின்ற மனைதோறும் சென்று பொருட்டுருதற்குரிய இளையரோடு விளையாடுதலைச்செய்ய,

அங்ஙனம் விளையாடிவசிகரித்து உறவுகொண்டு பொருள்வாங்குதல் அவர்க்கியல்பு.

வானவமகளிர்மான (௫௮௨) நெஞ்சுநடுக்குறூஉக் கொண்டிமகளிர் (௫௮௩) பலருடன்றுவன்றிக் (௫௮௦) குவவுமணலிலே (௫௮௬) முழவின் மகிழ்ந்தனராடி (௫௮௫)

* நெஞ்சு நடுக்குறூஉங் கொண்டி மகளிரென்றும் பாடம்.

அதனெதிரே இக் (௫௮௬) குவளையையடைச்சிக் (௫௮௭) கோதையை (௫௬௨) விசும்பு கமழப் (௫௬௧) பிறக்கிட்டு (௫௬௨) இளம்பல்செல்வரைக் (௫௭௨) கூட்டி (௫௭௦) முயங்கிப் (௫௬௯) பின்னர்க்கவவுக் கரந்து (௫௭௦) வளந்தபவாங்கித் (௫௭௨) தாதுண்டுதுறக்கும் (௫௭௩) வண்டினமான (௫௭௪) இன்றுயில்துறந்து (௫௭௫) பின்னரும் மிகுநலமெய்திச் (௫௬௫) சுரும்புபடுபன்மலரையும் (௫௬௬) ஏனைப்பூக்களையும் புதன்மானவேய்ந்து (௫௬௮) புதுமலர் தெருவுடன் கமழத் (௫௬௪) தொடியைவீசி (௫௬௩) மணங்கமழ் மனைதொறும் (௫௮௧) பறவைபோலச் (௫௭௬) சென்று பொய்தலயா (௫௮௧) வெனக் கூட்டுக.

செல்வரும் பிறரும் மேவப்பட்ட (௫௭௭) அணங்குடைநல்ல இல்லிலே மணம்புணர்ந்தோங்கிய (௫௭௮) பாசிழைமகளிர் (௫௭௯) ஒண்சுடர்விளக்கத்தே (௫௮௦) சீறியாழைப் (௫௫௯) பண்ணுப்பெயர்த்து (௫௬௦) வீழ்துணைதழீஇ (௫௬௧) நாணுக்கொள (௫௫௮) வெனக்கூட்டுக.

கணம் கொள் அவுணர்க் கடந்த பொலந்தார் மாயோன் மேய ஓண நன்னாள்—திரட்சியைக்கொண்ட அவுணரைவென்ற பொன்னாற்செய்த மாலையினையுடைய மாமையையுடையோன் பிறந்த ஓணமாகியநன்னாளில் ஊரிலுள்ளாரெடுத்த விழவிடத்தே,

[கோணந் தின்ற வடுவாழ் முகத்த, சாணந் தின்ற சமந்தாங்கு தடக்கை, மறங்கொள் சேரி மாறுபொரு செருவின், மாறா துற்ற வடுப்படு நெற்றி:]

மறம் கொள் சேரி மாறு பொரு செருவில் மாறாது உற்ற வடுப்படு நெற்றி—இற்றைநாட் போர்செய்துமென்றுகருதி மறத்தைக்கொண்டிருக்கின்ற தெருவுகளில் தம்மிற்றும் மாறாய்ப்பொருகின்ற போரின்கண்ணே நின்ற அடிமாறாமையாற்பட்ட வடுவழுந்தின நெற்றியினையும்,

சுரும்பு ஆர் கண்ணிப் பெரும்புகல் மறவர்— சுரும்புகள்நிறைந்த போர்ப்பூவினையும் பெரியவிருப்பத்தினையுமுடைய மறவர்,

அத்திருநாளிற்பொரும் சேரிப்போர்கூறினார், அவ்வூர்க்கு இயல்பென்று.

[கடுங்களிறோட்டலின்:] கோணம் தின்றவடு ஆழ் முகத்த (௫௯௨) சாணம் தின்ற சமம் தாங்கு தடக் கைக் (௫௯௩) கடுங்களிறு ஓட்டலின்—தோட்டிவெட்டின வடுவழுந்தின முகத்தையுடையவாய்க் கொலைபழக்கும் போர்யானை பலகாலமெடுத்தலால் தழும்பிருந்த போரைத்தாங்கும் பெரியகையினையுடைய கடியகளிற்றை ஓட்டுகையினாலே,

[காணுந ரிட்ட, நெடுங்கரைக் காழக நிலம்பர லுறுப்ப:] காணுநர் நெடுங்கரைக் காழகம் இட்ட பரல் நிலம் உறுப்ப—அவ்வியானைக்குமுன்னேயோடி அதன்விசையைக்காணும் பரிக்காரர் அவ்வியானை பிடித்துக்கொள்ளுங்காலத்து மேல்வாராமல் அஞ்சி மீளுதற்குச் சமைப்பித்த நெடிய கரையையுடைய நீலநிறத்தையுடையபுடைவைகளிலே வைத்துச் சிந்தினகப்பணம் நிலத்தேகிடந்து கால்களைப் பொதுக்கும்படி,

நெருஞ்சிமுள்ளைப்போல முனைபட இரும்பால் திரளச்சமைத்துத் தூவற்கு யானையஞ்சுமென்று அவர்மடியிலேவைத்த கப்பணத்தைப் பரல்போறலிற் பரலென்றார். *"வேழங், காய்ந்தனன் கடுகவுந்திக் கப்பணஞ் சிதறி னானே" என்றார்பிறரும்.

---

* சீவகசிந்தாமணி, நாமகளிலம்பகம், ௨௫௩:—"ஏந்தல்வே றிருந்த யானையிரிந்தன வெரிபொற் கண்ணி - நாந்தக வுழவர் நண்ணார் கூற்றென நடுங்கி மள்ளர்-சாய்ந்தபின் றறுக ணாண்மைக் கட்டியங் காரன் வேழம் - காய்ந்தனன் கடுக வுந்திக் கப்பணஞ் சிதறி னானே."

கடுங்கள் தேறல் மகிழ்சிறந்து திரிதர—கடியகட்டெளிவையுண்டு மகிழ்ச்சிமிக்குத் திரிதலைச்செய்ய,

ஓணநாளிற் (௫௯௧) பொருநு வடுப்படு நெற்றி (௫௯௫) முதலியவற்றையுடைய மறவர் (௫௯௬) மகிழ்சிறந்து (௫௯௯) பரலுறுப்பத் (௫௯௮) திரிதர (௫௯௯) வெனக் கூட்டுக.

கணவர் உவப்பப் புதல்வர்ப் பயந்து—தங்கணவர் இம்மைமறுமையிற்பெறும் பயன்பெற்றேமென்று மகிழும்படி பிள்ளைகளைப்பெற்று,

பணைத்து ஏந்து இளமுலை அமுதம் ஊற—பாலால்இடங்கொண்டேந்திய இளைய முலை பால்சுரக்கும்படி,

[புலவுப்புனிறு தீர்ந்து பொலிந்த சுற்றமொடு, வளமனை மகளிர் குளநீ ரயர:]

புலவுப் புனிறு தீர்ந்து குளநீர் அயர—புலானாற்றத்தையுடைய ஈன்றணிமைநீங்கித் தெய்வத்தினருளால் ஓரிடுக்கணுமற்றுக் குளத்துநீரிலே குளிக்கையினாலே,

கடுஞ்சூல் மகளிர் பேணி (௬0௧)—முதற்சூல்கொண்டமகளிர் இவ்வாறே இடுக்கணின்றிப் புதல்வர்ப்பயத்தல்வேண்டுமென்று தெய்வத்தைப்பரவிக் குறைதீர்ந்தபின்,

பொலிந்த சுற்றமொடு—மிக்க சுற்றத்தாருடனே,

வளமனை மகளிர்—செல்வத்தையுடைய மனைமகளிர்,

இல்லிருக்குங் குடிப்பிறந்த மகளிர்.

திவவு மெய்ந்நிறுத்துச் செவ்வழி பண்ணி—வலிக்கட்டினை யாழிற்றண்டிலே கட்டிச் செவ்வழியென்னும் பண்ணைவாசித்து,

திவவுக் கூறவே அதினரம்புங் கூறினார்.

குரல் புணர் நல்யாழ் முழவோடு ஒன்றி—குரலென்னுநரம்பு கூடின வன்னம் நன்றாகிய யாழுடனே முழவும்பொருந்தி,

நுண்ணீர் ஆகுளி இரட்ட—மெல்லியநீர்மையினையுடைய சிறுபறையொலிப்ப,

பலவுடன்—பூசைக்குவேண்டும் பொருள்கள் பலவற்றுடனே,

ஒண் சுடர் விளக்கம் முந்துற—ஒள்ளிய சுடர்விளக்கம் முற்பட,

மடையொடு—பாற்சோனகமுதலிய சோறுகளை,

நல் மா மயிலின் மென்மெல இயலி—நன்றாகிய பெருமையையுடைய மயில் போலே மெத்தென மெத்தென நடந்து,

[கடுஞ்சூன் மகளிர் பேணிக்கை தொழுது:]

கைதொழுது—கையாற்றொழுது,

[பெருந்தோட் சாலினி மடுப்ப வொருசார்:]

பெருந் தோள் சாலினி மடுப்ப—பெரிய தோளினையுடைய தேவராட்டியோடே மடுப்ப,

வளமனைமகளிர் சிலர் (௬0௫) புதல்வர்ப்பயந்து (௬00) புனிறுதீர்ந்து (௬0௨) குளநீராடுதலாலே (௬0௩) அதுகண்டு கடுஞ்சூன்மகளிர் பேணிக் (௬0௧) குறைதீர்ந்தபின் பொலிந்தசுற்றத்தோடே (௬0௨) பலவுடன் (௬0௬) சாலினியோடே (௬௧0) பண்ணி (௬0௪) ஒன்றி (௬0௫) இரட்ட (௬0௬) இயலிச்சென்று (௬0௮) கைதொழுது (௬0௯) மடையை (௬0௭) மடுப்ப (௬௧0) வெனக்கூட்டுக.

ஒருசார்—ஒருபக்கம்,

அரும் கடி வேலன் முருகொடு வளைஇ— அரிய அச்சத்தைச்செய்யும் வேலன் இவ்விடுக்கண் முருகனுல்வந்ததெனத் தான்கூறிய சொல்லின்கண்ணே கேட்டோ ரை வளைத்துக்கொண்டு,

பிள்ளையார்வேலை யெடுத்தலின், வேலனென்ருர். என்றது - கழங்குவைத்துப் பிள்ளையாரால்வந்ததென முற்கூறிப் பின் வெறியாடுவெனென்று ஆடுமுறைமை கூறிற்று.

அரிக் கூடு இன்னியம் கறங்க—அரித்தெழும்ஓசையையுடைய சல்லி கரடி முதலியவற்ருேடேகூடின இனிய ஏனைவாச்சியங்கள் ஒலியாநிற்க,

[நேர்நிறுத்துக், கார்மலர்க் குறிஞ்சி சூடிக் கடம்பின், சீர்மிகு நெடுவேட் பேணி:]

கார் மலர்க் குறிஞ்சி சூடி—கார்காலத்தான் மலரையுடையவாகிய குறிஞ்சியைச்சூடி,

கடம்பின் சீர் மிகு நெடுவேள் நேர் நிறுத்துப் பேணி—கடம்புசூடுதலால் அழகு மிகுகின்ற முருகனைச் செவ்விதாகத் தன்மெய்க்கண்ணேநிறுத்தி வழிபடுகையினாலே,

தழூஉப் பிணையூஉ—மகளிர் தம்முட்டழுவிக் கைகோத்து,

மன்றுதொறும் நின்ற குரவை—மன்றுகடோறும்நின்ற குரவைக்கூத்தும்,

சேரிதொறும்—சேரிகடோறுநின்ற,

உரையும்—புனைந்துரைகளும்,

பாட்டும்—பாட்டுக்களும்,

ஆட்டும்—பலவகைப்பட்ட கூத்துக்களும்,

விரைஇ—தம்மிற் கலக்கையினாலே,

வேறு வேறு கம்பலை—வேறுவேருகியஆரவாரம்,

வெறி கொள்பு மயங்கி—ஒழுங்குகொண்டு மயங்கப்பட்டு,

பேர் இசை * நன்னன் பெரும்பெயர் நன்னாள்—பெரியபுகழையுடைய நன்னன்கொண்டாடுகின்ற பிறந்தநாளிடத்து,

அவன்பெயர் அந்நாள் பெறுதலின், பெரும்பெயரைப்பெற்ற நன்னாளென்ருர்.

சேரி விழவின் ஆர்ப்பு எழுந்தாங்கு—சேரிகளிலுள்ளார் கொண்டாடுகின்ற விழாவாலே ஆரவாரமெழுந்தாற்போல,

முந்தை யாமம் சென்ற பின்றை—முற்பட்டசாமம் நடந்தபின்பு,

கொண்டிமகளிர் (ருஅரு) பொய்தலயரப் (ருஅக) பாசிழைமகளிர் (ருஎக) வீழ்துணைதழீஇ (ருசுக) நாணுக்கொள (ருருஅ) மறவர் (ருகசு) மகிழ்சிறந்துதிரிதரக் (ருகசு) கடுஞ்சூன்மகளிர்கைதொழுது (சுoக) மடுப்ப ஒருசார் (சுகo) நெடுவேட்பேணுகையினாலே (சுகசு) மன்றுதொறுநின்ற குரவையும் சேரிதொறுநின்ற (சுகரு) உரையும் பாட்டும் ஆட்டும் விரவுகையினாலே (சுகசு) வேறுவேறுபட்டகம்பலை (சுகஎ) சேரிவிழவின்ஆர்ப்பெழுந்தாங்கு (சுகக) வெறிகொள்புமயங்கப்பட்டு (சுகஎ) முந்தை யாமஞ்சென்றபின்றை (சுஉo) யெனக்கூட்டுக.

ஒருசார் (சுகo) விரைஇ (சுகசு) யென்க.

பணிலம் கலி அவிந்து அடங்க—சங்குகள் ஆரவாரமொழிந்து அடங்கிக்கிடக்க,

* நன்னன் - ஓர்குறுநிலமன்னன்.

காழ் சாய்த்து நொடை நவில் நெடுங் கடை அடைத்து — சட்டக்காலவாங்கிப் பண்டங்களுக்கு விலைகூறும் நெடியகடையையடைத்து,

மட மதர் ஒள்ளிழை மகளிர் பள்ளியயர — மடப்பத்தினையும் செருக்கினையும் ஒள்ளிய அணிகலங்களையுமுடைய மகளிர் துயிலுதலைச்செய்ய,

[நல்வரி யிறாஅல் புரையு மெல்லடை, யயிருருப் புற்ற வாடமை விசயங், கவவொடு பிடித்த வகையமை மோதகம்:]

விசயம் ஆடு அமை நல் வரி இறாஅல் புரையும் மெல்லடை — பாகிலே சமைத்தலமைந்த நல்லவரிகளையுடைய தேனிறாலையொக்கும் மெல்லிய அடையினையும்,

கவவொடு அயிர்பிடித்த வகை அமை உருப்பு உற்ற மோதகம் — பருப்புந்தேங்காயுமாகிய உள்ளீடுகளோடே கண்டசருக்கரைகூட்டிப்பிடித்த வகுப்பமைந்த வெம்மைபொருந்தின அப்பங்களையும்,

தீஞ்சேற்றுக் கூவியர் தூங்குவனர் உறங்க — இனிய பாகோடு சேர்த்துக்கரைத்த மாவினையுமுடைய அப்பவாணிகரும் அவற்றோடேயிருந்து தூங்குவனராயுறங்க,

விழவின் ஆடும் வயிரியர் மடிய — திருநாளின்கண்ணே கூத்தாடுங்கூத்தர் அதனையொழிந்து துயில்கொள்ள,

பாடு ஆன்று அவிந்த பனிக் கடல் புரைய — ஒலிநிறைந்தடங்கின குளிர்ந்த கடலையொக்க,

பாயல் வளர்வோர் கண் இனிது மடிப்ப — படுக்கையிலே துயில்கொள்ளுவோர் கண் இனிதாகத் துயில்கொள்ள,

[பானாட் கொண்ட கங்கு லிடையது:]

பானாட் கொண்ட கங்குல் — பதினைந்தாநாழிகையை முடிவாகக்கொண்ட கங்குல்,

[பேயு மணங்கு முருவுகொண் டாய்கோற், கூற்றக் கொஃறேர் கழுதொடு கொட்ப:]

பேயும் அணங்கும் உருவுகொண்டு கழுதொடு கொட்ப — பேய்களும் வருத்துந் தெய்வங்களும் வடிவுகொண்டு கழுதுடனே சுழன்றுதிரிய,

கழுது - பேயிலொருசாதி.

ஆய் கோற் கூற்றக் கொஃறேர் அச்சமறியாது ஏமமாகிய (சுருஉ) மதுரை (சுகக) யெனக்கூட்டி யாக்கைநிலையாதென்றறிந்து மறுமைக்குவேண்டுவன செய்துகொண்டமையின், அழகிய கோலையுடைய கூற்றத்தின் கொலைக்கஞ்சாமற் காவலுண்டாயிருக்கின்றதூரெனக.

* "கரும்பாட்டிக் கட்டி *** பரிவ திலர்." என்றார் பிறரும். கொஃறேர் - காலசக்கரம்.

இரும்பிடி மேஎந் தோல் அன்ன இருள் சேர்பு — கரியபிடியின் கண்ணேமேவின தோலையொத்த கருமை தமக்கு இயல்பாகச்சேரப்பட்டு,

இருள் - கருஞ்சட்டையுமாம்.

---

* நாலடியார், அறன்வலியுறுத்தல், ரு:— "கரும்பாட்டிக் கட்டி சிறுகாலைக் கொண்டார் - துரும்பெழுந்து வேங்காற் றுயராண் டுழவார் - வருந்தி யுடம்பின் பயன்கொண்டார் கூற்றம் - வருங்காற் பரிவ திலர்."

கல்லும் மரனும் துணிக்கும் கூர்மை நிலன் அகழ் உளியர் (௬௪௧)—கல்லையுமரத்தையுமறுக்குங் கூர்மையையுடைய நிலத்தையகழும் உளியையுடையராய்,

நிலத்தை அகழுங்காலத்து இடைப்பட்ட கற்களுக்கும் மரங்களுக்கும் வாய்மடியாதென்றார்.

தொடலை வாளர்—தூக்கிட்ட வாளினையுடையராய்,

தொடுதோல் அடியர்—செருப்புக்கோத்த அடியினையுடையராய்,

[குறங்கிடைப் பதித்த கூர்நுனைக் குறும்பிடிச், சிறந்த கருமை நுண்வினை நுணங்கற, னிறங்கவர்பு புனைந்த நீலக் கச்சினர், மென்னூ லேணிப் பன்மாண் சுற்றினர், நிலனக ழுளியர்:]

சிறந்த கருமை நுண்வினை நுணங்கு அறல் — மிக்ககருமையினையுடைய நுண்ணியதொழில்களையுடைய நுண்மை தன்னிடத்தே பற்றுதலையுடையது,

என்றது இறைமுடிந்தசேலையென்றவாறு; ஆகுபெயர்.

குறங்கிடைப் பதித்த கூர் நுனைக் குறும்பிடி—அச்சேலைகட்டினமருங்கிற் குறங்கிடைத் தெரியாமற் கிடக்கும்படியழுத்தின கூரிய முனையினையுடைய சிலசொட்டை,

நிறம் கவர்பு புனைந்த நீலக் கச்சினர்—பலநிறங்களைத் தன்னிடத்தேகைக்கொண்டு கைசெய்யப்பட்ட நீலநிறத்தையுடைய கச்சினையுடையராய்,

என்றது:- கட்டினசேலையிடத்தே செருகித் துடையுடனேசேர்ந்துகிடக்குஞ் சொட்டையின்மேலேகட்டின நீலக்கச்சினையென்றவாறு. அதுதெரியாமல் துடையுடனேசேர்ந்துகிடத்தலிற் குறங்கிடைப்பதித்தவென்றார்.

மென்னூல் ஏணிப் பன்மாண் சுற்றினர்— மெல்லிய நூலாற்செய்த ஏணியை அரையிலே பலவாய் மாட்சிமைப்படச்சுற்றிய சுற்றினையுடையராய்,

மதிற்றலையிலே உள்ளேவிழவெறிந்தாற் கைபோல மதிலைப்பிடித்துக்கொள்ளும்படி இரும்பாற்சமைத்ததனைத் தலையிலேயுடைய நூற்கயிற்றை உள்ளேவிழவெறிந்து அதனைப் புறம்பேநின்றுபிடித்துக்கொண்டு அம்மதிலை ஏறுவராகலின், ஏணியென்றார்.

கலன் நசைஇக் கொட்கும்—பேரணிகலங்களைநச்சுதலாலே அவற்றையெடுத்தற்கு இடம்பார்த்துச்சுழன்றுதிரியும்,

கண் மாறு ஆடவர் ஒடுக்கம் ஒற்றி—விழித்தகண்இமைக்குமளவிலே மறைகின்ற கள்வர் ஒதுங்கியிருக்கின்ற இடத்தைவேய்த்து,

செருப்பைத்தொட்டுக் கச்சைக்கட்டி நூலேணியைச்சுற்றி உளியையெடுத்து வாளைப்பிடித்துக்கொட்குங்கள்வரொன வினையெச்சவினைக்குறிப்புமுற்று வினையெச்சமாய்நிற்குமாறு, * "முன்னத்தி னுணருங் கிளவியு முளவே" என்னுஞ்சூத்திரத்தானுணர்க.

வயக் களிறு பார்க்கும் வயப் புலி போல ஒற்றி (௬௪௨)—வலியகளிற்றை இரையாகப்பார்க்கும் வலியபுலியைப்போலே வேய்க்கையினாலே,

துஞ்சாக் கண்ணர்—துயில்கொள்ளாத கண்ணையுடையராய்,

அஞ்சாக் கொள்கையர் — பேய்முதலியவற்றிற்கு அஞ்சாத கோட்பாட்டையுடையராய்,

---

* தொல்காப்பியம், சொல்லதிகாரம், எச்சவியல், ௬௩.

அறிந்தோர் புகழ்ந்த ஆண்மையர்—களவிற்ருெழிலையறிந்தவர்களாலே புகழப்பட்ட களவிற்ருெழிலை ஆளுந்தன்மையையுடையராய்,

[செறிந்த, நூல்வழிப் பிழையா நுணங்குநுண் டேர்ச்சி, யூர்காப் பாளர்:] நுணங்கு செறிந்த நூல்வழிப் பிழையா நுண்டேர்ச்சி ஊர்காப்பாளர்— நுண்மைசெறிந்த நூலின்வழியைத்தப்பாத நுண்ணிய ஆராய்ச்சியையுடைய ஊரைக்காத்தற்ருெழிலை ஆளுதலையுடையராய்,

களவுகொண்டற்குங் காத்தற்குங்கூறிய நூல்கள்போவாரொன்ருர்.

நூல்வழிப்பிழையா ஊரெனக்கூட்டி நூலிற்சொன்னபடி சமைந்தவூரொன்றுமாம்.

ஊக்கருங் கணையினர்—தப்பக்கருதிமுயல்வார்க்குத் தப்புதற்கரிய அம்பினையுடையராய்,

தேர் வழங்கு தெருவில் நீர் திரண்டு ஒழுக மழை அமைந்துற்ற அரைநாள் அமயமும்—தேரோடுந்தெருவின்கண்ணே நீர்திரண்டொழுகும்படி மழை மிகப்பெய்த நடுநாளாகிய பொழுதிலும்,

அசைவிலர் எழுந்து நயம்வந்து வழங்கலின்—காவலிற் றப்பிலராய்ப்போந்து விருப்பந்தோன்றி உலாவுகையினுலே,

[கடவுள் வழங்குங் கையறு கங்குலும்:] இடையது (கூகக) கடவுள் வழங்கும் கை அறு கங்குல்—இரண்டாஞ்சாமத்திற்கும் நான்காஞ் சாமத்திற்கும் நடுவிடத்ததாகிய தெய்வங்களுலாவுஞ்செயலற்றகங்குல்,

உம்மையை யாமமுமெனப் பின்னேகூட்டுக.

[அச்ச மறியா தேம மாகிய, மற்றை யாமம் பகலுறக் கழிப்பி:]

மற்றையென்பதனை முந்தையாமஞ் சென்றபின்றை யென்பதன்பின்னும் மூன்ருஞ்சாமத்தினேடுங் கூட்டுக.

அச்சமறியா தேமமாகிய என்றும், மற்றையென்றும் யாமமென்றும் பிரித்து முன்னே கூட்டுக.

பகல் உறக் கழிப்பி—இங்ஙனம் பகுத்தலுறும்படி போக்கி,

முந்தை யாமஞ் சென்ற பின்றை (கூஉ0) மற்றைப் (கூருங) பாளுட்கொண்டகங்கு ல்(கூகக) யாமத்தையும் மற்றை (கூருங) இடையதாகிய (கூகக) கடவுள்வழங்குங் கங்குல் (கூருக) யாமத்தையும் (கூருங) கலியவிந்தடங்கப் (கூஉக) பள்ளியயர (கூஉங) உறங்க (கூஉஎ) வயிரியர்மடியப் (கூஉஅ) பேயும் அணங்குமுருவுகொண்டு (கூஙஉ) கழுதொடுகொட்ப (கூஙங) ஊர்காப்பாளர் (கூசஎ) புலிபோலக் (கூசங) கண்மாருடவர் ஒடுக்கமொற்றுகையினுலே (கூசஉ) கண்ணராய்க் கொள்கையராய் (கூசச) ஆண்மையராய்க் (கூசரு) கணையராய் (கூசஎ) அரைநாளமயமும் (கூசக) எழுந்துநயம்வந்துவழங்கலிற் (கூரு0) பனிக்கடல்புரையப் (கூஉக) பாயலின்வளர்வோர் கண்ணினிதுமடிப்பப் (கூங0) பகலுறக்கழிப்பி (கூருங) யெனமுடிக்க.

இங்ஙனங் கழிக்கின்றது இராப்பொழுதென்றுணர்க.

[போதுபிணி விட்ட கமழ்நறும் பொய்கை:] பிணி விட்ட போது கமழ் நறும் பொய்கை— தளையவிழ்ந்த பூக்கள்நாறும் நறிய பொய்கைகளிலே,

[தாதுண் டும்பி போதுமுரன் ருங்கு:] போது தாது உண் தும்பி முரன்ருங்கு— அப்பூக்களில் தாதையுண்ணுந்தும்பிகள் பாடினுற்போல,

[ஓத லந்தணர் வேதம் பாட:] வேதம் ஓதல் அந்தணர் பாட—வேதத்தை முற்ற ஓதுதலையுடையஅந்தணர் வேதத்திற் றெய்வங்களைத்துதித்தவற்றைச் சொல்ல,

[சீரினி து கொண்டு நரம்பினி தியக்கி, யாழோர் மருதம் பண்ண:] யாழோர் சீர் இனிதுகொண்டு நரம்பு இனிது இயக்கி மருதம் பண்ண—யாழோர் தாளவறுதியை இனிதாக உட்கொண்டு நரம்பை இனிதாகத்தெறித்து மருதத்தைவாசிக்க,

காழோர் கடுங் களிறு கவளம் கைப்ப— பரிக்காரர் கடியகளிற்றைக் கவளத் தைத்தீற்ற,

நெடுந்தேர்ப் பணை நிலைப் புரவி புல்லுணாத் தெவிட்ட— நெடியதேரிலேபூணும் பந்தியினிற்றலையுடைய குதிரைகள் புல்லாகிய உணவைக் குதட்ட,

பல் வேறு பண்ணியக் கடை மெழுக்கு உறுப்ப—பண்டம்விற்பார் பலவாய் வேறுபட்ட பண்டங்களையுடைய கடைகளை மெழுகுதலைச்செய்ய,

கள்ளோர் களி நொடை நுவல—கள்ளைவிற்போர் களிப்பினையுடைய கள்ளிற் கு விலைசொல்ல,

களி - ஆகுபெயர்.

இல்லோர் நயந்த காதலர் கவவுப் பிணித் துஞ்சி—கற்புடைமகளிர் தாங்கள் விரும்பின கணவருடைய முயக்கத்திற்பிணிப்பாலே துயில்கொண்டு,

புலர்ந்து விரி விடியல் எய்த விரும்பி—இருண்மாய்ந்து கதிர்விரிகின்ற விடியற் காலத்தைப் பெறுகையினாலே அக்காலத்து இல்லத்திற்செய்யத்தகுவனவற்றைச் செய்தற்குவிரும்பி,

கண் பொரா எறிக்கும் மின்னுக்கொடி புரைய — கண்ணை வெறியோடப்பண் ணிவிளங்கும் மின்னொழுங்கை யொப்ப,

ஒண் பொன் அவிர் இழை தெழிப்ப இயலி—ஒள்ளிய பொன்னாற்செய்துவிளங் குஞ் சிலம்புமுதலியனவொலிப்பப் புறம்போதுகையினாலே,

திண்சுவர் நல்லில் கதவங் கரைய — திண்ணியசுவர்களையுடைய நல்லவகங்களிற் கதவுகளொலிப்ப,

உண்டு மகிழ் தட்ட மழலை நாவிற் பழஞ்செருக்காளர் தழங்கு குரல் தோன்ற— கள்ளையுண்டு களிப்பினைத் தம்மிடத்தேதடுத்துக்கொண்ட மழலைவார்த்தையையு டைய நாவினையுடைய பழையகளிப்பினையுடையாருடைய முழங்குகின்ற குரல்க டோன்ற,

சூதர் வாழ்த்த மாகதர் நுவல—நின்றேத்துவார்வாழ்த்த இருந்தேத்துவார் புக ழைச்சொல்ல,

வேதாளிகரொடு நாழிகை இசைப்ப — வைதாளிகர் தத்தந் துறைக்குரியனவ ற்றை யிசைப்ப நாழிகைசொல்லுவார் நாழிகைசொல்ல,

நாழிகை - ஆகுபெயர்.

இமிழ் முரசு இரங்க—ஒலிக்கின்ற பள்ளியெழுச்சிமுரசு ஒலிப்ப,

ஏறு மாறு சிலைப்ப—ஏறுகள் தம்முண்மாறுபட்டு முழங்க,

பொறி மயிர் வாரணம் வைகறை இயம்ப—பொறியினையுடைய மயிரினையுடை ய கோழிச்சேவல் விடியற்காலத்தை அறிந்துகூவ,

யானையங்குருகின் சேவலொடு காமர் அன்னம் கரைய— வண்டாழ்ங்குருகினுடைய சேவல்களோடே விருப்பத்தையுடைய அன்னச்சேவல்களும் தமக்குரிய பேடைகளை யழைக்க,

அணி மயில் அகவ—அழகியமயில்கள் பேடைகளையழைக்க,

பிடி புணர் பெருங்களிறு முழங்க—பிடியோடேகூடின பெரியயானைகள் முழங்க,

[முழுவலிக், கூட்டுறை வயமாப் புலியொடு குழூம:] வயமாக்கூட்டுறை முழுவலிப் புலியொடு குழும — கரடிமுதலிய வலியவிலங்குகள் கூட்டிலேயுறைகின்ற மிக்கவலியையுடைய புலியுடனே முழங்க,

வானம் நீங்கிய நீனிற விசும்பின்—ஆகாயம் தனக்குவடிவின்றென்னுந் தன்மைநீங்குதற்கு மேகபடலத்தால் நீலநிறத்தையுடைய ஆகாயத்தின்கண்ணே,

இனிச் செக்கர்வானம்போன விசும்பென்பாருமுளர்.

மின்னு நிமிர்ந்தனையராகி—மின்னுநுடங்கின தன்மையினையுடையராய்,

நறவு மகிழ்ந்து— மதுவையுண்டு,

மாண் இழை மகளிர் புலந்தனர் பரிந்த பரூஉக்காழ் ஆரம் சொரிந்த முத்தமொடு— மாட்சிமைப்பட்ட பேரணிகலங்களையுடைய மகளிர் கணவரோடேபுலந்தனராயறுத்த பருத்தலையுடைய வடமாகிய ஆரஞ்சொரிந்த முத்தத்தோடே,

மகளிர் மகிழ்ந்து புலந்தனராய்ப் பரிந்த முத்தமென்க.

[பொன்சுடு நெருப்பி னிலமுக் கென்ன:] பொன் சுடு நெருப்பு உக்க நிலம் என்ன—பொன்னையுருக்குகின்ற நெருப்புச்சிந்தின நிலம்போல,

என்றது - கரியுந் தழலும் பொன்னுஞ் சிந்திக்கிடந்தாற்போலவென்றதாம்.

[அம்மென் குரும்பைக் காய்படு பிறவும்:]

பிறவும்—முத்தொழிந்த மாணிக்கமும் மரகதமும் பொன்னும் மணிகளும்,

அம் மென் குரும்பைக் காய் — அழகிய மெத்தென்ற இளைதாகிய பச்சைப் பாக்கும்,

படுபு—விழுந்து,

தரு மணல் முற்றத்து—கொண்டுவந்திட்ட மணலையுடைய முற்றத்தே,

அரி ஞிமிறு ஆர்ப்ப—வண்டுகளும் மிஞிறுகளும் ஆரவாரிப்ப,

மென்பூஞ் செம்மலொடு நன்கலம் சீப்ப— மெல்லிய பூவாடல்களுடனே நல்ல பூண்களையும் பெருக்கிப்போகடும்படி,

முத்தத்தோடே பிறவும் காயும் முற்றத்தேவிழுகையினாலே அவற்றையும் செம்மலோடே கலங்களையும் அரிமிஞிறார்ப்பச் சீப்பவென்க.

இரவுத் தலைப் பெயரும் ஏம வைகறை—இராக்காலம் தன்னிடத்தில்நின்றும் போகின்ற எல்லாவுயிர்க்கும் பாதுகாவலாகிய விடியற்காலத்திலே,

பாடப் (௬௫௬) பண்ணக் (௬௫௮) கைப்பத் (௬௫௯) தெவிட்ட (௬௬0) உறுப்ப (௬௬௧) நுவலக் (௬௬௨) கரையத் (௬௬௭) தோன்ற (௬௬௮) வாழ்த்த நுவல (௬௭0) இசைப்ப (௬௭௧) இரங்கச் சிலைப்ப (௬௭௨) இயம்பக் (௬௭௩) கரைய அகவ (௬௭௫) முழங்கக் (௬௭௬) குழுமச் (௬௭௭) சீப்பத் (௬௮௫) தலைப்பெயருமெனமுடிக்க.

மை படு பெருந்தோள் மழவர் ஓட்டி இடைப்புலத்து ஒழிந்த ஏந்து கோட்டு யானை—பிறர்தோள் குற்றப்படுதற்குக்காரணமான பெரியதோளையுடைய மழவரைக்

கெடுத்து அவர்விட்டுப்போகையினாலே போர்க்களத்தேநின்ற ஏந்தினகொம்பினையுடைய யானைகளும்,

மழவர் - சிலவீரர்.

பகைப்புலங் கவர்ந்த பாய்பரிப் புரவி—பகைவர்நாட்டிலே கைக்கொண்டுவந்த பாய்ந்துசெல்லும் செலவினையுடைய குதிரைகளும்,

[வேல்கோ லாக வாள்செல நூறிக், காய்சின முன்பிற் கடுங்கட் கூளியர், ஊர் சுடு விளக்கிற் றந்த வாயமும்:] காய் சினம் முன்பிற் கடுங்கண் கூளியர் ஊர் சுடு விளக்கின் ஆள் செல நூறி வேல் கோலாகத் தந்த ஆயமும்—எரிகின்ற சினத்தையுடைத்தாகிய வலியினையும் தறுகண்மையினையுமுடைய வாயக்களாயிலிருந்த வேட்டுவர் பகைவரூரைச்சுடுகின்ற விளக்கிலே நிரைகாத்திருந்தவீரரை மாளவெட்டி வேல் கோலாக அடித்துக்கொண்டுவந்த பசுத்திரளும்,

நாடு உடை நல்லெயில் அணங்குடைத் தோட்டி — அகநாட்டைச் சூழவுடைத்தாகிய மூழ்வரண்களிலிட்ட வருத்தத்தையுடைய கதவுகளும்,

நாடொறும் விளங்கக் கைதொழூஉப் பழிச்சி நாள் தர வந்த விழுக்கலம்—நாடொறும் தமக்குச்செல்வமிகும்படியாகக் கையாற்றொழுதுவாழ்த்தி நாட்காலத்தே திறையாகக்கொண்டுவர வந்த சீரியகலங்களும்,

அனைத்தும்—அத்தன்மையனபிறவும்,

கங்கை அம் பேரியாறு கடல் படர்ந்தாங்கு அளந்து கடை அறியா மதுரை (௬௯௯)—கங்கையாகிய அழகிய பெரியயாறு ஆயிரமுகமாகக் கடலிலேசென்றாற்போல அளந்து முடிவறியாத மதுரை,

வளம் கெழு தாரமொடு— வளப்பம்பொருந்தின அரும்பண்டங்களோடே,

[புத்தே ளுலகங் கவினிக் காண்வர:] புத்தேள் உலகம் காண்வரக் கவினி—தேவருலகம்வந்து காணுதலுண்டாகத் தான் அழகைப்பெற்று,

கூற்றக் கொண்டோர் (௬௩௩) அச்சமறியாதேமமாகிய (௬௫௨) மிக்குப்புகழெய்திய மதுரையென்க.

பாடல்சான்ற நன்னாட்டு நடுவணதாய் (௩௩௧) இருபெருநியமத்து (௩௬௫) நாளங்காடிக்கம்பலை (௪௩௦) நாடார்த்தன்றேயாய் (௪௨௮) அல்லங்காடியழிதருகம்பலை (௫௪௪) புள்ளினிசையெழுந்தற்றேயாய் (௫௪௩) ஞாயிறு (௫௪௬) குன்றஞ்சேருகையினாலே (௫௪௭) மாலை (௫௫௮) புகுந்து (௫௫௭) பின்னர்நீங்க (௫௫௮) முந்தையாமஞ்சென்ற பின்றை (௬௨௦) மற்றைப் (௬௫௩) பானாட்கொண்டகங்குல் (௬௩௧) யாமத்தையும் மற்றை (௬௫௩) யிடையதாகிய (௬௩௧) கடவுள் வழங்குங்கங்குல் (௬௫௧) யாமத்தையும் பகலுறக்கழிப்பிச் (௬௫௩) சேப்ப (௬௮௫) இராக்காலந் தன்னிடத்தினின்றும் போகின்றவைகறையிலே (௬௮௬) வளங்கெழுதாரத்தோடே (௬௯௭) யானையும் (௬௮௮) புரவியும் (௬௮௯) ஆயமும் (௬௯௨) தோட்டியும் (௬௯௩) கலமும்அனைத்துங் (௬௯௫) கங்கையாறுகடற்படர்ந்தாற்போல (௬௯௬) அளந்துமுடிவறியாத (௬௯௭) மதுரை (௬௯௯) யென்க.

கவினிப் (௬௯௮) புகழெய்திய (௬௯௯) பெரும்பாணிருக்கை (௩௪௨) முதலியவற்றையுடைய மதுரை (௬௯௯) யென்க.

மிக்குப் புகழ் எய்திய பெரும்பெயர் மதுரை— மிகுத்துப் புகழைப்பெற்ற பெரும்பொருளையுடைய மதுரை,

பெரும்பொருளென்றது வீட்டினை; * "பெற்ற பெரும்பெயர் பலர்கை யிரீஇய" என்றார் பிறரும்.

[சினைதலை மணந்த சுரும்புபடு செந்தீ, யொண்பூம் பிண்டி யவிழ்ந்த காவில்:] சினை தலை மணந்த பிண்டிச் சுரும்பு படு செந்தீ ஒண்பூ அவிழ்ந்த காவில்—கொம்புகள் தம்மிற்றலைகூடின அசோகினுடைய சுரும்புகளுண்டாஞ் செந்தீப்போலும் ஒள்ளியபூவிரிந்த பொழிலிடத்தே,

சுடர் பொழிந்து ஏறிய விளங்கு கதிர் ஞாயிற்று இலங்கு கதிர் இளவெயில் தோன்றி யன்ன—ஒளியைச்சொரிந்து அத்தகிரியிலே போகவிளங்குகின்ற கிரணங்களையுடைய ஞாயிற்றினுடைய விளங்குங்கிரணங்களின் இளவெயில் தோன்றினாலொத்த மகளிர் (௭௧௨),

என்றது-பூத்த அசோகம்பொழிலிடத்தே இளவெயில் எறித்தாற்போலப் புணர்ச்சியாற்பெற்ற நிறத்தையுடைய மகளிரென்க.

[தமனியம் வளைஇய தாவில் விளங்கிழை:] தாவில் தமனியம் வளைஇய விளங்கிழை— ஓட்டற்ற பொன் நடுவழுத்தினமணிகளைச்சூழ்ந்த விளங்குகின்ற பேரணிகலங்களையும்,

நிலம் விளக்குறுப்ப மேதகப் பொலிந்து— நிலத்தையெல்லாம் விளக்கமுறுக்கும்படி கற்புமேம்படப் பொலிவுபெற்று,

மயிலோடு அன்ன சாயல்— மயிலோடு ஒருதன்மைத்தாகிய மென்மையினையும்,

மாவின் தளிர் ஏர் அன்ன மேனி — மாவின்தளிரினதழகையொத்த நிறத்தினையும்,

தளிர்ப் புறத்து ஈர்க்கின் அரும்பிய திதலையர்— தளிரினது புறத்தில் ஈர்க்குப்போலத் தோன்றிய திதலையையுடையராய்,

கூர் எயிற்று—கூரிய எயிற்றினையும்,

ஒண்குழை புணரிய வண் தாழ் காதின் — ஒள்ளிய மகரக்குழைபொருந்திய வளவிய தாழ்ந்த காதினையும்,

[கடவுட்கயத் தமன்ற சுடரிதழ்த் தாமரைத், தாதுபடும் பெரும்போது புரையும் வாண் முகத்து:]கயத்து அமன்ற கடவுட் சுடர் இதழ்த் தாமரைத் தாது படும் பெரும் போது புரையும் வாள் முகத்து— குளத்திலே நெருங்கின தெய்வங்கட்குரிய நெருப்புப்போலுமிதழ்களையுடைய தாமரையினது தாதுண்டாம்பெரியபூவை ஒக்கும் ஒளியினையுடைய முகத்தினையும்,

ஆய் தொடி மகளிர்—நன்றாகவாராய்ந்த தொடியினையுமுடைய மகளிருடைய,

பொலிந்து (௭0௬) திதலையராய் (௭0௮) இழையினையும் (௭0௪) சாயலினையும் (௭0௫) மேனியினையும் (௭0௭) எயிற்றினையும் (௭0௮) காதினையும் (௭0௯) முகத்தினையும் (௭௧௧) தொடியினையுமுடைய மகளிர் (௭௧௨) என்க.

நறுந்தோள் புணர்ந்து— நறிய தோளைமுயங்கி,

கோதையிற் பொலிந்த சேக்கைத் துஞ்சி— தூக்குமாலைகளாற் பொலிவுபெற்ற படுக்கையிலே துயில்கொண்டு,

புணர்ந்து பின்னைத் துயிலுங்காலத்துத் தனியேதுயிலுதல் இயல்பென்பதுதோன்றப் புணர்ந்துதுஞ்சியென்றார்.

---

* பதிற்றுப்பத்து, ஒன்பதாம்பத்து, ௯0.

* "ஐந்துமூன் றடுத்த செல்வத் தமளியி னியற்றி" என்றார் பிறரும்.

திருந்து துயில் எடுப்ப இனிதின் எழுந்து — செல்வத்தைநினைந்தின்புறுகின்ற பற்றுள்ளம் உறக்கத்தையுணர்த்துகையினாலே அதுநினைத்து இனிதாகப் பின் எழுந்து,

என்றது - தன்செல்வம் இடையறாதொழுகுதற்கு வேண்டுங் காரியங்களை விடியற்காலத்தே மனத்தாலாராயவேண்டுதலின், துயிலெடுப்புக்கு இது காரணமாயிற்று. † "வைகறை யாமந் துயிலெழுந்து தான்செய்யு, நல்லறனு மொண்பொருளுஞ் சிந்தித்து" என்றார் ஆசாரக்கோவையில்.

இனி நன்றாகிய துயிலென்றுமாம்.

[திண்கா ழார நீவிக் கதிர்விடு, மொண்கா ழாரங் கவைஇய மார்பின், வரிக்கடைப் பிரச மூசுவன மொய்ப்ப, வெருத்தந் தாழ்ந்த விரவுப்பூந் தெரியற், பொலஞ்செயப் பொலிந்த நலம்பெறு விளக்கம், வலிகெழு தடக்கைத் தொடியொடு சுடர்வரச், சோறமை வுற்ற நீருடைக் கலிங்க, முடையணி பொலியக் குறைவின்று கவைஇ, வல்லோன் றைஇய வரிப்புனை பாவை, முருகியன் றன்ன வுருவினை யாகி:]

வல்லோன் தைஇய வரிப் புனை பாவை முருகு இயன்றன்ன உருவினையாகி— சித்திரகாரி பண்ணப்பட்ட எழுதிக்கைசெய்த பாவையிடத்தே தெய்வத்தன்மை நிகழ்ந்தாற்போன்ற வடிவினையுடையையாய்,

என்றதனால், நாட்காலையில் அரசர்க்குரிய கடன்கள்கழித்துத் தெய்வவழிபாட்டோடிருந்தமை கூறினார்.

திண் காழ் ஆரம் நீவிக் கதிர் விடும் ஒண் காழ் ஆரம் கவைஇய மார்பின்—திண்ணிய வயிரத்தையுடைய சந்தனத்தைப்பூசி ஒளிவிடும் ஒள்ளியவடமாகிய முத்துச்சூழ்ந்த மார்பிலே,

நீவியென்னுஞ் செய்தெனெச்சம் பிறவினைகொண்டது.

வரிக்கடைப் பிரசம் மூசுவன மொய்ப்ப—வரியையுடைத்தாகிய பின்னையுடைய தேனினமும் மற்றும் மொய்க்கப்படுவனவாகிய வண்டுமுதலியனவும் மொய்ப்ப,

எருத்தம் தாழ்ந்த விரவுப் பூந்தெரியல்—கழுத்திடத்தினின்றுந்தாழ்ந்த விரவுதலையுடைய பூமாலையையுடைத்தாகிய மார்பென (எகசு) முன்னேகூட்டுக.

பொலம் செயப் பொலிந்த நலம் பெறு விளக்கம் வலி கெழு தடக் கைத் தொடியொடு சுடர் வர — பொன்னாற்செய்கையினாலே பொலிவுபெற்ற மணி[illegible] மோதிரம் வலிபொருந்தின பெரியகையில் வீரவளையோடு விளக்கம்வர,

சோறு அமைவுற்ற நீருடைக் கலிங்கம்—சோறு தன்னிடத்தே பொருந்[illegible]ற்ற நீரையுடைய துகில்,

* சீவகசிந்தாமணி, காந்தருவதத்தையாரிலம்பகம், கூசசு:— "ஐந்து[illegible] டுத்த செல்வத் தமளிமூன் றியற்றிப் பூம்பட் - டெந்திர வெழினி வாங்கி யி[illegible] வாசச் செப்புஞ் - சந்தனச் சாந்தச் செப்புந் தண்மலர் மாலை பெய்த - விந்[illegible] நீல[illegible] செப்பு மிளையவ ரேந்தி னாரே."

† ஆசாரக்கோவை ரு:— "வைகறை யாமந் துயிலெழுந்து தான்செய்யு- நல்லறமு மொண்பொருளுஞ் சிந்தித்து வாய்வதில் - தந்தையுந் தாயுந் தொழுதெழுக வென்பதே - முந்தையோர் கண்ட முறை."

என்றது கஞ்சியிட்டதுகிலை.

உடை அணி பொலியக் குறைவின்று கவைஇ — உடைக்குமேலணியும் அணிகலங்களாலே அதுபொலிவுபெறும்படி தாழ்வின்றுகவுடுத்து,

புணர்ந்து துஞ்சி எழுந்து உருவினையாகி மார்பிலே பிரசமும் மூசுவனவும் மொய்ப்ப விளக்கம் தொடியொடுசுடர்வரக் கலிங்கத்தைக் கவைஇ யெனமுடிக்க.

வரு புனற் கற்சிறை கடுப்ப இடையறுத்து ஒன்னார் ஓட்டிய செருப் புகல் மறவர்— மிக்குவருகின்ற யாற்றுநீரிடத்துக் கல்லணைநின்று தாங்கினாற்போலத் தம்படையைக்கெடுத்து மிக்குவருகின்ற பகைவர்படையை நடுவேதவிர்த்து அவரைக் கெடுத்த போரைவிரும்பும் படைத்தலைவர்,

* "வருவிசைப் புனலைக் கற்சிறை போல, வொருவன் றாங்கிய பெருமை யானும்" என்னும் வஞ்சித்துறை கூறினார். இதுகூறவே முன்னர் மாராயம்பெற்றவர்களே இப்போரைச்செய்வரென்பது ஆண்டுப் பெற்றாமாகலின், இவர்கள் ஏனாதிப்பட்டமுதலிய சிறப்புப்பெற்ற படைத்தலைவரென்பது பெற்றாம்.

வாள் வலம் புணர்ந்த நின் தாள் வலம் வாழ்த்த— வாள்வெற்றியைப் பொருந்தின நினது முயற்சியின்வெற்றியை வாழ்த்த,

வில்லைக் கவைஇக் கணை தாங்கு மார்பின் மா தாங்கு எறுழ்த் தோள் மறவர்த் தம்மின் — வில்லை நிரம்பவலிக்கையினாலே தன்னுள்ளேயடக்கிக்கொண்ட அம்பின் விசையைத்தாங்கும் மார்பினையுங் குதிரையைச்செலுத்தி வேண்டுமளவிலே பிடிக்கும் வலியையுடைய தோளினையுமுடைய வீரரைக்கொணர்மின்;

தம்மின் - முன்னிலை முற்றுவினைத்திரிசொல். இது தும்பையிற் † குதிரைநிலை கூறிற்று. கணைதாங்குமார்பு கூறவே கணை துணையுறமொய்த்தலுங் கூறிற்று.

கல் இடித்து இயற்றிய இட்டு வாய்க் கிடங்கின் நல்லெயில் உழந்த செல்வர்த் தம்மின்—கற்றறையைப் பொளிந்துபண்ணின இட்டிதாகிய நீர்வரும்வாயையுடைய கிடங்கினையுடைய முழுமுதலரணத்தேநின்று வருந்தின வீரச்செல்வத்தையுடையாரைக் கொணர்மின்;

இஃது ‡ "ஊர்ச்செரு வீழ்ந்த மற்றதன் மறனும்" என்னும் புறத்துழிஞைத்துறை கூறிற்று.

கொல் ஏற்றுப் பைந்தோல் சீவாது போர்த்த மாக் கண் முரசம் ஓவில கறங்க— மாறுபாட்டையேற்றுக் கோறற்றொழிலையுடைய ஏற்றினது செவ்வித்தோலை மயிர் சீவாமற்போர்த்த பெரிய கண்ணையுடையமுரசம் மாறாமனின்று ஒலியாநிற்க,

எரி நிமிர்ந்தன்ன தானை நாப்பண் பெருநல் யானை போர்க்களத்து ஒழிய விழுமிய வீழ்ந்த குரிசிலர்த் தம்மின்—நெருப்புநடந்தாற்போன்ற பகைவர்படைக்குநடுவே சென்று பெரிய நல்ல யானையைப் போர்க்களத்தே படவெட்டிச் சீரிய புண்ணினால்வீழ்ந்த தலைவரைக் கொணர்மின்;

இது § "களிறெதிர்ந் தெறிந்தோர் பாடு" என்னும் தும்பைத்துறை கூறிற்று. பாடு, பெருமையாகலின் அதுதோன்ற ஈண்டுக் குரிசிலென்றார்.

---

* தொல்காப்பியம், பொருளதிகாரம், புறத்திணையியல், அ.
† „ „ „ கஎ.
‡ „ „ „ கங.
§ „ „ „ கஎ.

முறை கருதுபு (௭௩௮)—முன்னுள்ளோர் காத்தமுறைமையை நாளும் உட்கொண்டு,

புரையோர்க்கு—நட்பிற் குற்றந்தீர்ந்தோர்பொருட்டு,

[தொடுத்த பொலம்பூந் தும்பை, நீர்யா ரென்னாது முறைகருதுபு சூட்டி:]

தொடுத்த பொலம் பூந்தும்பை சூட்டி—கட்டப்பட்ட பொன்னாற்செய்த பூவினையுடைய தும்பையைச்சூட்டி ஏவுகையினாலே,

நான்காமுருபு ஈண்டு அதற்பொருட்டு.

காழ் மண்டு எஃகமொடு கணை அலைக் கலங்கி—காம்பு குழைச்சினுள்ளேசெருகின வேல்களுடனே அம்புகளுஞ்சென்று நிலைகுலைத்தலின் நிலைகலங்கி,

[பிரிபிணை யரிந்த நிறஞ்சிதை கவயத்து, வானத் தன்ன வளநகர் பொற்ப, நோன்குறட் டன்ன வூன்சாய் மார்பி, னுயர்ந்த வுதவி யூக்கலர்த் தம்மின்:]

பிரிபு இணை அரிந்த நிறம் சிதை கவயத்து ஊன் சாய்—பலவாய்ப் பிரிந்திணைந்த சந்துவாய்களற்ற பழையநிறங்கெட்ட கவயத்தோடே ஊன்கெட்ட,

நோன் குறட்டன்ன மார்பின்—வலிய சகடையிற்குறட்டையொத்த மார்பினையுடையராகிய ஊக்கலரென்க (௭௪௩).

வேலும் அம்பும்பட்டு எங்கும் உருவிநிற்றலிற் குறடும் அதிற்றைத்த உருளிகளும் போன்றன மார்புகள். குறடு பட்டடைமரமுமாம்.

வானத்தன்ன வளநகர் பொற்ப உயர்ந்த உதவி ஊக்கலர்த் தம்மின்—தேவருலகையொத்த செல்வத்தையுடைய ஊர்கள் முன்புபோலே நட்புக்கொண்ட அகத்துழிஞையோராளும்படி உயர்ந்த உதவியைச்செய்த முயற்சியையுடையாரைக் கொணர்மின்;

என்றது-தமக்குநட்பாய் முற்றகப்பட்டோரை முற்றுவிடுவித்தற்குத் தாமேயுதவலின், மைந்துபொருளாகச்சென்று அம்முற்றுவிடுவித்து அவ்வூரை அவர்க்கு மீட்டுக்கொடுத்தமை கூறிற்று. இதனானே உழிஞைப்புறத்துத் தும்பைகூறினார்; என்னை? * "கணையும் வேலுந் துணையுற மொய்த்தலிற், சென்ற வுயிரி னின்ற யாக்கை" கூறுதலானும் வளநகர் பெறும்படி உயர்ந்தவுதவிசெய்தமை கூறுதலானும்.

நிவந்த யானைக் கணநிரை கவர்ந்த புலர்ந்த சாந்தின் விரவுப் பூந்தெரியற் பெருஞ் செய் ஆடவர்த் தம்மின்—உயர்ந்த யானைத்திரளின்ஒழுங்குகளைக் கைக்கொண்ட பூசிப்புலர்ந்தசாந்தினையும், விரவுதலையுடைய வியன்பூமாலையினையும், பெரியசெய்கைகளையுமுடைய மண்டலங்களையாள்கின்றவரைக் கொணர்மின்;

[பிறரும், யாவரும் வருக வேனோருந் தம்மென, வரையா வாயிற் செறுஅது:]

ஏனோரும் தம்மென வரையா—மண்டபத்தாரையும், அறங்கூறவையத்தாரையுங் கொணர்மினென வரைந்துகூறி,

வாயில் செறாஅது பிறரும் யாவரும் வருக என—வாயிலிடத்துத் தகையாமல் இவர்களைப்போல்வாரும் படையாளர்முதலியோரும் வருவாராகவெனக் கூறி,

இருந்து—இங்ஙனம் எளியையாயிருந்து,

---

* தொல்காப்பியம், பொருளதிகாரம், புறத்திணையியல், ௧௬.

[பாணர் வருக பாட்டியர் வருக, யாணர்ப் புலவரொடு வயிரியர் வருகென:] யாணர்ப் புலவரொடு பாணர் வருக பாட்டியர் வருக வயிரியர் வருக என—கவியாகிய புதுவருவாயினையுடைய புலவரோடே பாணர் வருவாராக, பாணிச்சியர் வருவாராக, கூத்தர் வருவாராகவென அழைத்து,

[இருங்கிளை புரக்கு மிரவலர்க் கெல்லாங், கொடிஞ்சி நெடுந்தேர் களிற்றொடும் வீசி:]

இருங்கிளை புரக்கும் இரவலர்க்கு எல்லாம் நீர் யாரென்னாது (௭௬௮) கொடிஞ்சி நெடுந்தேர் களிற்றொடும் வீசி—அவர்கள் சுற்றத்தாராய் அவர்கள்பாதுகாக்கும் பெரிய இரவலர்க்கெல்லாம் நீர்யாவரென்று அவர்களைக்கேளாதே அவர்கள்காட்டின அளவைக்கொண்டு கொடிஞ்சியையுடைய நெடியதேர்களை யானைகளோடுங் கொடுத்து,

கொடிஞ்சி - தாமரைப்பூவாகப்பண்ணித் தேர்த்தட்டின்முன்னே நடுவது.

களந்தோறும் கள்ளரிப்ப—இடந்தோறுங் கள்ளையரிப்ப,

மரந்தோறும் மை வீழ்ப்ப— மரத்தடிகடோறும் செம்மறிக்கிடாய் படுப்ப,

நிண ஊன் சுட்டு உருக்கு அமைய—நிணத்தையுடைய தசைகள் சுடுதலாலே அந்நிணம் உருகுதல்பொருந்த,

நெய் கனிந்து வறை ஆர்ப்ப—நெய் நிறையப்பெற்றுப் பொரிக்கறிகளாரவாரிப்ப,

குருஉக் குய்ப் புகை மழை மங்குலிற் பரந்து தோன்ற—நிறத்தையுடைய தாளிப்பிலெழுந்த புகை மழையையுடைய திசைகள்போலே பரந்து தோன்றப்பட்டு,

வியன் நகரால்—அகற்சியையுடைய வீடுகளாலே மிக்குப்புகழெய்திய மதுரை (௬௯௯) யென முன்னேகூட்டுக.

நகர் - வீடுகள்.

அரிப்ப வீழ்ப்ப அமைய ஆர்ப்பத் தோன்றப்பட்டு அகற்சியையுடைய வென உடைமையொடு முடிக்க.

[பல்சாலை முதுகுடுமியி, னல்வேள்வித் துறைபோகிய, தொல்லாணை நல்லாசிரியர், புணர்கூட் டுண்ட புகழ்சால் சிறப்பின்:]

நல் வேள்வித் துறை போகிய—நல்ல யாகங்கட்குக்கூறிய துறைகளெல்லாம் முன்னர் முற்றமுடித்துவிட்ட,

தொல்லாணை நல்லாசிரியர் புணர் கூட்டு உண்ட—பழைய ஆணைகளையுடைய நல்லஆசிரியர் தாங்கள் பின்புகூடின கந்தழியாகிய கொள்கையை அவரிடத்தே பெற்று அனுபவித்த,

புகழ் சால் சிறப்பிற் பல்சாலை முதுகுடுமியின்—புகழ்ச்சியமைந்த தலைமையினையுடைய பல்யாகசாலை முதுகுடுமிப்பெருவழுதியைப்போலே நீயும் நல்லாசிரியரிடத்தே கேட்டிசின் (உ0௮) என முன்னேகூட்டுக.

என்றது - அந்தணர்க்குக்கூறியமுறையே முன்னுள்ள கருமங்களைமுடித்துப் பின்னர்த் தத்துவங்களையாராய்ந்து மெய்ப்பொருளுணர்ந்து வீட்டின்பமெய்திய ஆசிரியரிடத்தே தானும் அம்முறையேசென்று வீட்டின்பத்தைப்பெற்ற குடுமியென்றவாறு.

நிலம் தரு திருவின் நெடியோன் போல—எல்லாநிலங்களையும் தன்னிடத்தே காட்டின பெருஞ்செல்வத்தையுடைய மாயோனைப்போலத் தொல்லாணையையுடைய நல்லாசிரியர் (௭௬௧) என முன்னேகூட்டுக.

என்றது - கண்ணன் எப்பொருளும் தானாயிருக்கின்றபடியைக் காட்டி ஸ்ரீ கீதையருளிச்செய்து எல்லாரையும் போதித்தாற்போல எல்லாரையும்போதிக்கவல்லராகிய ஆசிரியரென்றவாறு.

ஆணை - ஆக்கினை.

[வியப்புஞ் சால்புஞ் செம்மை சான்றோர், பலர்வாய்ப் புகரறு சிறப்பிற் றோன்றி:]

வியப்பும்—நீ அவ்வாசிரியரிடத்துப்பெற்ற கந்தழியின் அதிசயமும்.

சால்பும்—பின்பு பெற்றமைந்த அமைதியும்,

புகர் அறு சிறப்பிற் செம்மை சான்றோர் பலர் வாய்த் தோன்றி—குற்றமற்ற சிறப்புக்களையுடைய தலைமைகளெல்லாம் அமைந்தோர்பலரும் தம்மிலிருந்து சொல்லப்பட்டு,

பலர்வாயென்பதனோடும் பின்வரும் புகரறுசிறப்பைக் கூட்டுக. புகரறுசிறப்பிற் செம்மையாவன * "நாலிரு வழக்கிற் றாபத பக்கமும்" என்புழிக் கூறப்பட்டவை.

அரிய தந்து—இவ்விடத்திற்கு அரியவாய் வேற்றுப்புலத்திலுள்ள பொருள்களைக் கொணர்ந்து எல்லார்க்குங்கொடுத்து,

குடி அகற்றி—நின்னாட்டில்வாழுங் குடிமக்களைப் பெருக்கி,

என்றது செல்வமுண்டாக்கியென்றதாம்.

பெரிய கற்று—நற்பொருள்களை விளங்கக்கூறிய நூல்களைக் கற்று,

இசை விளக்கி—நின்புகழை எவ்வுலகத்தும் நிறுத்தி,

முந்நீர் நாப்பண் ஞாயிறு போலவும்—கடனடுவேதோன்றுகின்ற ஞாயிற்றையொக்கவும்,

பல் மீன் நடுவண் திங்கள் போலவும்—பலமீன்களுக்குநடுவே தோன்றுகின்ற நிறைமதியைப்போலவும்,

பூத்த சுற்றமொடு பொலிந்து இனிது விளங்கி—நீ பொலிவுபெற்ற சுற்றத்தாருடனே பொலிவுபெற்று இனிதாகவிளங்கி,

மண்டிலமாக்கள் தண்டத்தலைவர் முதலிய சுற்றத்தோர்க்குநடுவே ஞாயிறுபோலவிளங்கிப் பலகலைகளைக் கற்றோரிடத்தே மதிபோலவிளங்கியென்க.

பொய்யா நல்லிசை நிறுத்த புனை தார்ப் பெரும்பெயர் மாறன் தலைவனாக—உண்மையான நல்லபுகழை உலகிலேநிறுத்தின கைசெய்த மாலையினையும் பெரிய பெயரினையுமுடைய மாறன்முதலாக,

மாறன் - இவன்குடியிலுள்ள பாண்டியன்; அன்றி ஒருகுறுநிலமன்னனென்றலுமொன்று.

கடந்து அடு வாய் வாள் இளம் பல் கோசர்—பகைவரை வென்றுகொல்லுந் தப்பாதவாளினையுடைய இளைய பலராகியகோசரும்,

[இயனெறி மரபினின் வாய்மொழி கேட்பப், பொலம்பூ ணைவ ருட்படப் புகழ்ந்த, மறமிகு சிறப்பிற் குறுநில மன்ன, ரவரும் பிறரும்:]

புகழ்ந்த பொலம் பூண் ஐவர் உட்பட— எல்லாரும் புகழப்பட்ட பொன்னாற்செய்த பேரணிகலங்களையுடைய ஐம்பெருங்கேளிருமுட்பட,

---

* தொல்காப்பியம், பொருளதிகாரம், புறத்திணையியல், உ0.

மறம் மிகு சிறப்பிற் குறுநிலமன்னர் அவரும்—மறமிக்க தலைமையினையுடைய குறுநிலமன்னராகிய அவரும்,

பிறரும்—கூறுதொழிந்தோரும்,

இயல் நெறி மரபின் நின் வாய் மொழி கேட்ப—நடக்கின்ற நெறிமுறைமையினாலே நின்னுடைய உண்மையானமொழியைக் கேட்டு அதன்வழியே நடக்க,

[துவன்றிப் பொற்பு, விளங்கும் புகழவை நிற்புகழ்ந் தேத்த:] பொற்பு விளங்கும் புகழ் அவை துவன்றி நிற் புகழ்ந்து ஏத்த—பொலிவுவிளங்குகின்ற புகழினையுடைய அறங்கூறவையத்தார் நெருங்கி நின்னுடைய அறத்தின்றன்மையைப் புகழ்ந்து வாழ்த்த,

[விளங்கிழை மகளிர் பொலங்கலத் தேந்திய, மணங்கமழ் தேறன் மடுப்ப நாளு, மகிழ்ந்து:]

விளங்கிழை மகளிர் பொலம் கலத்து ஏந்திய மணம் கமழ் தேறல் மடுப்ப மகிழ்ந்து—விளங்குகின்ற பூணினையுடையமகளிர் பொன்னாற்செய்த வட்டில்களிலேயெடுத்த மணநாறுகின்ற காமபானத்தைத்தர அதனையுண்டு மகிழ்ச்சியெய்தி மகளிர்தோள் புணர்ந்து (௭௧௨) என முன்னேகூட்டுக.

நாளுமென்பதனைப் பின்னேகூட்டுக. மணங்கமழ்தேறலென்றதனாற் காமபானமாயிற்று.

[இனி துறைமதி பெரும, வரைந்துநீ பெற்ற நல்லூ ழியையே:] பெரும நல்லூழியை வரைந்து நீ பெற்ற நாளும் இனிது உறைமதி—பெருமானே, நன்றாகிய ஊழிக்காலத்தை இத்துணைக்காலமிருத்தியெனப் பால்வரைதெய்வத்தாலே வரையப்பட்டு நீ அறுதியாகப்பெற்ற நாண்முழுதும் இனிதாக இருப்பாயென்க.

நல்லூழியென்றார், கலியூழியல்லாத ஊழியை. உம்மை - முற்றும்மை.

உயர்ந்தோர்மருகனே (உ௩), நெடியோனும்பலே (௬௧), பொருநனே (௪௨), கொற்றவனே (௮௮), வெல்கோவே (௧0௫), புகழ்வேந்தே (௧௩0), நசைப்பொருநனே (௧௩௮), போரேறே (௧௪௪), குரிசிலே (௧௫௧), நீகொற்றவர்தங்கோனாகுவை(௭௪), வாய்நட்பினை (௧௯௮), பணிந்தொழுகலை (௨0௧), பழிநமக்கெழுகவென்னாய் (௨0௪), இசைவேட்குவை (௨0௫), அன்னாய் (௨0௬), நின்கொற்றம் (௧௯௪) பிறையிற் (௧௯௩) சிறக்க (௧௯௪), நின்தெவ்வராக்கம் (௧௯௬) மதியிற்(௧௯௫) கெடுக (௧௯௬), நின்நல்லிசை கெடாதுநிலைஇயர் (௨0௯), இனி நீ பாடல்சான்ற நன்னாட்டுநடுவணதாய் (௩௩௧) இருபெருநியமத்து (௩௬௫) நாளங்காடிக்கம்பலை (௪௩0) நாடார்த்தன்றேயாய் (௪௨௮) அல்லங்காடி அழிதருகம்பலை (௫௪௪) புள்ளிசையெழுந்தற்றேயாய் (௫௪௩) ஞாயிறு (௫௪௬)குன்றஞ்சேருகையினாலே (௫௪௭) மாலை (௫௫௮) புகுந்து (௫௫௭) பின்னர் நீங்க (௫௫௮) முந்தையாமஞ் சென்றபின்றை (௬௨0) மற்றைப் (௬௫௩) பானாட்கொண்ட கங்குல் (௬௩௧) யாமத்தையும் மற்றை (௬௫௩) இடையதாகிய (௬௩௧) கடவுள்வழங்குங்கங்குல் (௬௫௧) யாமத்தையும் பகலுறக்கழிப்பிப் (௬௫௩) பாடப் (௬௫௬) பண்ணக் (௬௫௮) கைப்பத் (௬௫௯) தெவிட்ட (௬௬0) உறுப்ப (௬௬௧) நுவலக் (௬௬௨) கரையத் (௬௬௭) தோன்ற (௬௬௯) வாழ்த்த நுவல (௬௭0) இசைப்ப (௬௭௧) இரங்கச் சிலைப்ப (௬௭௨) இயம்பக் (௬௭௩) கரைய அகவ (௬௭௫) முழங்கக் (௬௭௬) குழுமச் (௬௭௭) சீப்ப (௬௮௫) இராக்காலந் தன்னிடத்தினின்றும்போகின்ற வைகறையிலே (௬௮௬) வளங்கெழு தாரத்தோடே (௬௯௭) யானையும்(௬௮௮) புரவியும் (௬௮௯) ஆயமும்(௬

தோட்டியுங் (௬௯௩) கலமும்மனைத்தும் (௬௯௫) கங்கையாறுகடற்படர்ந்தாங்கு (௬௯௬) அளந்து கடையறியாத (௬௯௭), கவினிப் (௬௯௮) புகழெய்திய (௬௯௯), பெரும்பாணிருக்கையினையும் (௩௪௨), கிடங்கினையும் (௩௫௧), புரிசையினையும் (௩௫௨), வாயிலினையு (௩௫௬) முடைய நான்மாடத்தான் மலிந்தபுகழைக்கூடுதலையுடைய (௪௨௯) மதுரையிலே (௬௯௯) மகளிர் தேறன்மடுப்ப (௭௮௦) மகிழ்ந்து (௭௮௧) மகளிர்நறுந்தோளைப்புணர்ந்து (௭௧௨) சேக்கைத்துஞ்சி (௭௧௩) யெழுந்து (௭௧௪) உருவினையாகி (௭௨௪) மார்பிலே (௭௧௬) பிரசமும் மூசுவனவுமொய்ப்ப (௭௧௭) விளக்கந் (௭௧௯) தொடியொடுசுடர்வரக் (௭௨௦) கலிங்கத்தைக் (௭௨௧) கவைஇ (௭௨௨) மறவர் (௭௨௬) தாள்வலம் வாழ்த்த (௭௨௭) மாறன்முதலாகக் (௭௭௨) கோசரும் (௭௭௩) ஐவருமுட்படக் (௭௭௫) குறுநிலமன்னராகிய (௭௭௬) அவரும்பிறரும் (௭௭௭) நின்வாய்மொழிகேட்ப (௭௭௪) நிற்புகழ்ந்தேத்த (௭௭௮) மறவர்த்தம்மின் (௭௨௯), செல்வர்த்தம்மின் (௭௩௧), குரிசிலர்த்தம்மின் (௭௩௬), ஊக்கலர்த்தம்மின் (௭௪௩), பெருஞ்செயாடவர்த்தம்மின் (௭௪௬), ஏனோருந் தம்மெனச் (௭௪௭) சிலரைவரைந்துகூறி (௭௪௮) வாயிலிடத்துத் தகையாமற்(௭௪௮) பிறரும் (௭௪௬) யாவரும் வருகவெனப் பொதுப்படக்கூறி (௭௪௭) நாளோலக்கமிருக்குமண்டபத்தேயிருந்து (௭௪௮) புலவரொடு (௭௫௦) பாணர்வருக, பாட்டியர்வருக (௭௪௯), வயிரியர் வருகவெனவழைத்து (௭௫௦) அவர்காட்டின இரவலர்க்கெல்லாம் (௭௫௧) நீர்யாரென்னாதே (௭௩௮) தேரைக் களிற்றொடுவீசி (௭௫௨) அரியதந்து குடியகற்றிப் (௭௬௬) பெரியகற்று இசைவிளக்கி (௭௬௭) ஞாயிறுபோலவுந் (௭௬௮) திங்கள்போலவுஞ் (௭௬௯) சுற்றமொடு பொலிந்து விளங்கி (௭௭௦) வாழி (௨௦௮); அங்ஙனம் வாழ்ந்து பிறப்பற முயலாது பயனின்றிக்கழிந்தோர் (௨௩௭) திரையிடுமணலினும் பலரேகாண் (௨௩௬), அப்பயனின்மையாலே (௨௩௮) அண்ணலே (௨௦௭) நீயும் அவ்வாறுகழியலாகாதென்று இவ்வாழ்விற்பெரிதாயிருப்பதொரு பொருளை யான்கூறுவேன் (௨௦௭); அஃது என்னாற்காட்டுதலரிது; அதனை நெடியோன்போலத் (௭௬௩) தொல்லாணையினையுடைய நல்லாசிரியர் (௭௬௧) புணர்கூட்டுண்டசிறப்பினை (௭௬௨) யுடைய பல்யாகசாலைமுதுகுடுமியைப்போல (௭௫௯) நல்லாசிரியரிடத்தே கேட்டிசின் (௨௦௮); கேட்டு அதனைநீகண்டவியப்பும் சால்பும் (௭௬௪) புகாறுசிறப்பிற்(௭௬௫)செம்மைசான்றோர் (௭௬௪) பலர் தம்மிலிருந்து சொல்லப்பட்டுப்(௭௬௫) பெருமானே (௭௮௧), நன்றாகிய ஊழிக்காலத்தை இத்துணைக்காலமிருத்தியெனப் பால்வரைதெய்வத்தாலே வரையப்பட்டு நீஅறுதியாகப்பெற்ற (௭௮௨) நாண்முழுதும் (௭௮௦) இனிதாகப் பேரின்பத்தை நுகர்ந்திருப்பாய் (௭௮௧); அதனைநுகராது ஐம்பொறிகட்கு முன்னிற்கப்படுவனவாகிய இந்நுகர்பொருள்கட்கு நின்னொடு என்னவுறவுண்டு (௨௦௬); இனி நின்னிடத்துண்டாகிய மாயைகெடுவதாக (௨௦௮) வெனமாட்டேறுப்பானும் எச்சவுறுப்பானும் வினைமுடிக்க.

* "அகன்றுபொருள் கிடப்பினு மணுகிய நிலையினு, மியன்றுபொருள் முடியத் தந்தன ருணர்த்தன், மாட்டென மொழிப பாட்டியல் வழக்கின்." † "சொல்லொடுங் குறிப்பொடு முடிவுகொ ளியற்கை, புல்லிய கிளவி யெச்ச மாகும்." என்னுஞ்சூத்திரங்களாற் கூறிய இலக்கணம் ‡ "நல்லிசைப் புலவர் செய்யு ளுறுப்பு" எனத் தொல்காப்பியனார் கூறினமையின், இவரும் நல்லிசைப்புலவராதலின், இங்ஙனம் செய்யுள்செய்தாரென்றுணர்க.

---

* தொல்காப்பியம், பொருளதிகாரம், செய்யுளியல், உ௧௧.
† ,, ,, ,, உ௦௭.
‡ ,, ,, ,, ௧.

தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனை மாங்குடிமருதனார்பாடிய மதுரைக்காஞ்சிக்கு மதுரை ஆசிரியர் பாரத்துவாசி நச்சினார்க்கினியர் செய்தவுரை முற்றிற்று.

வெண்பா.

க பைங்க ணிளம்பகட்டின் மேலானைப் பான்மதிபோற்
றிங்க ணெடுங்குடையின் கீழானை—யங்கிரந்து
நாம்வேண்ட நன்னெஞ்சே நாடுதிபோய் நானிலத்தோர்
தாம்வேண்டுங் கூடற் றமிழ்.

உ சொல்லென்னும் பூம்போது தோற்றிப் பொருளென்னு
நல்லிருந் தீந்தாது நாறுதலான்—மல்லிகையின்
வண்டார் கமழ்தாம மன்றே மலையாத
தண்டாரான் கூடற் றமிழ்.